தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com



MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan

PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337



CHENNAI | Volume- 3 | Issue:232 | 08-03-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

08.03.2026 மாசி 24
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.26

திதி:
இன்று இரவு 10.01 வரை பஞ்சமி பின்பு சஷ்டி.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 2.19 வரை சுவாதி பின்பு விசாகம்

யோகம் :
இன்று காலை 7.49 வரை துருவம் பின்பு வ்யாகாதம்.

கரணம்
இன்று காலை 9.09 வரை கௌலவம் பின்பு இரவு 10.01 வரை தைதுலம் பின்பு கரசை.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.25 வரை அமிர்த யோகம் பின்பு பிற்பகல் 2.19 வரை சித்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

சந்திராஷ்டமம் :
இன்று பிற்பகல் 2.19 உத்திரட்டாதி பின்பு ரேவதி.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 3.30 – 4.30.

இராகு காலம்
காலை 9.00 – 10.30.

எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30.

இன்று சுபமுகூர்த்த நாள்

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# பாஜகவின் கட்டுப்பாட்டில் அதிமுக சென்றுவிட்டது

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



**மதுரை, மார்ச்.7:**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே ராயப்பாளையத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் திமுகவில் இணையும் விழா நடந்தது. முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில், ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கானோர் இணைந்தனர். இவ்விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு பேசியதாவது;

தாமதமாக இருந்தாலும் தாய் கழகத்திற்கு திரும்பியுள்ளார் ஓபிஎஸ். சில காலத்திற்கு முன்பு வரை ஓபிஎஸ் இங்கு இருப்பார் என அவரே எதிர்பார்த்திருக்கமாட்டார். தாய் மடிக்கு நீங்கள் திரும்பியுள்ளீர்கள். எம்ஜிஆருக்கு நீங்கள் மட்டுமல்ல நானும் ரசிகன்தான். கழகம் எம்ஜிஆரை வளர்த்தது, அவரும் கழகத்தை வளர்த்தார். இந்த மேடை மிக வித்தியாசமான மேடை.

ஓ.பன்னீர்செல்வம் என்றால் நினைவுக்கு வருவது விசுவாசம். எடப்பாடி பழனிசாமி என்றால் நினைவுக்கு வருவது துரோகம். பாஜகவின் கட்டுப்பாட்டில் அதிமுக சென்றுவிட்டது. அதிமுக கூட்டணி அல்ல, என்.டி.ஏ. கூட்டணி என்றுதான்பிரமதரே சொல்கிறார். இதை பார்த்துவிட்டு தான் ஓ.பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்துள்ளார்.

பீகார் முதல் மந்திரி நிதிஷ்குமாரை பாஜக பந்தாடிவிட்டது. நிதிஷ்குமார் பதவி விலகும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. தேர்தல் முடிந்தவுடன் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து எடப்பாடி பழனிசாமி நீக்கப்படுவார். நிதிஷ்குமாருக்கு ஏற்பட்டுள்ள நிலைதான் எடப்பாடி பழனிசாமிக்கும் ஏற்படப் போகிறது.

தென் மாவட்டங்களில் வளர்ச்சி இல்லை என்ற நிலையை திமுக மாற்றியுள்ளது. மதுரைக்கு 6,000 கோடி ரூபாய்க்கு சிறந்த உட்கட்டமைப்பு திட்டங்களை செய்துள்ளோம். பார்த்துப்பார்த்து திட்டம் தீட்டி மக்களுக்கு கொடுத்தால் அது திமுக. மக்களிடமிருந்து பணம் பறித்தால் அது பாஜக. அறிவித்து 10 ஆண்டுகள் ஆகியும் எய்ம்ஸ் மருத்துவமனையை அவர்களால் கட்டி முடிக்க முடியவில்லை.

அனைவரும் கடுமையாக உழையுங்கள். நாம் 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற வேண்டும். உங்கள் உழைப்புக்கு ஏற்ற அங்கீகாரம் வழங்கப்படும். வெல்வோம் ஒன்றாக. நன்றி."இவ்வாறு அவர் பேசினார்.

இவ்விழாவில் ஓ.பன்னீர்செல்வம் பேசியது:

"என்னுடைய 50 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் நான் ஏற்றுக் கொண்ட தலைமைக்கு விசுவாசமாகவும், கொண்ட கொள்கைக்கு நேர்மையாகவும், கொடுத்த பணிக்கு மனசாட்சியாகவும் நன்றியுடன் பணியாற்றி வந்துள்ளேன். நான் இருந்த இயக்கத்தில் எனக்கென்று ஒரு தனி அணியை உருவாக்க எண்ணியதில்லை. கட்சியின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு என் கடமையை ஆற்றி வந்திருக்கிறேன்.

எம்ஜிஆரால் தொடங்கப்பட்ட அதிமுக இன்று, அதிமுகவாக இல்லை. தொண்டர்கள்தான் தலைமையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற திருத்தக்கூடாத கட்சி விதிகளை திருத்தனர். தொண்டர்கள் உரிமைகள் பறித்தனர்.

ஜெயலலிதா வழிநடத்திய, வளர்த்த அதிமுக இன்று இல்லை. தனக்கான, தனது பதவியை மட்டுமே குறியாக கொண்ட ஒருவரின் சுயநல அரசியலால் எம்ஜிஆர் உருவாக்கிய அதிமுக இன்று அபகரிப்பு திமுகவாக மாறிவிட்டது.

பெரியாரின் திராவிட சிந்தாந்ததிற்கு எதிராகவும், அண்ணாவின் சமூக நீதிக்கு முரணாகவும் செயல்பட்டு வருகிறது. பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்க சட்டப் போராட்டங்களை நடத்தினேன். தலைமைக்கு உண்மையாக உழைத்திற்கும், விசுவாசமாக நடந்து கொண்டதிற்காகவும் குறுக்கு வழியில் வந்தவர்களால் நான் எப்படியெல்லாம் பழிவாங்கப்பட்டேன் என்பது அனைவருக்கும் தெரியும்.

இவ்விழாவில் நான் நடத்தி வந்த அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு கழகத்தையும் அண்ணா கண்ட திமுவுடன் இணைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். தாய் கழகத்தில் இணைந்ததை பெருமையாக கருதுகிறேன இவ்விழாவில் ஓ.பன்னீர்செல்வம் பேசியது:

"என்னுடைய 50 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் நான் ஏற்றுக் கொண்ட தலைமைக்கு விசுவாசமாகவும், கொண்ட கொள்கைக்கு நேர்மையாகவும், கொடுத்த பணிக்கு மனசாட்சியாகவும் நன்றியுடன் பணியாற்றி வந்துள்ளேன். நான் இருந்த இயக்கத்தில் எனக்கென்று ஒரு தனி அணியை உருவாக்க எண்ணியதில்லை. கட்சியின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு என் கடமையை ஆற்றி வந்திருக்கிறேன்.

இவ்விழாவில் நான் நடத்தி வந்த அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு கழகத்தையும் அண்ணா கண்ட திமுவுடன் இணைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். தாய் கழகத்தில் இணைந்ததை பெருமையாக கருதுகிறேன்.

கருணாநிதியின் தமிழ்மொழி பற்றையும், அரசியல் ஞானத்தையும், ஜெயலிதாவின் வேகத்தையும் ஒருங்கே பெற்றுள்ள ஸ்டாலினை தமிழகம் மட்டுமில்லாது இந்திய திருநாடே இன்று பாராட்டுகிறது என்றார்.

# மம்தா அரசு அனைத்து வரம்புகளையும் மீறி விட்டது

## பிரதமர் மோடி கடும் சாடல்





**கொல்கத்தா, மார்ச்.8:**

மேற்கு வங்கத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையைத் தொடர்ந்து, திரிணமூல் காங்கிரஸ் அரசை பிரதமர் நரேந்திர மோடி கடுமையாகச் சாடியுள்ளார்.

சிலிகுரியில் நடைபெற்ற 9-வது சர்வதேச சாந்தல் மாநாட்டில் பங்கேற்கக் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வருகை தந்திருந்தார். இந்த நிகழ்ச்சியின் போது, மாநாடு நடைபெற வேண்டிய இடத்தைத் திரிணமூல் காங்கிரஸ் அரசு கடைசி நேரத்தில் மாற்றியதாகவும், குடியரசுத் தலைவரை வரவேற்க முதலமைச்சர் மம்தா பானர்ஜியோ அல்லது அமைச்சர்களோ வரவில்லை என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

மேலும், போதிய இடவசதி இல்லாத சிறிய இடத்தில் இந்த மாநாட்டை நடத்தியது குறித்து குடியரசுத் தலைவர் முர்முவே தனது அதிருப்தியை வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார். "மம்தா எனது தங்கை போன்றவர்; அவர் ஏன் கோபமாக இருக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை" என்று அவர் பேசியது அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் மோடி, "இது வெட்கக்கேடானது, இதற்கு முன் நடந்திராதது. ஜனநாயகம் மற்றும் பழங்குடியினச் சமூகங்களின் மேம்பாட்டில் நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரும் இதனால் மனமுடைந்துள்ளனர்.

பழங்குடியினச் சமூகத்தைச் சேர்ந்த குடியரசுத் தலைவரே வெளிப்படுத்தியுள்ள இந்த வலியும் வேதனையும், இந்திய மக்களின் மனதில் மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு வங்கத்தின் திரிணமூல் காங்கிரஸ் அரசு உண்மையிலேயே அனைத்து வரம்புகளையும் மீறிவிட்டது. குடியரசுத் தலைவருக்கு இழைக்கப்பட்ட இந்த அவமதிப்புக்கு அவர்களது நிர்வாகமே பொறுப்பாகும்.

சாந்தல் பண்பாடு போன்ற மிக முக்கியமான ஒரு விஷயம் மேற்கு வங்க அரசால் இவ்வளவு அலட்சியமாகக் கையாளப்படுவது துரதிர்ஷ்டவசமானது.

குடியரசுத் தலைவர் பதவி அரசியலுக்கு அப்பாற்பட்டது, அந்தப் பதவியின் புனிதத்தன்மை எப்போதும் மதிக்கப்பட வேண்டும். மேற்கு வங்க அரசுக்கும் திரிணாமுல் காங்கிரஸுக்கும் நல்ல புரிதல் கிடைக்கும் என்று நம்புவோம்" இவ்வாறு பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியாவின் பணக்காரர்கள் பட்டியல்; முகேஷ் அம்பானி தொடர்ந்து முதலிடம்

**கின்ஷாஷா, மார்ச் 7:**

உலக பணக்காரர்கள் பட்டியலில் அவர் 17-வது இடத்தில் உள்ளார். இதற்கிடையில், ரூ.7.5 லட்சம் கோடி நிகர சொத்து மதிப்புள்ள கவுதம் அதானி குடும்பமும், ரூ.3.2 லட்சம் கோடி நிகர சொத்து மதிப்புள்ள எச்.சி.எல் டெக் தலைவர் ரோஷ்னி நாடார் குடும்பமும் இந்திய பட்டியலில் முறையே 2-வது மற்றும் 3-வது இடங்களில் உள்ளன.

முதல் 10 பில்லியனர்களில் ரோஷ்னி நாடார் மட்டுமே பெண். சீரம் இன்ஸ்டிடியூட் நிறுவனத்தின் சைரஸ் பூனவல்லா (ரூ.3 லட்சம் கோடி) மற்றும் ஆதித்யா பிர்லா குழுமத் தலைவர் குமார் மங்கலம் பிர்லா (ரூ.2.5 லட்சம் கோடி) முறையே 4 மற்றும் 5-வது இடங்களில் உள்ளனர்.

சன் பார்மா நிறுவனத்தின் திலீப் சங்க்வி, விப்ரோ நிறுவனத்துடன் தொடர்புடைய அசிம் பிரேம்ஜி மற்றும் நீரஜ் பஜாஜ் குடும்பம், அசோக் ஹிந்துஜா குடும்பம் மற்றும் டி மார்ட் நிறுவனர் ராதாகிஷன் தமானி ஆகியோர் முறையே 6 முதல் 10-வது இடங்களை பிடித்துள்ளனர்.

இந்தியாவில் இந்த ஆண்டு மொத்த பில்லியனர்களின் எண்ணிக்கை 308-ஐ எட்டியுள்ளது. 2025 பட்டியலுடன் ஒப்பிடும்போது 24 பேர் அதிகரித்துள்ளனர். அதிக பில்லியனர்களைக் கொண்ட நாடுகளில் இந்தியா 3-வது இடத்தில் உள்ளது. சீனா 1,110 பில்லியனர்களுடன் அமெரிக்காவை முந்தி முதலிடத்தை பிடித்துள்ளது. உலகளாவிய பில்லியனர்களின் எண்ணிக்கை 4,000-ஐ தாண்டியுள்ளது.

# மாதம் ரூ.2.500, திருமணத்துக்கு ஒரு பவுன்

## தவெக தலைவர் விஜய்யின் வாக்குறுதி பட்டியல்

**சென்னை, மார்ச் 8:**

தமிழகத்தில் தவெக ஆட்சி அமைந்தவுடன் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.2500 வழங்கப்படும், பெண்களின் திருமணத்துக்கு ஒரு பவுன் தங்கம், அனைத்துப் பேருந்துகளிலும் பெண்களுக்கு இலவசப் பயணம் உள்ளிட்டவை செயல்படுத்தப்படும் என தவெக தலைவர் விஜய் தேர்தல் வாக்குறுதிகளாக அறிவித்துள்ளார்.

சென்னையில்தவெகசார்பில் கொண்டாடப்பட்ட மகளிர் தின விழாவில் அக்கட்சியின் தலைவர் விஜய் வெளியிட்ட வாக்குறுதிகள் விவரம்:* "பெண்கள், குழந்தைகள், முதியோர் நலனில் அக்கறை செலுத்துவதே தவெகவின் அடிப்படை முக்கிய நிலைப்பாடு. அதன்படி அதற்கென தனி இலாகா ஏற்படுத்தப்படும். அந்த இலாகா எனது நேரடி கட்டுப்பாட்டில் இருக்கும்.

*மாதம் ரூ.2,500: தமிழகத்தை இந்தியாவின் நம்பர் 1 மாநிலம் என தம்பட்டம் அடிக்கும் திமுக அரசு, மகளிர் உரிமைத் தொகையாக வெறும் ஆயிரம் ரூபாய் மட்டும் வழங்குகிறது. எனவே, தவெக அரசில் 60 வயது வரை உள்ள அனைத்து குடும்பத் தலைவிகளுக்கும் மாதம் ரூ.2,500 வழங்கப்படும். இதில் மாநில, ஒன்றிய அரசின் ஊழியர்களாக இருக்கும் குடும்பங்களுக்கு மட்டும் விதிவிலக்கு.

*'அன்னபூரணி சூப்பர் சிக்ஸ்' திட்டத்தின் கீழ், ஒவ்வொரு குடும்பத்துக்கும் வருடத்துக்கு 6 கேஸ் சிலிண்டர்கள் கட்டணமின்றி வழங்கப்படும். இது தாய்மார்கள் வயிற்றில் பால் வார்க்கும் திட்டமாக இருக்கும்.

* அண்ணன் சீர் திட்டம் மூலம், பெண்களின் திருமணத்துக்கு ஒரு பவுன் தங்கம், தரமான பட்டு சேலையும் அளிக்கப்படும்.

* ரூ.15 ஆயிரம் உதவி: காமராஜர் கல்வி உறுதி திட்டத்தின் கீழ், 1 முதல் 12-ஆம் வகுப்பு வரை இடைநிற்றலே இல்லாமல் குழந்தைகள் கல்வி கற்க, அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு ரூ.15 ஆயிரம் பொருளாதார உதவி வழங்கப்படும்.



* இப்போது பிங்க் நிற பேருந்துகளில் மட்டும் பெண்களுக்கு இலவச பயணத்திட்டம் உள்ளது. தவெக அரசு அமைந்தால் வெற்றிப் பயணம் திட்டத்தின் படி, அரசுப் போக்குவரத்து கழகத்தின் அனைத்துப் பேருந்துகளிலும் பெண்கள் இலவசமாக பயணிக்கலாம்.

*பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்ய ராணி வேலுநாச்சியார் படை அமைக்கப்படும். சாதாரண உடையில் 500 படைகள் மாநிலம் முழுவதும் கண்காணிப்பில் இருப்பார்கள்.

*பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளை விசாரித்து விரைவாக நீதி வழங்க அஞ்சலையம்மாள் விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

* பொது போக்குவரத்து வாகனங்களில் பயணிக்கும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய எச்சரிக்கை பொத்தான்கள் அமைக்கப்படும்.

* சிசிடிவி கேமராக்கள் இல்லாத இடமே இல்லை என்ற வகையில் ஜீரோ டார்க் ஸ்பாட்டுகள் அமைக்கப்படும்.

*பொதுவிநியோக கடைகள், பள்ளிகள், கல்லூரிகள் விலையில்லா சானிடரி நாப்கின்கள் வழங்கப்படும்.

* சிங்கப்பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் நிலுவையிலுள்ள கடன்களை திரும்ப செலுத்துவதன் மூலமும், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.5 லட்சம் வரை வட்டியில்லா கடன் வழங்கப்படும். இவர்கள் தொழில் தொடங்கினால் 5 லட்சம் ரூபாய் 100% மானியத்தில் வழங்கப்படும்.

* தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் மூலம், தமிழகத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்கமோதிரம், குழந்தைகளுக்கான வரவேற்பு கிட் வழங்கப்படும்" என்பன உள்ளிட்ட வாக்குறுதிகளை விஜய் வெளியிட்டார்.


ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Legal Notice
- Tender Notice
- Society Notice
- Loss of Share
- Merger
- Acquisition
- AFR, UFR, etc.

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

# திருக்குறள் குறள்-552

**வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்**
**கோலொடு நின்றான் இரவு**



ஆட்சிக்குறிய கோலை ஏந்தி நின்ற அரசன் குடிகளைப் பொருள் கேட்டல் , போகும் வழியில் கள்வன் கொடு என்று கேட்பதைப் போன்றது.


## சிந்திக்க ஒரு நொடி



வாழ்க்கையை பந்தயமாக நினைத்து வாழ்பவர்கள் தோல்வி அடைகின்றனர் பயணமாக நினைப்பவர்கள் வெற்றிகரமாக முன்னேறுகின்றனர்.

**ராஜகோபாலன். J**
பெங்களூரு

## மண்டல பூஜையில் நம் வாசவி அம்மன் சிறப்பு அலங்காரத்தில்





**கள்ளக்குறிச்சி, மார்ச்08:**
ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயம் கும்பாபிஷேகம் முடிந்து மண்டல பூஜை 32-ஆம் நாள் சிறப்பு அபிஷேகங்களுடன், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நினைவேத்தியங்களுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, வண்ண பூக்களால் அர்ச்சனைகள் செய்து, பாட்டுகள் பாடி, மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் கலந்துகொண்டு நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மாசி மாதம் சங்கடஹர சதுர்த்தி சிறப்பு வழிபாடு







திருவண்ணாமலை மாவட்டம்கீழ்பென்னாத்தூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் விநாயகப் பெருமானுக்கு மாசி மாதம் சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர்,பன்னீர், சந்தனம், இளநீர், தேன், பஞ்சாமிர்தம் வாசனை திரவியங்கள் அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்காரங்கள், வண்ண பூக்களால் அர்ச்சனைகள் செய்து, பிரசாதம், நெய்வேதியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது . ஏராளமான பக்தர்கள் விநாயகப் பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கபட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## தமிழ்நாடு இ பேப்பர்.காம் வாசகர்கள் சார்பாக சங்கடஹர சதுர்த்தி விசேஷ அபிஷேக ஆராதனைகள்





பரங்கிப்பேட்டை மெயின் ரோடு அருள்மிகு செல்வ விநாயகர் ஆலயத்தில் தமிழ்நாடு இ பேப்பர். காம் வாசகர்கள் சார்பாக சங்கடஹர சதுர்த்தி விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு விநாயகப் பெருமானை மனம், மொழி, மெய்களால் வணங்கி ஆனந்த உணர்வை பெற்றனர்.







## செய்யாறு வட்ட முத்தமிழ் சங்கம் சார்பில் உலக மகளிர் தினம் முன்னிட்டு 3 பேருக்கு சாதனை மகளிர் விருது

### மாவட்ட கல்வி அலுவலர் வழங்கினார்



செய்யாறு வட்ட முத்தமிழ் சங்கத்தின் சார்பில் உலக மகளிர் தினம் முன்னிட்டு 3 பேருக்கு சாதனை மகளிர் விருதினை மாவட்ட கல்வி அலுவலர் சு.செந்தில் முருகன் வழங்கினார் .தலைமை ஆசிரியர் க. ஜெயகாந்தன், சங்கத் தலைவர் கவிஞர் எறும்பூர் கை. செல்வக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**செய்யாறு, மார்ச் 08:**
செய்யாறு வட்ட முத்தமிழ் சங்கம் சார்பில் உலக மகளிர் தினம் முன்னிட்டு நேற்று சாதனை மகளிர்களுக்கு விருது வழங்கும் விழா நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம் முத்தமிழ் சங்கம் சார்பில் உலக மகளிர் தினம் முன்னிட்டு சாதனை மகளிர்களுகு விருது வழங்கும் விழா நேற்று செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

விருது வழங்கும் விழாவிற்கு சங்க நிறுவனத் தலைவர் தமிழ் செம்மல் கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமார் தலைமை தாங்கி,விருது பெறுவோரை அறிமுகம் செய்து வைத்தார். செயலாளர் ம.பழனி வரவேற்றார்.

சங்க ஆலோசகர் பேராசிரியர் கு. கண்ணன், பொருளாளர் க. கோவேந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் புலவர் மெய் . பூங்கோதை ,நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் இரா. தேன்மொழி, தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் ச.கவிதா ஆகிய மூவருக்கு சாதனை மகளிர் விருதினை முதன்மை விருந்தினர் மாவட்ட கல்வி அலுவலர் சு. செந்தில் முருகன் வழங்கிப் பேசினார். சிறப்பு விருந்தினர் தலைமையாசிரியர் க ஜெயகாந்தன் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

துணைத் தலைவர்கள் எம். சுந்தரமூர்த்தி, ச .மோதிலால், துணை செயலாளர் ஜே. பாபு ,செயற்குழு உறுப்பினர் எச். முபாரக் உள்ளிட்ட சங்க உறுப்பினர்கள், மாணவ ,மாணவியர்கள் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## மகளிர் தினம் விழா கொண்டாட்டம்






**திருவண்ணாமலை, மார்ச் 08:**
திருவண்ணாமலை மாவட்டம் மகளிர் தின விழாவை முன்னிட்டு கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நிர்மலா, ராஜேஸ்வரி... உதவி பொறியாளர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அருண், ஜெயலட்சுமி, புனித வள்ளி, சங்கீதா மற்றும் அனைத்து அலுவலக பணியாளர்கள் அனைவரும் கேக் வெட்டி கொண்டாடினார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயம் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நான்காம் கால யாக சாலை பூஜை, ஐந்தாம் கால யாக சாலை பூஜை









**திருச்சி,மார்ச் 08:**
ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மகா கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு நான்காம் கால பூஜைகள் காலை 8:30 மணிக்கு மங்கள இசை,அஸ்வ பூஜை (குதிரை),காலை 9 மணிக்கு சப்த விம்சதி பூஜை, மண்டபார்ச்சனை, வேதிகா அர்ச்சனை, காலை 10 மணிக்கு நான்முகி நாராயணி நான்கு வேதத்தின் ஸ்வருபிணியாக விளங்கும் அன்னைக்கு நான்காம் கால யாக சாலை பூஜை ஸ்ரீ லலிதா சகஸ்ர நாம அர்ச்சனை, காலை 11:30 மணிக்கு ஹோமா திவ்ய சமர்ப்பணம், காலை 12 மணிக்கு பூர்ணாஹூதி தீபாரதனை... ஐந்தாம் காலம் மாலை 5:30 மணிக்கு மங்கல இசை விசேஷ சந்தி, கன்னிகா மாதர் சங்கம் பக்தி பாடல்கள், மாலை 5:50 க்கு சகானா குழுவினர் பக்தி பாடல்கள், மாலை 6:00 மணிக்கு பஞ்சபூதங்களின் சக்தியை ஆளும் அன்னைக்கு ஐந்தாம் கால யாக சாலை பூஜை , 6:10 மணிக்கு வாசவி பக்தி மண்டலி பக்தி பாடல்கள், மாலை 6:30 மணிக்கு சுருத்திலயா குழுவினர் பக்தி பாடல்கள்,இரவு 7:30 மணிக்கு பூதசுத்தி சதுர்வேத பாராயணம், இரவு 8:00 மணிக்கு ஹோம திரவ்ய சமர்ப்பணம், இரவு 8:30 மணிக்கு பூர்ணாஹூதி, தீபாராதனை.. வெகு சிறப்பாக பூஜைகளும், ஹோமங்களும் நடைபெற்றது.

ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். அனைவருக்கும் காலை,மதியம், இரவு உணவு வழங்கப்பட்டது.

திருச்சி ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி அம்மன் கோயில் நிர்வாகம், திருச்சி ஆர்ய வைஸ்ய நூட்ட இப்பன்றம் நகரம்வாரு கமிட்டி.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## உலக மகளிர் தின விழா



திருப்பூர் காட்டன் மார்க்கெட் அஞ்சலகத்தில் உலக மகளிர் தின விழா கேக் வெட்டி சிறப்பாக கொண்டாடப்பட்டது.. விழாவிற்கு சப் போஸ்ட்மாஸ்டர் மரகதம் மேம் அவர்கள் தலைமை வகித்தார். மதியவிருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது . மகளிர் அனைவரும் ஒரே கலரில் உடையணிந்து வந்திருந்தது சிறப்பானதாக இருந்திருந்தது. விழாவுக்கான ஏற்பாடுகளை மேகலா , ராஜலட்சுமி. ஓவியா ஆகியோர் செய்திருந்தனர்.

## உலக மகளிர் தினம் – 2026



ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம் தேதி உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.


ஆண்களுக்கு நிகராக பெண்களும் இப்போது பல்வேறு துறைகளில் தடம் பதித்து வருகிறார்கள். பெண்களுக்கான உரிமைகள் கிடைக்க தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கு வாய்ப்பு கிடைக்காமலும், ஆண்களுக்கு இணையான ஊதியம் கிடைக்காமலும், சம உரிமை கிடைக்காமலும் இருந்த காலத்தில் உரிமைகளுக்காக பல பெண்கள் போராடினார்கள்.

அவர்களில் முக்கியமானவர், மகளிர் தினம் உருவாக காரணமாக இருந்த கிளாரா ஜெட்கின்.கிளாரா ஜெட்கின் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்தவர். இவர் பிறந்த 1857-ம் ஆண்டு அமெரிக்காவின் நியூயார்க்கின் பல இடங்களில் பெண்களின் உரிமைகளுக்காக போராட்டங்கள் நடந்தன. அது மெல்ல மெல்ல உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது. அதைப் பார்த்து வளர்ந்த கிளாராவுக்கு சிறு வயதிலேயே போராடும் குணம் உருவானது. சிறு வயதிலேயே பல போராட்டங்களில் பங்கேற்றார். மேலும், பெண்களின் உரிமையை நிலைநாட்டும் நோக்கில் படித்து வழக்கறிஞரானார். ஜெர்மனியின் சோசலிச கட்சியில் இணைந்து மகளிரணியின் தலைவராக உயர்ந்தார்.

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வராத அந்தக் காலத்திலே பாரிஸ் நகரில் 15ஆயிரம் பெண்களைத் திரட்டி, பெண்களுக்கு சம உரிமை வழங்க கோரியும், ஊதிய உயர்வுக்காகவும், ஒரு நாளுக்கு 8 மணி நேரம் மட்டுமே வேலை நேரம் என்பதை வலியுறுத்தியும் பேரணி நடத்தினார். இதனால் அவர் புகழ் உலகெங்கும் பரவத் தொடங்கியது. உலகம் முழுவதும் பெண்களின் போராட்டம் தீவிரமாக நடந்தபோது 1910-ம் ஆண்டு கோபன்ஹேகனில் 'சர்வதேச பெண்கள் மாநாடு' நடைபெற்றது.

17நாடுகளைச் சேர்ந்த பிரமுகர்கள் கலந்து கொண்ட அந்த மாநாட்டில் கிளாராவும் பங்கேற்றார். இந்த மாநாட்டில் மகளிர் தினம் கொண்டாடும் யோசனையையும், அதன் முக்கியத்துவத்தையும் முன்வைத்தார். அவருடன் ஜெர்மனி குழுவில் இடம் பெற்றிருந்த கேத் டன்கர், பவுலா தியட் உள்ளிட்ட பலரும் இதனை முன்மொழிந்தனர். இதை அனைவரும் வரவேற்றனர். இருப்பினும் மகளிர் தினம் எந்த தேதியில் கொண்டாடப்படவேண்டும் என்பது குறிப்பிடப்படவில்லை.

இந்த மாநாடு, சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்களுக்கு வழிவகுத்தது. 1911-ம் ஆண்டு மார்ச் 19-ல் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் மகளிர் தின கொண்டாட்டங்கள் நடைபெற்றன. குறிப்பிட்ட தேதி அறிவிக்கப்படாததால் ஒவ்வொரு நாட்டிலும் வேறுவேறு நாட்களில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.



1975 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை மார்ச் 8-ம் தேதியை சர்வதேச மகளிர் தினமாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்து, மகளிர் தினத்தின் உலகளாவிய முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தியது. அதன்பின்னர் உலகம் முழுவதும் மார்ச் 8-ம் தேதி மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

**தொகுப்பு : பா. சீனிவாசன் வந்தவாசி.**

## செய்யாறில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் 22 ஆவது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு



**செய்யாறு, மார்ச் .08:**
செய்யாறில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் 22 ஆவது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் 22 ஆவது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு திருக்குறள் முதன்மை பயிற்றுநர் கவிஞர் எறும்பூர் கை .செல்வகுமார் தலைமை தாங்கி, வரவேற்று பேசினார். தலைமை ஆசிரியர் ஆர் .தேன்மொழி முன்னிலை வகித்தார் .சிறப்பு விருந்தினராக பங்கேற்ற ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் புலவர் மெய் .பூங்கோதை ,பேராசிரியர் கு .கண்ணன் ஆகியோர் திருக்குறள் குறித்து பேசினர். வருவாய் ஆய்வாளர் எம் .சுந்தரமூர்த்தி ,மாணவிகள் 23 பேர், மாணவர்கள் ஏழு பேர், சிறப்பு அழைப்பாளர்கள் மூன்று பேர், பெரியவர்கள் ஆறு பேர் ,பயிற்சியாளர் ஒருவர், உள்ளிட்ட 40 பேர் நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### நிதிஷ்குமாரின் கதி எடப்பாடி பழனிசாமிக்கு நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்? - திருமாவளவன்



கடந்த ஆண்டு தேர்தலில் என்டிஏ கூட்டணியில் வென்ற நிதிஷ்குமார் பீகார் முதல்-மந்தியாக 10வது முறையாக பொறுப்பேற்றார். பீகார் முதல்-மந்தியாக பொறுப்பேற்ற 4 மாதங்களே ஆன நிலையில் பதவியில் இருந்து விலகுவதை நிதிஷ் குமார் உறுதி செய்துள்ளார்.

முதல்-மந்திரி பதவியை ராஜினாமா செய்வதை உறுதி செய்த நிதிஷ் குமார் மாநிலங்களவை தேர்தலில் போட்டியிட நிதிஷ் குமார் வேட்புமனு தாக்கல் செய்ததார். இந்நிலையில், சென்னை எழும்பூரில் நடைபெற்ற இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வில் திருமாவளவன் கலந்துகொண்டார். அப்போது அவர் பேசியதாவது:- "அண்ணன் எடப்பாடியாரே எச்சரிக்கையாக இருங்கள். எம்ஜிஆர் ஜெயலலிதாவும் கட்டிக் காத்த திராவிட இயக்கமான அதிமுகவை கரைய விட்டு விடாதீர்கள், காப்பாற்றுங்கள். தனித்து நின்றாலே அதிமுகவின் வாக்கு வங்கி மிகப்பெரிய அளவில் கை கொடுக்கும். ஜெயலலிதா அம்மையார் இல்லாமலேயே65-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் அதிமுக வெற்றி பெற்றது. இதை முன்பே நான் கூறினேன். தற்போது, எடப்பாடி பழனிச்சாமி முதல்-அமைச்சராக வந்தால் அவரால் அந்த பதவியில் அமர முடியுமா? நிதிஷ்குமாரின் கதி எடப்பாடி பழனிசாமிக்கு நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

### திமுகவில் சட்டமன்ற தேர்தல் விருப்ப மனு நிறைவு - 15,372 மனுக்கள் குவிந்ததாம்!

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடுவதற்கான விருப்ப மனு வினியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த மாதம் 20-ந்தேதி தொடங்கியது. ரூ.1,000 விண்ணப்பபடிவ கட்டணத்துடன் பொதுத்தொகுதிக்கு ரூ.25 ஆயிரம், மகளிர், தனித்தொகுதிக்கு ரூ.15 ஆயிரம் என்று விருப்ப மனு கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும், புதுச்சேரியில் உள்ள 30 சட்டமன்ற தொகுதிகளுக்கும் விருப்ப மனுக்கள் பெறப்பட்டது. தமிழகம் முழுவதும் இருந்து தினமும் ஏராளமான நிர்வாகிகள், தொண்டர்கள் படைசூழ வந்து ஆர்வத்துடன் விருப்ப மனு அளித்து வந்தனர். விருப்ப மனு அளிப்பதற்கு மார்ச் 2-ந்தேதி கடைசி நாள் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. பின்னர் விருப்ப மனுவுக்காக கால அவகாசம் நேற்று வரை நீட்டிக்கப்பட்டது. இந்த நிலையில் கடந்த 14 நாட்களாக சென்னை அண்ணா அறிவாலயத்தில் விறுவிறுப்பாக நடைபெற்று வந்த விருப்ப மனு வினியோகம் நேற்று மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது. வரலாறு காணாத வகையில் 15,372 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இதில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பெயரில் மட்டும் 1,473 மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளது. துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெயரிலும் அதிகமான மனுக்கள் தாக்கல் ஆகியுள்ளது. விருப்ப மனு முடிவடைந்துள்ள நிலையில் வேட்பாளர் நேர்காணல் எப்போது நடைபெறும் என்ற எதிர்பார்ப்பு நிர்வாகிகள் மத்தியில் எழுந்துள்ளது. தற்போது கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீட்டை இறுதி செய்வதில் திமுக முனைப்பு காட்டி வருகிறது. கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை சுமுகமாக முடிவடைந்தவுடன் திமுக போட்டியிடும் தொகுதிகள் அடையாளம் காணப்படும்.

இதைத்தொடர்ந்து அந்த தொகுதிகளுக்கு விருப்ப மனு அளித்தவர்களை மாவட்ட வாரியாக அழைத்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேர்காணல் நடத்தி வேட்பாளரை முடிவு செய்வார்.

### கூடுதல் தொகுதிகள்: கமல் ஆலோசனை

திமுக கூட்டணியில் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு கூடுதல் தொகுதிகள் கேட்பது குறித்து அந்தக் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் நிர்வாகிகளுடன் சென்னையில் ஆலோசனை நடத்தினார். திமுகவுடன் முதல்கட்ட தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை மக்கள் நீதி மய்யம் நடத்தி முடித்துள்ள நிலையில், 15 தொகுதிகள் அடங்கிய பட்டியலையும் வழங்கியுள்ளது. மக்கள் நீதி மய்யம் கட்சியை உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட திமுக வலியுறுத்தியாகக் கூறப்படுகிறது. ஆனால் கமல்ஹாசனும் தனிச் சின்னத்தில் (டார்ச் லைட்) போட்டியிடுவதில் உறுதியாக உள்ளார்.

இந்த நிலையில், சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள மக்கள் நீதி மய்யம் அலுவலகத்தில் அந்தக் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தலைமையில் அவசர நிர்வாகக் குழு மற்றும் செயற்குழு கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஆலோசனைக்கு பிறகு செய்தியாளர்களிடம் கமல்ஹாசன் கூறியதாவது:

ஆலோசனை கூட்டம் ஜனநாயக முறைப்படி நடைபெற்றது. வரும் சட்டப்பேரவை தேர்தலில் கூடுதல் தொகுதிகள், தனி சின்னத்தில் போட்டியிடுவது குறித்து ஆலோசனை நடத்தியுள்ளோம். திமுகவிடம் இருந்து அழைப்பு வந்த பின்னர் ஒப்பந்தம் செய்யப்படும் என்றார் அவர்.

## சுதந்திரமாக சூறாவளி பிரச்சாரத்துக்குத் தயாராகும் விஜய்!

"வீட்டுக்குள் இருக்கும் அரசியல்வாதி" என்ற பிம்பத்தை உடைக்க, 'வெற்றிப் பேரணியில் தமிழ்நாடு' என்ற முழக்கத்துடன் களமிறங்கினார் விஜய். கடந்த செப்டம்பர் 13-ம் தேதி திருச்சியில் தொடங்கிய இவரது அரசியல் பிரச்சாரப் பயணம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

ஆளும் திமுக அரசின் செயல்பாடுகளைத் கடுமையாக விமர்சித்த விஜய், மாற்றத்துக்கான அவசியத்தை முன்வைத்து மக்கள் மத்தியில் நேரடியாக உரையாடினார்.

இந்த நிலையில் செப்டம்பர் 27-ம் தேதி கரூரில் விஜய் மேற்கொண்ட பிரச்சாரத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவம் ஒட்டுமொத்த நாட்டையும் உலுக்கியது. இந்தத் துயரச் சம்பவத்தை முன்னிறுத்தி தமிழக அரசு கொண்டு வந்த கடுமையான வழிகாட்டு நெறிமுறைகள் (எஸ்ஓபி)



விஜய்யின் பிரச்சாரத்துக்குப் பெரும் முட்டுக்கட்டையாக மாறியது. திறந்தவெளி வாகனப் பிரச்சாரத்துக்குத் தடை, நேரக் கட்டுப்பாடுகள் மற்றும் மக்கள் சந்திப்புக்குக் கடும் கட்டுப்பாடுகள், இவை எல்லாம் விஜய்யின் 'நேரடி மக்கள் தொடர்பு' பாணிக்கு அரசு போடும் முட்டுக்கட்டை என தவெக தரப்பில் கொதித்தெழுந்தனர்.

கட்டுப்பாடுகளுக்கு எதிராக நீதிமன்றம் சென்று சில தளர்வுகளைப் பெற்றாலும், ஒரு மாவட்டத்தில் வெறும் 5 ஆயிரம் நிர்வாகிகள் மட்டுமே சந்திக்கும் நிகழ்வாக விஜய்யின் பிரச்சாரக் கூட்டங்கள் சுருக்கப்பட்டன.

இதுகுறித்து தவெக தேர்தல் பிரச்சார மேலாண்மை பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா அளித்த பேட்டி ஒன்றில், "கடந்த ஓராண்டாக விஜய்யின் எழுச்சியை முடக்குவதையே திமுக அரசு முழுநேர வேலையாகக் கொண்டுள்ளது. ஒருபுறம் எஸ்ஓபி மூலம் தடுத்துவிட்டு, மறுபுறம் 'விஜய் வெளியே வரவில்லை' எனப் பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால், தேர்தல் ஆணையம் தேர்தல் தேதியை அறிவித்த பிறகு நிலைமை தலைகீழாகும். காவல்துறை தேர்தல் ஆணையத்தின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் வரும்போது, முதல்வரின் உத்தரவுகளோ, ஒருதலைப்பட்சமான தடைகளோ செல்லுபடியாகாது. அப்போது விஜய்க்காக அனைத்து சாலைகளும் திறக்கப்படும். தடையை உடைத்து அவர் சூறாவளிப் பிரச்சாரத்தை முன்னெடுப்பார்" எனத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையம் தேர்தல் தேதியை அறிவித்த பிறகு, சுதந்திரமாக விஜய் தமிழகம் முழுவதும் சூறாவளியாகச் சுழலும் போது, அது தமிழக அரசியலில் இதுவரை கண்டிராத மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என தவெக-வினர் நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள்.

## திமுக வாக்குறுதி: சிலிண்டருக்கு ரூ.100 மானியத்தை அறிவிக்க வேண்டும் - அண்ணாமலை வலியுறுத்தல்

தமிழக முன்னாள் பாஜக தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;-

நாடு முழுவதும், கடந்த 10 ஆண்டுகளில், சமையல் எரிவாயு பயன்பாடு, 45 சதவீதம் அதிகரித்துள்ளது. பாரதப் பிரதமர் நரேந்திர மோடி கொண்டு வந்த உஜ்வாலா இலவச சமையல் எரிவாயு திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களால், கடந்த 10 ஆண்டுகளில், சமையல் எரிவாயு இணைப்பு, 14 கோடி வீடுகளில் இருந்து, சுமார் 100 மடங்குக்கும் மேல் அதிகரித்து, 33 கோடிக்கும் அதிகமான வீடுகளில் இன்று சமையல் எரிவாயு இணைப்பு உள்ளது.

பயன்பாடு அதிகரித்ததன் காரணமாக, சமையல் எரிவாயு இறக்குமதியும் அதிகரித்திருக்கிறது. மொத்த பயன்பாட்டில், இறக்குமதி மட்டுமே 60 சதவீதம் ஆக உள்ளது. இதனால், சர்வதேச சந்தையில், போர் உள்ளிட்ட காரணங்களால் விலை உயர்வு ஏற்படும்போது, நமது நாட்டிலும் விலை உயர்வு தவிர்க்கவியலாமல் போகிறது.

திமுக தனது கடந்த 2021 தேர்தல் வாக்குறுதி எண் 503ல், சிலிண்டருக்கு ரூ.100 மானியம் வழங்குவோம் என்று வாக்குறுதி கொடுத்தது. ஆனால், ஐந்து ஆண்டுகளைக் கடந்தும், இன்னும் அதனை நிறைவேற்றவில்லை. பொய்யான வாக்குறுதிகள் கொடுத்து மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் திமுக, தற்போதாவது, ரூ.100 மானியத்தை அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓ.பன்னீர்செல்வம் மீது பதிவான 4 வழக்குகள் ரத்து

நாடாளுமன்ற தேர்தல் கடந்த 2024-ம் ஆண்டு நடந்தபோது, ராமநாதபுரம் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராக முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் போட்டியிட்டார். அப்போது, தேர்தல் விதிமுறைகளை மீறி அதிக எண்ணிக்கை கொண்ட வாகனங்களில் சென்று பிரசாரம் செய்தார்; இரவு 10 மணிக்கு மேல் பட்டாசு வெடித்து பிரசாரம் செய்தார் என்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஓ.பன்னீர்செல்வம் மீது பரமக்குடி, திருவாடானை, திருப்புல்லாணி, கீழக்கரை ஆகிய போலீஸ் நிலையங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்குகளை எல்லாம் ரத்து செய்யக்கோரி சென்னை ஐகோர்ட்டில், ஓ.பன்னீர்செல்வம் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், "தேர்தல் விதிகளின் அடிப்படையில் தகுதியான அதிகாரிகள் புகார் செய்யவில்லை. போலீஸ் அதிகாரிகளே புகார் செய்து, போலீஸ் அதிகாரிகளே வழக்கும் பதிவு செய்துள்ளனர்.

எனவே, இந்த வழக்குகளையும், குற்றப் பத்திரிகைகளையும் ரத்து செய்யவேண்டும்" என்று வாதிடப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி, முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மீது பதிவு செய்யப்பட்ட 4 தேர்தல் வழக்குகளையும் ரத்து செய்து உத்தரவிட்டார்.

## தலைநகரில் களமிறங்கும் விசிக: விஜய்க்கு எதிராக ஷா நவாஸை நிறுத்தவும் பரிசீலனை



தவெக தலைவர் விஜய் சென்னை பெரம்பூர் தொகுதியில் போட்டியிடலாம் என்று சொல்லப்படும் நிலையில், திமுக கூட்டணியில் அந்தத் தொகுதியை தங்களின் விருப்பப் பட்டியலில் வைத்திருக்கிறது விசிக. தொகுதி தங்களுக்குக் கிடைத்தால் ஆளூர் ஷா நவாஸை அங்கு நிறுத்தும் திட்டத்தில் அந்தக் கட்சி இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

திமுக கூட்டணியில் கடந்த முறை 6 தொகுதிகளில் போட்டியிட்ட விசிக, 4 இடங்களை வென்றது. தற்போது அந்தக் கட்சி மாநிலக் கட்சி அங்கீகாரத்துடன் தேர்தல் களத்துக்கு வருவதால் இம்முறை இரட்டை இலக்கத்தில் தொகுதிகளை விரும்பியது. அந்தக் கட்சி 12 தொகுதிகளை எதிர்பார்த்த நிலையில், புதிய கட்சிகளின் வரவைக் காரணம் காட்டி விசிக-வுக்கு 8 தொகுதிகளை ஒதுக்க திமுக முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. இருப்பினும் கடந்த முறை தலா 6 தொகுதிகளில் போட்டியிட்ட கம்யூனிஸ்ட்கள் மற்றும் மதிமுக-வுக்கு தொகுதிகள் எண்ணிக்கை குறைக்கப்படலாம் என்பதால் விசிக-வுடன் இறுதியாக கூட்டணி ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று தெரிகிறது. மேலும், புதிய கட்சிகளின் வரவால் கூட்டணிக் கட்சிகள் முன்பு போட்டியிட்ட தொகுதிகளும் மாறும் சூழல் ஏற்பட்டுள்ளது. கடந்த முறை விசிக வென்ற நாகை, திருப்போரூர் தொகுதிகள் இம்முறை வேறு கட்சிகளுக்கு போகலாம் எனக் கூறப்படுகிறது. இதில், ஆளூர் ஷா நவாஸ் விசிக துணைப் பொதுச்செயலாளராக இருப்பதால் அவருக்கு நாகைக்குப் பதிலாக சென்னையில் ஒரு தொகுதியை ஒதுக்க திமுக முன்வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அதன்படி சென்னையில் ஆர்.கே.நகர், பெரம்பூர், ராயபுரம் ஆகிய தொகுதிகளில் ஒன்றை விசிக-வுக்கு ஒதுக்க திமுக முடிவு செய்துள்ளது. இந்தத் தொகுதிகளில் சிறுபான்மையினர் அதிகம் உள்ளதால் இவை விசிக-வுக்கு சாதகமான தொகுதிகளாகப் பார்க்கப்படுகிறது. இதில் பெரம்பூர் அல்லது ராயபுரம் ஒதுக்கப் பட்டால் ஆளூர் ஷா நவாஸும் ஆர்.கே.நகர் கிடைத்தால் இன்னொரு துணைப் பொதுச்செயலாளரான வழக்கறிஞர் எழில் கரோலினும் நிறுத்தப்படுவார்கள் என்கிறார்கள்.

இதில், பெரம்பூர் தொகுதி தவெக தலைவர் விஜய்க்காக தயார்படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஒருவேளை, இங்கு விஜய் நின்றால் அவரை எதிர்த்து விசிக போட்டியிடுமா அல்லது திமுக-வே மோதிப் பார்க்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## கலைக்கப்பட்ட மக்கள் நலக் கூட்டணியால் திமுகவுக்கு மீண்டும் சோதனை

கலைக்கப்பட்ட மக்கள் நலக் கூட்டணியால் திமுக-வுக்கு மீண்டும் சிக்கல்கள் எழுந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

திமுக கூட்டணியில் காங்கிரஸ், தேமுதிக, விசிக, கம்யூனிஸ்ட்கள், மதிமுக உள்ளிட்ட 22 கட்சிகள் உள்ளன. இந்த அணியில் தேமுதிக தான் கடைசியாக வந்து சேர்ந்தது. மற்ற கட்சிகள் நீண்டகாலமாக திமுக கூட்டணியில் இருக்கின்றன. ஆனால், கூட்டணியில் புதிதாக சேர்ந்த தேமுதிக-வுக்கு தரப்படும் முக்கியத்துவம் மற்ற தோழமை கட்சிகளிடம் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தொகுதி பங்கீட்டில் இழுபறி நீடிப்பதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து திமுக தரப்பில் நம்மிடம் பேசியவர்கள், "தலைவலியாக இருந்த காங்கிரஸ் பிரச்சினையை முடித்து சற்று மூச்சுவிடும் முன்னரே பழைய மக்கள் நலக் கூட்டணியால் மீண்டும் சிக்கல் எழுந்துள்ளது. தேமுதிக-வுக்கு 10 தொகுதிகள், 1 ராஜ்ய சபா சீட் தருவதாகச் சொல்லித்தான் கூட்டணிக்குள் கொண்டு வந்தது திமுக. ஆனால், மற்ற கட்சிகளை சமாளிப்பதற்காக 6 அல்லது 7 தொகுதி கள் வரை தேமுதிக-வுக்கு ஒதுக்கப்படும் என தகவல்கள் வெளியிடப்பட்டன.

தேமுதிக-வை முன்வைத்து இடங்களை குறைத்துக்கொள்ளுமாறு மதிமுக, கம்யூனிஸ்ட் கட்சிகளிடம் திமுக பேச்சுவார்த்தை நடத்தியது. அதில் மதிமுக 4, கம்யூனிஸ்ட்கள் தலா 5 இடங்களுக்கு கிட்டதட்ட சம்மதித்து விட்டன. விசிக-வுக்கு மட்டும் 8 தொகுதிகள் ஒதுக்க முடிவானது. ஆனால், தேமுதிக-வுக்கு 10 இடங்கள் தரும் தகவலறிந்த பின்னர், இந்த 4 கட்சிகளும் தங்களுக்கும் கூடுதல் தொகுதிகள் வேண்டுமென கொடிபிடிக்கின்றன. இதில் மதிமுக தனிச்சின்னம் கேட்டும் நச்சரிக்கிறது.

தேமுதிக-வுக்கு என்ன கொள்கை இருக்கிறது, நாங்கள் நீண்ட காலமாக கூட்டணியில் இருக்கிறோம். அவர்களுக்கு வாக்கு வங்கியும் பெரிதாக இல்லை என கம்யூனிஸ்ட்கள் கொந்தளிக்கின்றனர். அதனால் அவர்களை சமாதானம் செய்யும் முயற்சிகள் நடக்கின்றன. 2016-ல் மக்கள் நலக் கூட்டணியால் தான் திமுக வெற்றி வாய்ப்பை இழந்தது. மீண்டும் அதே கூட்டணியால் இப்போது சிக்கல் வந்துள்ளது" என்றனர்.

## விஜய்யின் த.வெ.க. சட்டமன்ற தேர்தலில் எதிர்க்கட்சியாக வருவதற்கு வாய்ப்பு - காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி கணிப்பு

காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி, கரூரில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது;-

"எனக்கு தெரிந்தவரை த.வெ.க. தலைவர் விஜய்க்கு இளைஞர்களின் ஆதரவு மிக அதிகமாக உள்ளது. எனவே, விஜய்யின் த.வெ.க. சட்டமன்ற தேர்தலில் எதிர்க்கட்சியாக வருவதற்கு நிச்சயமாக வாய்ப்பு உள்ளது.

அதே சமயம், அ.தி.மு.க. இந்த தேர்தலில் 3-வது இடத்திற்கு செல்வது மட்டுமில்லை, தமிழ்நாட்டில் அ.தி.மு.க. சந்திக்கப்போகும் கடைசி தேர்தல் இதுவாகத்தான் இருக்கப்போகிறது. தமிழக மக்கள் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்திருக்கும் எந்த கட்சிக்கும்



வாக்கு செலுத்தமாட்டார்கள்.

தி.மு.க. கூட்டணிக்குள் இருக்கும் பல கட்சிகள் அதிகாரப் பகிர்வு குறித்து வலியுறுத்தி வந்தாலும், பா.ஜ.க.வை வீழ்த்துவது என்பதே எங்கள் பிரதான இலக்காகும்.

எங்கள் கூட்டணி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், எதிர்காலத்திற்காகவும், பா.ஜ.க. விடம் இருந்து தமிழ்நாட்டை காப்பதற்காகவும் அமைக்கப்பட்ட கூட்டணி.

கூட்டணிக்காக காங்கிரஸ் கட்சியும் சில தியாகங்களை செய்ய வேண்டியிருக்கிறது. நாங்கள் அதைத்தான் செய்திருக்கிறோம் என்று நினைக்கிறேன்.

ஒரு பொறுப்பான கட்சியாக, சில சமயங்களில் இதுபோன்ற சமரசங்களை நாம் செய்ய வேண்டியிருக்கும்.

கூட்டணி இப்போது உறுதி செய்யப்பட்டுவிட்டதால், இனி தேர்தலை எப்படி எதிர்கொண்டு வெற்றி பெறுவது என்பதைப் பார்க்க வேண்டும். ஏனென்றால் தமிழகமும், இந்தியாவும் தற்போது ஒரு பெரிய ஆபத்தை எதிர்கொண்டுள்ளது."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## நாமக்கல் நரசிம்மர், ஆஞ்சநேயர் கோயில் உண்டியல் காணிக்கை ரூ. 81.68 லட்சம்

**நாமக்கல், மார்ச் 8:**

நாமக்கல் நரசிம்மர் மற்றும் ஆஞ்சநேயர் கோயில் உண்டியல் காணிக்கையாக ரூ. 81.68 லட்சம் இருந்தது. நாமக்கல்லில் நரசிம்மர், அரங்கநாதர், ஆஞ்சநேயர் சுவாமி கோயில்கள் அமைந்துள்ளன. இக்கோயில்களுக்கு ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய வருகின்றனர். பக்தர்கள் காணிக்கை செலுத்தும் உண்டியல்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை திறக்கப்பட்டு எண்ணப்படும். அந்த வகையில், ஆஞ்சநேயர் கோயிலில் உள்ள 6, நரசிம்மர் கோயிலில் 4, அரங்கநாதர் கோயிலில் 2 உண்டியல்கள் வியாழக்கிழமை திறக்கப்பட்டன.

ஆஞ்சநேயர் கோயில் பக்தர்கள் தங்கும் மண்டபத்தில் உண்டியல் காணிக்கை எண்ணும் பணி காலை 10 மணிமுதல் இரவு 7 மணிவரை நடைபெற்றது. திருச்செங்கோடு கே.எஸ்.ஆர். கல்லூரி மாணவ, மாணவிகள், பக்தர்கள், நாமக்கல் கோயில் உதவி ஆணையர் சந்திரன், அறங்காவலர் குழு உறுப்பினர் செல்வ. சீராளன், கோயில் உதவி ஆணையர் இரா.இளையராஜா ஆகியோர் முன்னிலையில் உண்டியல் எண்ணும் பணியை மேற்கொண்டனர்.

இதில், உண்டியல் காணிக்கையாக ரொக்கம் ரூ. 81,68,494, தங்கம் 127 கிராம், வெள்ளி 357 கிராம் இருந்தன.

## ஒசூர் சந்திரசூடேஸ்வரர் கோயில் தெப்பல் உத்ஸவம்



ஒசூர் தேர்ப்பேட்டையில் உள்ள சந்திரசூடேஸ்வரர் கோயில் பச்சைக்குளத்தில் வியாழக்கிழமை தெப்பல் உத்ஸவம் சிறப்பாக நடைபெற்றது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் உள்ள பிரசித்தி பெற்ற சந்திரசூடேஸ்வரர் மலைக்கோவில் தேரோட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதையொட்டி புதன்கிழமை இரவு ராவண வாகன உத்ஸவம் நடைபெற்றது. தினமும் உற்சவ மூர்த்திகளான மரகதாம்பிகை சமேத சந்திர சூடேஸ்வரர்

சிம்மவாகனம், மயில் வாகன குதிரை வாகனம், நந்தி வாகனம், ஊர்வலம் மற்றும் சுவாமிக்கு திருக்கல்யாண வைபோகம், மூன்றாம் தேதி திருத்தேர் விழா நடைபெற்றது.

வியாழக்கிழமை இரவு தேர்ப்பேட்டை பச்சைக்குளத்தில் 3 முறை சுற்றி வந்து உற்சவ மூர்த்தி சுவாமிகள் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதில் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# கவுந்தப்பாடி ராஜராஜேஸ்வரி புது மாரியம்மன் கோவில் மாசி பொங்கல் திருவிழா

**கவுந்தபாடி, மார்ச் 8:**

ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி புது மாரியம்மன் கோவிலில் மாசி மாத பொங்கல் திருவிழா கடந்த மாதம் 20ம் தேதி பூச்சாட்டுதலுடன் துவங்கியது. 23ம் தேதி இரவு பொட்டு சாமிக்கு பொங்கல் வைத்து, 25ம் தேதி கம்பம் நடப்பட்டது. 27 ம் தேதி பூவாடு வைத்து சிறுவர், இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் கம்பத்தாட்டம் ஆடினார்கள்.



நேற்று 5ம் தேதி அதிகாலை பெருந்தலையூர் வாணி ஆற்றில் இருந்து தீர்த்தம் எடுத்துவரப்பட்டு, கவுந்தப்பாடி ஆப்பக்கூடல் ரோடு கால்நடை மருத்துவமனை அருகே உள்ள அம்மை அழைக்கும் ஆலயத்தில் வைக்கப்பட்டு, அம்மை அழைப்பு பூஜை நடைபெற்றது. நூற்றுக்கணக்கானோர் அங்கிருந்து தீர்த்தக்குடம், அக்கினி கும்பம் எடுத்தும் அலகு குத்தியும் ஊர்வலமாக புறப்பட்டனர். தாரை, தப்பட்டை, பம்பை வாத்தியங்கள் உடன் புறப்பட்ட அவர்கள் ஆஸ்பத்திரி ரோடு, மூன்று ரோடு, கடைவீதி, நால்ரோடு, கோபி ரோடு வழியாக மாரியம்மன் ஆலயத்திற்கு வந்தடைந்தனர்.

அதைத் தொடர்ந்து பொங்கல் வைத்தல், கிடாய் வெட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. மாலை அம்மை அழைக்கும் ஆலயத்தில் இருந்து காளி வேடம், அம்மன் வேடம் மற்றும் சாமி வேடம் அணிந்து பக்தர்கள் ஊர்வலமாக கோவிலை வந்து அடைந்தார்கள். இரவு 8:30 மணிக்கு கம்பம் பிடுங்கப்பட்டது.

காலை செவ்வாடை தொண்டர்கள் சார்பில் பால்குட ஊர்வலம் நடைபெற்றது.

மதியம் அம்மனுக்கு அக்னி அபிஷேகமும், மாலை 5 மணிக்கு சந்தன காப்பு அலங்காரமும், அன்னதானமும் நடைபெறுகிறது. இரவு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி புது மாரியம்மன் முத்து பல்லக்கில் எழுந்தருளி திருவீதி உலா செல்லும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

நாளை முதல் தொடர்ந்து மூன்று நாட்கள் மஞ்சள் நீர் விழா நடைபெறுகிறது.

வருகிற 11 ம் தேதி வரை கோவில் வளாகத்தில் தினமும் இரவு கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில் திருவிழா: சந்தன குடம் பவனி

**மண்டைக்காடு, மார்ச் 8:**

மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில் மாசிக் கொடைவிழா கடந்த 1ம் தேதி திருக்கொடி ஏற்றத்துடன் துவங்கி நடந்து வருகிறது. விழாவின் நான்காம் நாளான நேற்று சந்தனகுடம் பவனி நடந்தது. விழாவை முன்னிட்டு காலை 4.30 மணிக்கு திருநடை திறப்பு, கணபதி ஹோமம், உஷ பூஜை, அம்மன் வெள்ளிப்பல்லக்கில் பவனி, உச்சபூஜை, தங்கத்தேர் பவனி நடைபெற்றது.

பகல் 11.30 மணிக்கு மேற்கு நெய்யூர் ஊரம்மன் கோவிலில் இருந்தும், 12.30 மணிக்கு வெட்டுமடை இசக்கி அம்மன் கோவிலில் இருந்தும், மாலை 6 மணிக்கு கொத்தனார்விளை விடாலமுத்து சிவன் கோவிலில் இருந்தும் பகவதி அம்மன் கோவிலுக்கு சந்தனக் குடம் பவனி வந்தடைந்தது.

மாலை 6.30க்கு அம்மனுக்கு சந்தனம் சார்த்தி அலங்கார தீபாராதனை, இரவு 9 மணிக்கு அத்தாழ பூஜை, 9.30 மணிக்கு அம்மன் வெள்ளிப்பல்லக்கில் பவனி ஆகிய நிகழ்ச்சிகள் நடந்தன.

ஐந்தாம் நாளில் மணவாளக்குறிச்சி மணல் ஆலை வளாகத்தில் இருந்து சந்தனகுடம் பவனி, ஆறாம் நாளான பருத்திவிளை, உண்ணாமலைக்கடை மற்றும் குளச்சல் களிமார் ஆகிய இடங்களில் இருந்து சந்தனகுடம் பவனி, வலியபடுக்கை என்னும் மகாபூஜை நடந்தது.

## திருவாரூர் தியாகராஜர் கோவில் ஆழித்தேரோட்ட திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்

**திருவாரூர், மார்ச் 8:**

திருவாரூர் தியாகராஜர் கோவில் சைவ சமயத்தின் தலைமை பீடமாகவும், சர்வதோஷ பரிகார தலமாகவும் விளங்குகிறது. சிறப்புமிக்க இந்த கோவில் ஆழித்தேரோட்டம் உலகபுகழ் பெற்றது. ஒவ்வொரு ஆண்டும் பங்குனி உத்திர திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக ஆழித்தேரோட்டம் நடைபெறுவது வழக்கம்.


அதன்படி இந்த ஆண்டு பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு வருகிற மார்ச் 29-ந்தேதி ஆழித்தேரோட்டம் நடைபெற உள்ளது. இந்நிலையில், இன்றைய தினம் தியாகராஜர் கோவிலில் ஆழித்தேரோட்ட திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க, மங்கள இசையுடன் கொடியேற்றம் நடந்தது. 54 அடி உயர கொடிமரத்தில் நந்தி உருவம் பொறித்த உற்சவக் கொடி மங்கள இசையுடன் ஏற்றப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## நந்தி நாதேஸ்வரர் கோயிலில் ஊஞ்சல் உற்சவம்

**நாகப்பட்டினம், மார்ச் 8:**

மாசி மக பிரமோற்சவ விழாவையொட்டி வடக்குபொய்கைநல்லூர் நந்தி நாதேஸ்வரர் கோயிலில் ஊஞ்சல் உற்சவம் புதன்கிழமை இரவு நடைபெற்றது.

வடக்குபொய்கை நல்லூரில் உள்ள நந்தி நாதேஸ்வரர் கோயில் மாசி மக பிரமோற்சவ விழா கடந்த பிப். 21-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. முக்கிய நிகழ்ச்சியான ஊஞ்சல் உற்சவம் புதன்கிழமை நடைபெற்றது.



நந்தி நாதேஸ்வரர், செளந்தர நாயகி அம்மன் அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சலில் எழுந்தருளினர். தொடர்ந்து ஊஞ்சல் உற்சவம் நடைபெற்றது. முன்னதாக வர்ண விநாயகர் கோயிலில் இருந்து பெண்கள் சீர்வரிசை எடுத்து வந்தனர். பின்னர் அம்மனுக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனை நடைபெற்றது இதில் திரளான பக்தர்கள் பங்கேற்று வழிபட்டனர். ஏற்பாடுகளை வீரன்குடிகாடு கிராமவாசிகள், நந்தவன காளியம்மன் அறக்கட்டளை சார்பில் செய்யப்பட்டிருந்தன.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

### ரத்த சோகையை குணப்படுத்த உதவும் பச்சை பயறு! மொத்த நன்மைகளையும் பெற இப்படி தான் சாப்பிடனும்!

நமது வீடுகளில் காய்ச்சல் என்றாலோ அல்லது உடல்நிலை சரியில்லை என்றாலோ உடனே நினைவுக்கு வருவது பாசிப்பயறு கஞ்சிதான். செரிமானத்திற்கு எளிதானது என்பதால் இதை நாம் காலம் காலமாக பயன்படுத்தி வருகிறோம்.

ஆனால், இதே பாசிப்பயறை அப்படியே வேகவைத்து பயன்படுத்துவதை விட, அதை முளைகட்ட வைத்து சாப்பிடும்போது அது ஒரு சத்துக்களின் பெட்டகமாக மாறுகிறது என்பது நம்மில் பலருக்கு தெரிவதில்லை. குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே இன்று பெரும் சவாலாக இருக்கும் ரத்தசோகை (ANEMIA) மற்றும் அதிகரித்து வரும் இதய பாதிப்புகளுக்கு இது ஒரு மிகச்சிறந்த மருந்தாக கருதப்படுகிறது.

அன்றாட உணவில் நாம் சாதாரணமாக கடந்து செல்லும் ஒரு சின்ன மாற்றம், நம் உடலின் ரத்த ஓட்டத்தையும் இதய துடிப்பையும் எப்படி சீராக வைத்திருக்கிறது என்பதை தெரிந்து கொள்வது அவசியம். ரத்தசோகையை விரட்டும் முளைகட்டிய பயறு: இந்தியாவில் சுமார் 52% பெண்கள் மற்றும் ஏராளமான குழந்தைகள் ரத்தசோகையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு (NFHS-5) கூறுகின்றன. பாசிப்பயறில் இரும்புச்சத்து அதிகம் இருந்தாலும், அதில் உள்ள 'பைடேட்ஸ்' (PHYTATES) எனும் ஒரு பொருள், அந்த இரும்புச்சத்தை உடல் உறிஞ்சவிடாமல் தடுத்துவிடும். இங்குதான் 'முளைகட்டுதல்' முக்கிய பங்கு வகிக்கிறது. பயறு முளைவிடும்போது, அதிலுள்ள பைடேட்ஸ் குறைந்து, இரும்புச்சத்தை உடல் உறிஞ்சும் தன்மை 30% முதல் 50% வரை அதிகரிக்கிறது. மேலும், முளைகட்டும் போது அதில் உள்ள வைட்டமின் C அளவு மூன்று மடங்கு உயர்கிறது. தாவரங்களில் இருந்து கிடைக்கும் இரும்புச்சத்தை உடல் உறிஞ்சுவதற்கு வைட்டமின் C மிக அவசியம். பாசிப்பயறு முளைகள் இவை இரண்டையும் ஒரே நேரத்தில் வழங்குவதால், இது ரத்தசோகைக்கு ஒரு இயற்கை தீர்வாகிறது என்கிறது NIH ஆய்வு. இந்தியர்களுக்கு இதய நோய்கள் மற்ற நாட்டு மக்களை விட ஒரு பத்தாண்டுகளுக்கு முன்னதாகவே ஏற்படுவதாக ஆய்வுகள் சொல்கின்றன.

இதற்கு ரத்தத்தில் உள்ள தேவையற்ற கொழுப்பு (LDL) மற்றும் குறைந்த அளவு நல்ல கொழுப்பு (HDL) ஆகியவை முக்கிய காரணங்கள். முளைகட்டிய பயறில் உள்ள நார்ச்சத்து, குடலில் உள்ள பித்த அமிலங்களுடன் இணைந்து, கல்லீரல் ரத்தத்தில் இருக்கும் கெட்ட கொழுப்பை எடுக்க தூண்டுகிறது. இதனால் ரத்தத்தில் கொழுப்பின் அளவு குறைகிறது. இதில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள், ரத்த நாளங்களில் கொழுப்பு படிந்து அடைப்பு ஏற்படுவதை தடுக்கின்றன. இது இதய தமனிகளில் ஏற்படும் 'துரு' போன்ற சேதத்தை தடுத்து மாரடைப்பு அபாயத்தை குறைக்கிறது.

# இளம் பெண்களை குறிவைக்கும் மார்பக புற்றுநோய்! 2050ல் 3.5 மில்லியனாக பாதிப்பு அதிகரிக்கும்! தி லான்செட் ஆய்வு எச்சரிக்கை!

உலக அளவில் பெண்களை பாதிக்கும் மிக முக்கியமான நோய்களில் ஒன்றாக மார்பக புற்றுநோய் உள்ளது. 1990 முதல் 2023 வரையிலான காலகட்டத்தை ஆய்வு செய்து 'லான்செட் ஆன்காலஜி' இதழ் வெளியிட்டுள்ள புதிய தரவுகள், இந்த நோயின் பரவல் மற்றும் உயிரிழப்பு விகிதம் வரும் ஆண்டுகளில் தீவிரமடையும் என்பதை காட்டுகின்றன.

குறிப்பாக, வளர்ந்த நாடுகளை விட இந்தியா போன்ற நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் இதன் தாக்கம் பல மடங்கு அதிகரித்துள்ளது. 2050ம் ஆண்டிற்குள் உலகளாவிய பாதிப்பு 35 லட்சத்தை தாண்டும் என கணிக்கப்பட்டுள்ள நிலையில், இதில் இந்தியாவின் பங்கு மற்றும் இளவயது பெண்களிடையே அதிகரித்து வரும் பாதிப்பு ஆகியவை அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

உலகளாவிய நிலவரம் என்ன? உலக சுகாதார அமைப்பின் (WHO) தரவுப்படி, 2022ல் 23 லட்சம் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் கண்டறியப்பட்டது. லான்செட் ஆய்வின்படி, இந்த எண்ணிக்கை 2050ல் 35 லட்சமாக உயரும் என்கிறது. அதேபோல், ஆண்டுதோறும் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 7.6 லட்சத்திலிருந்து 14 லட்சமாக (44%) அதிகரிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆய்வாளர் கேய்லி பாங்டியா இது குறித்து கூறுகையில், "உயர் வருமானம் கொண்ட நாடுகளில் ஆரம்பக்கட்ட பரிசோதனை வசதிகள் இருப்பதால் உயிரிழப்புகள் கட்டுக்குள் உள்ளன. ஆனால், குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் நோய் முற்றிய நிலையிலேயே கண்டறியப்படுவதால் மரண விகிதம் அதிகரித்து வருகிறது," எனக் குறிப்பிட்டுள்ளார்.



இந்தியாவில் மார்பகப் புற்றுநோயின் தீவிரம்: இந்திய புற்றுநோய் சங்கத்தின் தரவுப்படி, இந்தியாவில் 28 பெண்களில் ஒருவருக்கு மார்பக புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களில் இந்தியாவின் புள்ளிவிரங்கள் மிக வேகமான வளர்ச்சியை பதிவு செய்துள்ளன என்கிறது தரவுக

1990-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023-இல் பாதிப்பு எண்ணிக்கை 477.8% அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் 2.03 லட்சம் நபர்களுக்கு புதிதாக பாதிப்பு பதிவாகியுள்ளன என்கிறது. மார்பகப் புற்றுநோயால் ஏற்படும் மரணங்கள் 352.3% உயர்ந்துள்ளன. 2023-இல் 1.02 லட்சம் பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வயது அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட புள்ளிவிவரப்படி, ஒரு லட்சம் பெண்களுக்கு 29 புதிய பாதிப்புகள் வீதம் பதிவாகியுள்ளது. இது 1990-ஐ விட 126.9% அதிகம். இதேபோல் மரண விகிதம் கடந்த 30 ஆண்டுகளில் 74% அதிகரித்துள்ளது. இந்தியாவைத் தவிர்த்து லாவோஸ் (214%), வங்கதேசம் (91%), வியட்நாம் (80%) போன்ற நாடுகளிலும் மரண விகிதம் பெருமளவு உயர்ந்துள்ளது.

இளவயதுப் பெண்களிடையே அதிகரிக்கும் பாதிப்பு: ஆய்வின்படி, 55 வயதிற்கு மேற்பட்டோருக்குப் பாதிப்பு அதிகமாக இருந்தாலும், 20 முதல் 54 வயதுக்குட்பட்ட பெண்களிடையே புதிய பாதிப்புகள் 29% அதிகரித்துள்ளது. மாதவிடாய் நின்ற பெண்களுக்கு முந்தைய நிலையில் இருக்கும் இளவயதுப் பெண்களிடம் இம்மாற்றம் தெரிவது குறிப்பிடத்தக்கது.

சுமார் 25 சதவீத பாதிப்புகளை சரியான வாழ்வியல் மாற்றங்கள் மூலம் தவிர்க்க முடியும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதிகப்படியான சிவப்பு இறைச்சி (RED MEAT) உட்கொள்ளுதல், புகையிலை மற்றும் மதுப்பழக்கம், உடல் பருமன் (HIGH BMI) மற்றும் போதிய உடல் உழைப்பு இல்லாமை, ரத்தத்தில் அதிக சர்க்கரை அளவு ஆகியவை புற்றுநோயை தூண்டும் முக்கிய காரணிகளாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1990 முதல் 2023 வரை மது மற்றும் புகையிலை தொடர்பான விழிப்புணர்வால் ஓரளவுக்கு முன்னேற்றம் தெரிந்தாலும், உடல் பருமன் மற்றும் சர்க்கரை அளவு தொடர்பான காரணிகளில் எந்தக் குறைவும் ஏற்படவில்லை.

ஆய்வாளர்களின் பரிந்துரைகள்: டாக்டர் லிசா ஃபோர்ஸ், "அனைத்து நாடுகளிலும் ஆரம்பக்கட்ட நோயறிதல் வசதிகள் இருக்க வேண்டும். சிகிச்சைக்கான செலவை குறைப்பதும், உலகளாவிய சுகாதார காப்பீட்டில் மார்பகப் புற்றுநோய் சிகிச்சையை சேர்ப்பதும் நோயாளிகளை பொருளாதார சுமையிலிருந்து பாதுகாக்கும்" என தெரிவித்துள்ளார்.

# “நேர்மையின் மகுடம்”

நகரின் பெரிய அரங்கில் அந்த அழகிப் போட்டி நடந்து கொண்டிருந்தது.
ஒவ்வொரு அழகிகளும் மேடையில் ஒயிலாக நடந்து வந்து, தங்கள் உடல் அழகையும், உடை அலங்காரத்தையும் காட்டித் திரும்பினர்.
அடுத்ததாய் வந்த சவிதா மிகவும் கவர்ச்சியான, ஆனால் வடிவ நேர்த்தியே இல்லாத ஒரு ஆடையில் வந்தாள்.
அவளது நடை தன்னம்பிக்கையோடு இருந்தாலும், அவளது அருவருப்பான ஆடை ஜட்ஜ் பங்கஜம் அவர்களுக்கு அதிர்ச்சியைத் தந்தது.
அவர்களுக்கு சவிதாவின் உடை, இடை, நடை எதுவுமே பிடிக்கவில்லை.

அந்த சவிதா வேறு யாருமில்லை ஜட்ஜ் பங்கஜத்தின் தங்கை மகள். குழந்தைப்பேறு இல்லாத பங்கஜம் சவிதாவைத் தன் மகளாய் எண்ணி அவள் மீது அளவு கடந்த பிரியம் வைத்திருந்தாள்.
அதன் காரணமாக ஜட்ஜ் பங்கஜம் அவளுக்கு அதிக மதிப்பெண்கள் கொடுத்தாள்.
அடுத்து மேடைக்கு வந்தவள் மேனகா.
நேர்த்தியான பாரம்பரிய உடையில், கலாச்சாரத்தைப் பாதுகாக்கும் விதமாய், எளிமையாய், மங்களகரமாய் நடந்தாள்.
அவளது நடையில் ஒரு மரியாதை, ஒரு நிதானம், ஒரு அழகு இருந்தது.




அதைப் பார்த்த பலரும் கை தட்டினார்கள். ஆனால் பங்கஜம் மேடம் அவளுக்கு குறைந்த மார்க் மட்டுமே போட்டாள் தனக்குப் பிடித்த சவிதா ஜெயிக்கணுமே? சில நிமிடங்களில் முடிவு அறிவிக்கப்பட்டது.

“இந்த ஆண்டின் அழகிப் பட்டம்.... சவிதா!”
கைதட்டல்கள் முழங்கின.
சவிதா மேடைக்கு வந்தாள்.
அவள் தலைக்கு கிரீடமும், தோளுக்கு "மிஸ்.மெட்ரோபாலிடன்" சால்வையும், கேடயமும் வழங்கப்பட்டது.
அவளிடம் நிகழ்ச்சி நெறியாளர் மைக்கைத் தர, அனைவரும் அவள் என்ன பேசப் போகிறாள்? என்று காத்திருந்தனர்.
“இந்த கிரீடம் எனக்குக் கிடைத்தது...
ஆனால் இதற்கான உண்மையான உரிமையாளர் நானல்ல...வேறு ஒருவர்.”
அவள் கீழே இருந்த மேனகாவை மேடைக்கு அழைத்தாள்.
அனைவரும் ஆச்சரியமாக பார்த்தனர்.

சவிதா தன் தலையிலிருந்த கிரீடத்தை எடுத்து மேனகாவின் தலையில் அணிவித்தாள். தோளிலிருந்த சால்வையையும், கையிலிருந்த கேடயத்தையும் மேனகாவிடம் கொடுத்தாள்.
“அழகு உடையில் மட்டும் இல்லை... நேர்மையிலும் இருக்கிறது,” என்று சிரித்தாள்.
அரங்கம் முழுவதும் சில நொடிகள் அமைதியாக இருந்தது.
பிறகு, கைதட்டல்கள் அதிர்ந்தன.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# சமத்துவப் பார்வை



நல்ல மனிதர்களுடைய பண்பும் பழக்க வழக்கமும் எந்த சூழ்நிலையிலும் மாறாது. அப்படிப்பட்ட மனிதர்களோடு பழகியதை எப்போதுமே மறக்க முடியாது.
தன்னோடு வேலைசெய்யும் நண்பர் ஒருவர், தன் மகனின் திருமண விருந்திற்காக, நண்பர்களை வீட்டுக்கு அழைத்தார்.
எல்லோரும்போல சாம்பசிவமும் சென்றான்.
அவர் அப்படி ஒன்னும் போற்றி புகழப்பட வேண்டிய மனிதர் இல்லை.
இருந்தாலும், நாகரிகம் கருதி, அழைத்தாரே என்று அவருடைய மகனையும் மருகளையும் வாழ்த்துவதற்காகச் சென்றிருந்தான்.
நண்பரோடு சாம்பசிவம் பல இடங்களில் முரண்பட்டு இருக்கிறான். அவர் சாம்பசிவத்தைவிட பத்து வருடங்கள் வயதில் பெரியவர்.
அவருடைய ஒவ்வொரு செயலும் சகமனிதனை இழிவு படுத்துவதுபோலவும், அடக்கி ஆளுவதைப் போலவும் இருக்கும்.
அவர் சமூகத்தில் உயர்ந்தவர் போல தன்னைக் காட்டிக் கொள்வார். அவர் உடுத்தும் உடை, உட்காரும் முறை, மற்றவர்களோடு பேசும் விதம், சக நண்பர்களோடு பழகும் முறை அனைத்தும் மோசமாகவே இருக்கும்.
அவரைச் சுற்றி ஒரு அடிமைக்கூட்டம், அவர் சொல்வதையெல்லாம் சரி என்று தலையாட்டிக்கொண்டிருக்கும்
இதையெல்லாம் மறந்து, அவருடைய மகனையும் மருமகளையும் வாழ்த்துவதற்காக சென்றபோது, எல்லோரும் போல் இல்லாமல், சாம்பசிவன் ஒரு புத்தகம் கொடுத்து, அவருடைய மகனை வாழ்த்தினான்.
சாம்பசிவத்திற்கு ஒருவிதத்தில் மகிழ்ச்சி.
நண்பர் எதை தூக்கி நிறுத்தி தான் உயர்ந்தவன் என்று சொன்னாரோ, அதையே அவர் மகன் தூக்கி எறிந்து, எல்லோரும்போல நானும் ஒரு சராசரி மனிதன்தான் என்று நிருபித்துக்காட்டினான்.
ஆமாம், நண்பரின் மகன் கலப்புத் திருமணம் செய்து கொண்டான்.
அப்பாவின் அத்தனை வன்மத்தையும் தேங்காய் உடைப்பது போல் உடைத்து எரிந்து, அவன் காதலித்த தோழியையே கைபிடித்தான். அந்த ஒரு காரணத்திற்காகத்தான், சாம்பசிவம் மகிழ்ச்சியாக நண்பரின் வீட்டிற்கு சென்று வாழ்த்தினார்.
பலமுறை நண்பரின் ஆதிக்க மனநிலையை, சாம்பசிவம் வார்த்தைகளால் எதிர்கொள்ள முடியாமல் தோற்றுப்போனார்.
நண்பர் மீண்டும் மீண்டும் திமிரி எழுந்து பிற்போக்கானக் கருத்தையே முன்வைத்து, அதனை நியாயப்படுத்தினார்.
நண்பரின் மகன் அப்பாவின் பிற்போக்குதனத்தை பின்பற்றாமல், புரட்சிகரமான திருமணத்தை செய்தபோது, அதைப்பற்றி எதுவுமே சொல்லமுடியாமல் அமைதியாய் கனத்த இதயத்தோடு “ வாங்க...” என்று அழைத்ததை, நேர்கொண்டு பார்த்து மகிழ்ந்தான் சாம்பசிவம்.
நண்பரின் மகனை வாழ்த்தி, ஆதிக்க வெறிபிடித்த பிற்போக்குவாதியை பார்த்து ஒரு சிரிப்பு சிரித்தான் சாம்பசிவம்.
சாம்பசிவத்தின் சிரிப்பிலிருந்து நண்பருக்கு ஏதோ ஒன்று புரிந்திருக்கிறது.
இரு கைகூப்பி வழியனுப்பிய நண்பர், சாம்பசிவத்தை பார்த்து சிரித்தார்.
நண்பரின் சிரிப்பில் ஆதிக்க திமிர் இல்லாமல், சமத்துவ பார்வை சுடர்விட்டதை நினைத்து, மகிழ்ச்சியாக நடந்தான் சாம்பசிவம்.



- கயப்பக்கம்
இரா.இரமேஷ்

# காலம் மறந்த பொக்கிஷங்கள் !!

. A.S.GOVINDA RAJAN

## உயிர் கொடுத்தல்!!

### எத்தனை பேர் விளையாடலாம்?

கிராமப்புறங்களில் விளையாடும் விளையாட்டுகள் குழந்தைகளுக்கு புத்துணர்ச்சியையும், ஆரோக்கியத்தையும் பெற்றுத்தருவதாக இருக்கின்றன.

அவ்வாறு கிராமங்களில் சிறுவர், சிறுமியர் விளையாடும் விளையாட்டுகளில் ஒன்றுதான் உயிர்கொடுத்தல். இந்த விளையாட்டில் ஓடியாடுவதும் உண்டு. உட்கார்ந்து விளையாடுவதும் உண்டு.

### எத்தனை பேர் விளையாடலாம்?

இந்த விளையாட்டை எத்தனை பேர் வேண்டுமானாலும் ஒன்றாக சேர்ந்து விளையாடலாம்.

### எப்படி விளையாடுவது?

விளையாட்டை தொடங்கும் முன், முதல் போட்டியாளரை தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

முதல் போட்டியாளரை தேர்வு செய்த பிறகு, விளையாட்டை தொடங்கலாம்.

திறந்தவெளி மைதானத்தில் விளையாடப் போகும் சிறுவர்கள் நின்றிருப்பார்கள்.

விளையாட்டு துவங்கியதும் முதல் போட்டியாளர் மைதானத்தில் இருக்கும் சிறுவர்களை துரத்த வேண்டும்.

அவர் தொட்டுவிடாமல் இருக்க, சிறுவர்கள் அங்குமிங்குமாய் ஓடுவார்கள். யாராவது ஒருவரைத் தொடுவது போல் பக்கத்தில் அவர் வரும்போது, அவருக்கு நெருக்கமாக இன்னொருவர் பின்பக்கமாய் வர, அவரைத் தொட்டுவிடும் ஆசையில், முதலில் துரத்தியவரையும் தவறவிடுவார்.



யாரையாவது மிக நெருக்கமாய் தொடுவதற்கு போனால், அவர்கள் சட்டென தரையில் உட்கார்ந்துகொண்டு, 'பாஸ்" என்பார்கள்.

அதன்பிறகு அவர்களைத் தொடக்கூடாது. தொட்டாலும் அவர்கள் 'அவுட்" கிடையாது. அடுத்து, வேறு யாரையாவதுதான் போட்டியாளர் துரத்திச் செல்ல வேண்டும்.

பாதியில் உட்கார்ந்தவர் மீண்டும் விளையாட வேண்டுமானால், விளையாடி கொண்டிருப்பவர்களில் யாராவது ஒருவர் உட்கார்ந்திருப்பவருக்கு உயிர் கொடுக்க வேண்டும். அப்படி உயிர் கொடுத்துவிட்டால், மீண்டும் அவர் விளையாட்டைத் தொடரலாம். துரத்துபவர் வேறு யாரையாவது தொடுவதற்கு முயற்சி செய்துகொண்டே, 'பாஸ்" சொல்லிவிட்டு உட்கார்ந்திருப்பவர் மீதும் ஒரு கண் வைத்துக்கொண்டே துரத்த வேண்டும்.

யாராவது அவரை தொட்டு அவருக்கு உயிர் கொடுக்க முயற்சிப்பார்கள். அப்படி வருபவரைத் தொட்டுவிட வேண்டும்.

போட்டியாளர் யாரையாவது தொட்டுவிட்டால், 'அவுட்". அப்படி அவுட் ஆன நபர் போட்டியாளராய் மாறி, மற்றவர்களை துரத்தி பிடிக்க வேண்டும்.

### பயன்கள் :

கால்கள் வலுப்பெறும்.
உதவும் மனப்பான்மை மேலோங்கும்.
இலக்கை நிர்ணயிக்கும் திறன் மேம்படும்

# (இன்று) சர்வதேச மகளிர் தினத்தின் வரலாறு

கார்ல் மரியா ஸ்டாட்லர் (1888 - நாச் 1943), பொது டொமைன், விக்கிமீடியா காமன்ஸ் வழியாக.
சர்வதேச மகளிர் தினத்தின் வரலாறு சர்வதேச மகளிர் தினம் (IWD) 1900களின் முற்பகுதியிலிருந்து அனுசரிக்கப்படுகிறது - தொழில்மயமாக்கப்பட்ட உலகில் பெரும் விரிவாக்கம் மற்றும் கொந்தளிப்பான காலம், மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் தீவிர சித்தாந்தங்களின் எழுச்சியைக் கண்டது.

பிப்ரவரி மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை, முதலாம் உலகப் போரில் 2 மில்லியனுக்கும் அதிகமான ரஷ்ய வீரர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலளிக்கும் விதமாக "ரொட்டி மற்றும் அமைதி" என்ற கோரிக்கைக்காக ரஷ்ய பெண்கள் வேலைநிறுத்தத்தைத் தொடங்கினர். அரசியல் தலைவர்களால் எதிர்க்கப்பட்ட பெண்கள், நான்கு நாட்களுக்குப் பிறகு ஜார் பதவி விலக வேண்டிய கட்டாயம் ஏற்படும் வரை தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். தற்காலிக அரசாங்கம் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கியது. ரஷ்யாவில் அப்போது பயன்பாட்டில் இருந்த ஜூலியன் நாட்காட்டியின்படி பிப்ரவரி 23 ஞாயிற்றுக்கிழமை பெண்கள் வேலைநிறுத்தம் தொடங்கியது. மற்ற இடங்களில் பயன்பாட்டில் இருந்த கிரிகோரியன் நாட்காட்டியில் இந்த நாள் மார்ச் 8 ஆகும்.

1975
சர்வதேச மகளிர் தினம் முதன்முறையாக ஐக்கிய நாடுகள் சபையால் 1975 இல் கொண்டாடப்பட்டது. பின்னர் டிசம்பர் 1977 இல், பொதுச் சபை, அவர்களின் வரலாற்று மற்றும் தேசிய மரபுகளுக்கு ஏற்ப, உறுப்பு நாடுகளால் ஆண்டின் எந்த நாளிலும் பெண்கள் உரிமைகள் மற்றும் சர்வதேச அமைதிக்கான ஐக்கிய நாடுகள் தினத்தைக் கொண்டாட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

1996 ஆம் ஆண்டு
ஐ.நா. தனது முதல் வருடாந்திர கருப்பொருளான "கடந்த காலத்தைக் கொண்டாடுதல், எதிர்காலத்திற்கான திட்டமிடல்" என்பதை அறிவித்தது, அதைத் தொடர்ந்து 1997 ஆம் ஆண்டில் "அமைதி மேசையில் பெண்கள்", 1998 இல் "பெண்கள் மற்றும் மனித உரிமைகள்", 1999 இல் "பெண்களுக்கு எதிரான வன்முறை இல்லாத உலகம்", மற்றும் பலவற்றை ஒவ்வொரு ஆண்டும் அறிவித்தது .

2000
புதிய மில்லினியத்திற்குள், பெரும்பாலான நாடுகளில் சர்வதேச மகளிர் தினத்திற்கான முக்கிய நிகழ்வுகள் குறைவாகவே இருந்தன. உலகம் முன்னேறியிருந்தது, பல துறைகளில், பெண்ணியம் ஒரு பிரபலமான தலைப்பாக இல்லை. சர்வதேச மகளிர் தினத்தை மீண்டும் தூண்டிவிடவும், அதற்குத் தகுதியான மரியாதையை வழங்கவும், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஏதாவது தேவைப்பட்டது. செய்ய வேண்டிய அவசர வேலைகள் இருந்தன - போராட்டங்கள் வெல்லப்படவில்லை, பாலின சமத்துவம் இன்னும் அடையப்படவில்லை. முக்கிய மக்களை ஈடுபடுத்தவும், கூட்டு நடவடிக்கையை ஊக்குவிக்கவும் ஆதரிக்கவும் ஒரு வலுவான தேவை இருந்தது.

2001
பல்வேறு மகளிர் குழுக்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் ஒரு வருட திட்டமிடல் மற்றும் கூட்டு உரையாடல்களைத் தொடர்ந்து, internationalwomensday.com தளம், நாளை மீண்டும் உற்சாகப்படுத்துதல் மற்றும் வெகுஜன பங்கேற்பை அழைப்பது என்ற குறிப்பிட்ட நோக்கத்துடன் தொடங்கப்பட்டது, இந்த கவனம் இன்றுவரை தொடர்கிறது, பெண்களின் சாதனைகளைக் கொண்டாடுவதன் மூலமும், அவற்றைக் காணக்கூடியதாக மாற்றுவதன் மூலமும், அதே நேரத்தில் பாலின சமத்துவத்தை விரைவுபடுத்துவதற்கான அழைப்பைத் தொடர்கிறது. சமூக ஊடகங்களுக்கு முந்தைய உலகில், சமூகங்களை இணைக்கவும் அணிதிரட்டவும் பேஸ்புக் இல்லை; நிகழ்வுகளை வெளியிடவும் விளம்பரப்படுத்தவும் Eventbrite இல்லை; கூட்டு நடவடிக்கையைத் தூண்டுவதற்கு Instagram, Twitter, LinkedIn அல்லது TikTok இல்லை. பெண்களின் எழுச்சி இன்னும் பெரும்பாலும் ஆண்களின் வீழ்ச்சியாகக் காணப்பட்ட காலம் இது. எனவே, 2001 ஆம் ஆண்டில், IWD நிகழ்வுகளை ஊக்குவிப்பதற்கும், அன்றைய தினம் மற்றும் பரந்த பாலினப் பிரச்சினைகள் பற்றிய தகவல்களைப் பகிர்வதற்கும், பெண்களின் சாதனைகளைக் கொண்டாடுவதற்கும் ஒரு இலவச பயனுள்ள மையத்தை வழங்கும் கூட்டு மனப்பான்மையில் வலைத்தளம் தொடங்கப்பட்டது.

2011
ஆம் ஆண்டு 2011 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தின் 100வது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது - முதல் IWD நிகழ்வு சரியாக 100 ஆண்டுகளுக்கு முன்பு 1911 இல் ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்தில் நடைபெற்றது. அமெரிக்காவில், ஜனாதிபதி பராக் ஒபாமா மார்ச் 2011 ஐ " பெண்கள் வரலாற்று மாதம் " என்று அறிவித்தார், அமெரிக்கர்கள் நாட்டின் வரலாற்றை வடிவமைப்பதில் "பெண்களின் அசாதாரண சாதனைகளை" சிந்தித்து IWD ஐக் குறிக்க அழைப்பு விடுத்தார். அப்போதைய வெளியுறவுத்துறை செயலாளர் ஹிலாரி கிளிண்டன், "100 பெண்கள் முன்முயற்சி: சர்வதேச பரிமாற்றங்கள் மூலம் பெண்கள் மற்றும் சிறுமிகளை மேம்படுத்துதல்" என்ற திட்டத்தைத் தொடங்கினார். யுனைடெட் கிங்டமில், பிரபல ஆர்வலர் அன்னி லெனாக்ஸ், லண்டனின் சின்னமான பாலங்களில் ஒன்றின் வழியாக ஒரு அணிவகுப்பை வழிநடத்தி, உலகளாவிய தொண்டு நிறுவனமான WOMEN க்கு ஆதரவாக விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார். ஆக்ஸ்பாம் போன்ற மேலும் தொண்டு நிறுவனங்கள் விரிவான IWD செயல்பாட்டை நடத்தியுள்ளன. பல பிரபலங்கள் மற்றும் வணிகத் தலைவர்கள் இந்த நாளை தீவிரமாக ஆதரிக்கின்றனர். IWD இறுதியாக மிகவும் பிரதான நீரோட்டமாகவும் உள்ளடக்கியதாகவும் மாறத் தொடங்கியது, எல்லா இடங்களிலும் குழுக்கள் பங்கேற்கின்றன.
IWD வரலாறு மற்றும் அணிவகுப்புகள் பற்றி


2025 மற்றும் அதற்குப் பிறகு உலகம் பெண்கள் சமத்துவம் மற்றும் விடுதலை பற்றிய பெண்கள் மற்றும் சமூகத்தின் சிந்தனைகளில் குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் மனப்பான்மை மாற்றத்தையும் கண்டுள்ளது. இளைய தலைமுறையைச் சேர்ந்த பலர் பெண்களுக்கான அனைத்துப் போராட்டங்களும் வெற்றி பெற்றுவிட்டன என்று உணரலாம், அதே நேரத்தில் 1970கள் மற்றும் அதற்குப் பிறகு பல பெண்ணியவாதிகள் ஆணாதிக்கத்தின் நீண்ட ஆயுளையும் ஆழமாக வேரூன்றிய சிக்கலான தன்மையையும் நன்கு அறிந்திருக்கிறார்கள். வாரிய அறையில் அதிகமான பெண்கள், சட்டமன்ற உரிமைகளில் அதிக சமத்துவம் மற்றும் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் ஈர்க்கக்கூடிய முன்மாதிரிகளாக பெண்கள் தெரிவுநிலை அதிகரித்திருப்பதால், பெண்கள் உண்மையான சமத்துவத்தைப் பெற்றுள்ளனர் என்று ஒருவர் நினைக்கலாம். துரதிர்ஷ்டவசமான உண்மை என்னவென்றால், பெண்கள் இன்னும் தங்கள் ஆண் சகாக்களுக்கு சமமாக ஊதியம் பெறவில்லை, வணிகம் அல்லது அரசியலில் பெண்கள் இன்னும் சம எண்ணிக்கையில் இல்லை, மேலும் உலகளவில் பெண்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் அவர்களுக்கு எதிரான வன்முறை ஆண்களை விட மோசமாக உள்ளது. இருப்பினும், பெரிய முன்னேற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. எங்களிடம் பெண் விண்வெளி வீரர்கள் மற்றும் பிரதமர்கள் உள்ளனர்.


பல செய்தி வலைத்தளங்கள் தங்கள் வாடிக்கையாளர்களுடன் இணைந்து கட்டண அடிப்படையிலான 'சிறப்பு IWD அம்சங்கள்' இயக்குவதன் மூலம் IWD-யில் தீவிரமாக ஈடுபடுகின்றன. சர்ச்சையை உருவாக்குவதன் மூலமோ அல்லது ஒத்துழைப்பை உருவாக்குவதன் மூலமோ, பெண்களை மையமாகக் கொண்ட உள்ளடக்கத்திற்கு தெரிவுநிலை மற்றும் போக்குவரத்தை அதிகரிக்க தங்களால் முடிந்ததைச் செய்கின்றன. IWD-ஐ ஊக்குவிக்கும் உலகம் முழுவதும் அச்சு மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கத்தின் உயர்வு, பெண்கள் சமத்துவம் பற்றிய உலகளாவிய உரையாடல் மற்றும் கதைக்கு சாதகமாக பங்களிக்கிறது.

அரசியல் பேரணிகள், வணிக மாநாடுகள், அரசாங்க நடவடிக்கைகள் மற்றும் நெட்வொர்க்கிங் நிகழ்வுகள் முதல் உள்ளூர் பெண்கள் கைவினை சந்தைகள், நாடகம் நிகழ்ச்சிகள், ஃபேஷன் அணிவகுப்புகள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய உலகெங்கிலும் உள்ள பெண்களை இணைக்கும் பணக்கார மற்றும் பன்முகத்தன்மை கொண்ட உலகளாவிய வலை. பல உலகளாவிய நிறுவனங்கள் தங்கள் சொந்த நிகழ்வுகள் மற்றும் பிரச்சாரங்களை நடத்துவதன் மூலம் IWD ஐ தீவிரமாக ஆதரிக்கிறது. எடுத்துக்காட்டாக, மார்ச் 8 ஆம் தேதி கூகிள் அதன் உலகளாவிய தேடல் பக்கங்களில் IWD ஐ கௌரவிக்கும் வகையில் அதன் கூகிள் டூடுலை அடிக்கடி மாறுகிறது - மேலும் அதன் சொந்த கணக்கு IWD கருப்பொருளையும் கூட நியமிக்கிறது, இது 2023 இல் DareToBe ஆகும் .
ஆண்டுதோறும், IWD நிச்சயமாக அந்தஸ்தில் அதிகரித்து வரும் ஒரு சக்திவாய்ந்த தருணமாகும். எனவே ஒரு மாற்றத்தை ஏற்படுத்துங்கள், உலகளவில் சிந்தித்து உள்ளூரில் செயல்படுங்கள்.
IWD செயல்பாட்டின் அனைத்து தேர்வுகளும் செல்லுபடியாகும், அதுதான் IWD ஐ மிகவும் உள்ளடக்கியதாக ஆக்குகிறது. நல்ல போராட்டத்தை எதிர்த்துப் போராட அனைவருக்கும் உதவ ஒரு இடமும் இடமும் இருக்கிறது. அதுதான் மிகுதியின் உணர்வு. எனவே ஒவ்வொரு நாளையும் சர்வதேச மகளிர் தினமாக்குங்கள். பெண்களின் எதிர்காலம் பிரகாசமாகவும், சமமாகவும், பாதுகாப்பாகவும், பலனளிப்பதாகவும் இருப்பதை உறுதிசெய்ய உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்.




# தினம் ஒரு தலைவர்கள் எஸ்.ஓ.எஸ்.பி. உடையப்பா அம்பலம் வரலாறு






பாகனேரி எஸ்.ஓ.எஸ்.பி. உடையப்பா அம்பலம் என்பவர் சுதந்திர போராட்ட வீரர் ஆவார். இவர் காங்கிரஸ் கட்சியினை சேர்ந்தவர் மாற்றும் பாகனேரி ஜில்லாபோர்டு தலைவராக இருந்தார்.

1934 ஆம் ஆண்டு இவரது உறவினர்களான பாகனேரி நடராஜ தேவர், ஆர். வி. சுவாமிநாதன் தேவர், எஸ். ஓ. எஸ். பி. பில்லப்பா அம்பலம் மற்றும் இவரது முயற்சியாலும், மகாத்மா காந்தியடிகள் இரண்டாவது முறையாக பாகனேரிக்கு வருகை தந்தார். இவர் காந்தியடிகளுக்கு வெள்ளிப் பேழையில் வைத்து கதர் துணி அச்சிடப்பெற்ற வரவேற்பும், தங்கத்தினால் ஆன கைராட்டையும் பரிசாக வழங்கினார். அதனை மகாத்மா காந்தியடிகள் ஏலத்திற்கு விட்டார். அதனை இவரே அதிக விலைக்கு பெற்றார். இன்றளவும் அவருடைய குடும்பத்தில் இவை பாதுகாப்பாக உள்ளன.

சிவகங்கை மாவட்டத்தின், முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தவர். ஜவகர்லால் நேரு, சத்தியமூர்த்தி, ராஜாஜி போன்றவர்களுடன் மிகவும் நெருக்கமாக இருந்தார். சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட இவருக்கு, ஆங்கில அரசாங்கம் ஆறு மாதம் சிறை தண்டனை வழங்கியது.

இவருடைய மகன் ஓ. சுப்பிரமணியன், 1977, 1980, 1984 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களில், சிவகங்கை தொகுதியிலிருந்து, இந்திய தேசிய காங்கிரசு கட்சி சார்பாக போட்டியிட்டு, தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.



கள்ளர் மரபை சேர்ந்த சுதந்திர போராட்ட வீரர்கள் பாகனேரி நடராஜ தேவர், பாகனேரி எஸ்.ஓ.எஸ்.பி. பில்லப்பா அம்பலம், பாகனேரி எஸ்.ஓ.எஸ்.பி. உடையப்பா அம்பலம் (வெள்ளையர்கள் காலத்தில் ஜில்லாபோர்டு தலைவராக இருந்த முன்னோடி), ஆர். வி. சுவாமிநாதன் தேவர் (மத்திய இணையமைச்சர், குற்றப்பரம்பரை சட்டத்தை எதிர்த்து சட்டமன்றத்தில் முதல் தீர்மானம் கொண்டுவந்தவர்)

பாகனேரி நாட்டில் வழக்கத்தில் உள்ள புல்வநாயகி அம்மன் தல வரலாறு கூறும் ஓலைச்சுவடியில் எட்டாம் நாள் மண்டகப்படி வாளுக்குவேலிபுரத்தை சேர்ந்த பில்லப்பன் அம்பலம் மற்றும் உடையப்பா அம்பலம் ஆகியோரும் நடத்தும் உரிமை உடையவர்கள். மண்டகப்படியின் போது " முத்துவிசய ரகுநாத கரியான் வாளுக்குவேலி பில்லப்பா அம்பலம், உடையப்பா அம்பலம் புல்வநாயகி அம்மனுக்கு மண்டகப்படி வைத்துக் கேளிக்கை பார்க்கிற பிரஸ்தாபத்தினாலே" எனும் வாசகம் வாசிக்கப்படுகிறது.

# காதல் மனைவிக்கு ஆடம்பர காரை பரிசளித்த அல்லு அர்ஜுன்





இந்திய திரையுலகின் பிரபல நடிகர்களில் ஒருவர் அல்லு அர்ஜூன். இவர் நடிப்பில் சமீபத்தில் வெளியான திரைப்படங்கள் மாபெரும் வெற்றி பெற்று, வசூலிலும் சாதனை படைத்தன. இந்த வரிசையில், நடிகர் அல்லு அர்ஜூன் தற்போது இயக்குநர் மற்றும் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கும் திரைப்படங்களில் நடிக்கிறார்.

சமீபத்தில் அல்லு அர்ஜூன் குடும்ப திருமண விழா நடைபெற்றது. இதில் இந்திய திரையுலகை சேர்ந்த பல பிரபலங்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். இந்த நிலையில், நடிகர் அல்லு அர்ஜூன் மற்றும் அல்லு ஸ்னேகா ரெட்டி தம்பதி தங்களது 15-வது திருமண நாளை கொண்டாடினர்.

திருமண நாளை ஒட்டி நடிகர் அல்லு அர்ஜூன் தனது மனைவிக்கு ஆடம்பர மெர்சிடிஸ் பென்ஸ் ஏ.எம்.ஜி. காரை பரிசளித்துள்ளார். இது தொடர்பாக அல்லு அர்ஜூன் தரப்பில் வெளியான வீடியோ சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்படுகிறது. அல்லு அர்ஜூன் பரிசளித்துள்ள ஆடம்பர காரின் விலை இந்திய மதிப்பில் கிட்டத்தட்ட ரூ. 1 கோடி வரை இருக்கும் என்று தெரிகிறது.

தாராள கவர்ச்சியான ரோல்களில் நடித்து தமிழ் சினிமாவில் பாப்புலர் ஆனவர் யாஷிகா ஆனந்த். இருட்டு அறையில் முரட்டு குத்து என்ற ஒரே படம் அவரை புகழின் உச்சிக்கே கொண்டு சென்றது. அதற்கு பிறகு பிக் பாஸ் நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டார். தற்போதும் தொடர்ந்து கிளாமர் ரோல்களில் அவர் நடித்து வருகிறார். தற்போது இலங்கை சென்று இருக்கும் யாஷிகா ஆனந்த், கொழும்புவில் கடற்கரை அருகில் ஹாட் உடையில் எடுத்த புகைப்படங்கள் வெளியிட்டுள்ளார். இதோ பாருங்க.



# ஆரண்ய காண்டம் ரீ ரிலீஸ் அப்டேட்






தமிழ் திரையுலகின் குறிப்பிடத்தக்க இயக்குநர்களில் ஒருவர் தியாகராஜன் குமாரராஜா. ஆரண்ய காண்டம், சூப்பர் டீலக்ஸ் மற்றும் மாடர்ன் லவ் சென்னை (நினைவோ ஒரு பறவை) உள்ளிட்ட திரைப்படங்களை இயக்கியுள்ளார். இதைத் தொடர்ந்து இயக்குநர் தியாகராஜன் குமாரராஜா "பாக்கெட் நாவல்" படத்தை இயக்கி வருகிறார்.

இந்த நிலையில், தியாகராஜன் குமாரராஜா இயக்கத்தில் கடந்த 2010-ஆம் ஆண்டு வெளியான "ஆரண்ய காண்டம்" திரைப்படம் மீண்டும் ரீ-ரிலீஸ் ஆகிறது. ஆரண்ய காண்டம் திரைப்படம் வருகிற 13-ஆம் தேதி மீண்டும் ரீ-ரிலீஸ் ஆவதை திங்க் ஸ்டூடியோஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. மேலும், இது குறித்த போஸ்டரையும் வெளியிட்டுள்ளது.

இயக்குநர் தியாகராஜன் குமாரராஜா இயக்கித்தில் வெளியான முதல் திரைப்படமான "ஆரண்ய காண்டம்" பல விருதுகளை வென்று குவித்தது. இந்தப் படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்திருந்தார். வெளியீட்டின் போது வெற்றி பெறாமல், பின்னர் மக்களால் கொண்டாடப்பட்ட நிலையில், தற்போது இந்தப் படத்தின் ரீ-ரிலீஸ் அறிவிப்பு ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# யூத் டிரெய்லரை வெளியிட்டு கென் கருணாஸை பாராட்டித் தள்ளிய சிலம்பரசன்



'அசுரன்', 'விடுதலை 2' படங்களின் மூலம் தமிழ் சினிமாவில் நடிகராக அறிமுகமானவர் கென் கருணாஸ். இதுதவிர சில திரைப்படங்களில் உதவி இயக்குநராக பணியாற்றி இருக்கும் கென் கருணாஸ் "யூத்" திரைப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். இந்தப் படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார்.

இந்தப் படம் மார்ச் 19-ஆம் தேதி வெளியாகும் என படக்குழு தெரிவித்து இருக்கிறது. 'யூத்' திரைப்படத்தை பார்வதா என்டர்மெய்ன்மென்ட் நிறுவனம் சார்பில் கருப்பையா சி. ராம் தயாரித்துள்ளார். தேவதர்ஷினி மற்றும் சுராஜ் வெஞ்சாரமூடு ஆகியோர் இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்தப் படம், பள்ளிக்கூட பின்னணியில் உருவாகியுள்ளது.

'யூத்' படத்தின் 'முட்ட கலக்கி,' 'பறந்தேனே பெண்ணே' மற்றும் 'ஆச புள்ள' பாடல்கள் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்த நிலையில், 'யூத்' திரைப்படத்தின் டிரெய்லரை நடிகர் சிலம்பரசன் வெளியிட்டுள்ளார். இன்று மாலை வெளியாக இருந்த நிலையில், டிரெய்லர் ரிலீஸ் சில மணி நேரங்கள் தாமதமாகி இருக்கிறது.கென் கருணாஸ் எழுதி, இயக்கி இருக்கும் யூத் திரைப்படத்தின் டிரெய்லரை தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் பகிர்ந்த நடிகர் சிலம்பரசன், "யூத் திரைப்படத்தின் டிரெய்லரை புத்துணர்ச்சியுடனும், நம்பிக்கையுடனும் வழங்குவதில் மகிழ்ச்சி!


இயக்குநராக அறிமுகமாகி இருக்கும் கென் கருணாஸ் தம்பிக்கு வாழ்த்துக்கள். இவ்வளவு இளம் வயதிலேயே நடிப்பு மற்றும் இயக்கம் இரண்டையும் பொறுப்பேற்று இருப்பது பாராட்டுக்கு உரியது. நீங்கள் எதிர்காலத்தில் பெரிய உயரங்களை அடைய வாழ்த்துகிறேன். முழு குழுவிற்கும் ஒரு பிளாக்பஸ்டர் வெற்றிக்காக வாழ்த்துக்கள்," என்று குறிப்பிட்டுள்ளார்.

96 படத்தில் குட்டி ஜானுவாக நடித்து பிரபலம் ஆனவர் கௌரி கிஷன். அவருக்கு அந்த படத்திற்கு பிறகு அதிகம் பட வாய்ப்புகள் வந்தது. தற்போது அதன் மூலமாக தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் நடிகையாக இருக்கிறார் அவர்.

இந்நிலையில் கௌரி கிஷன் ரெட் ஹாட் உடையில் மொட்டைமாடியில் போட்டோஷூட் நடத்தி இருக்கிறார். அதன் புகைப்படங்கள் தற்போது வைரல் ஆகி இருக்கிறது. ஹோம்லியாக இருந்த அவரா இப்படி என ரசிகர்களும் ஆச்சர்யம் அடைந்திருக்கின்றனர்.



# 99/66 விமர்சனம்



ரச்சிதா மகாலட்சுமி மற்றும் அவரது கணவர் சபரி, அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் 66-வது எண் வீட்டை வாங்கி குடியேறுகிறார்கள். அதே குடியிருப்பில் 99-வது எண் வீட்டில் வசிக்கும் ஸ்வேதாவுடன் ரச்சிதாவுக்கு நட்பு உருவாகிறது. இருவரும் அடிக்கடி சந்தித்து பேசி வருகிறார்கள்.

இந்நிலையில், பணத்திற்காக ரச்சிதாவை கொலை செய்ய அவரது கணவர் பல்வேறு திட்டங்கள் போடுகிறார். ஆனால் ஒவ்வொரு முறையும் ரச்சிதா அதிலிருந்து தப்பித்து விடுகிறார். இதற்கிடையே ஒரு இரவு, ஸ்வேதாவை அவரது கணவர் கொலை செய்ய முயற்சிப்பதை ரச்சிதா பார்க்கிறார். அவரை காப்பாற்ற குடியிருப்புவாசிகளுடன் செல்லும் போது, ஸ்வேதா ஏற்கனவே இறந்துவிட்டார் என்பதும், 99-வது எண் வீட்டில் யாரும் வசிக்கவில்லை என்பதும் தெரிய வருகிறது.

நாயகர்களாக நடித்திருக்கும் சபரி மற்றும் ரோகிந்த் இருவரும் புதுமுகங்களாக இருந்தாலும், தங்களது கதாபாத்திரத்தை சரியாக கையாள்கிறார்கள்.

சாம்ஸ், முல்லை, கோதண்டம், சிங்கம்புலி ஆகியோரின் காமெடி பெரிதாக தாக்கம் ஏற்படுத்தவில்லை. ஆனால் பவன் கிருஷ்ணா, கே.ஆர்.விஜயா, பி.எல். தேனப்பன் உள்ளிட்டவர்களின் கதாபாத்திரங்கள் திரைக்கதைக்கு ஓரளவு பலம் சேர்க்கின்றன.

## இயக்கம்

கதை, திரைக்கதை, வசனம், இசை என அனைத்தையும் கவனித்துள்ள இயக்குநர் எம்.எஸ்.மூர்த்தி, வழக்கமான திகில் பாணியில் கதையை சொல்லியிருந்தாலும், பல திருப்பங்களின் மூலம் படத்தை விறுவிறுப்பாக நகர்த்த முயற்சி செய்து இருக்கிறார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்ற கருத்தையும் படத்தின் மூலம் சொல்ல முயற்சித்திருக்கிறார். அதோடு, மனிதர்கள் சாதி போன்ற தேவையற்ற பிரிவுகளை விட்டு மனிதநேயத்தோடு வாழ வேண்டும் என்ற கருத்தையும் சுருக்கமாக பதிவு செய்கிறார்.

## ஒளிப்பதிவு

ஒளிப்பதிவாளர் சேவிலோ ராஜா, ஒரே அடுக்குமாடி குடியிருப்பை பல்வேறு கோணங்களில் காட்சிப்படுத்தி ஒரே இடத்தில் நடக்கும் கதை என்ற உணர்வை குறைத்திருக்கிறார்.

# யூத் படத்தின் டிரெய்லர் ரிலீசில் புது சிக்கல்..!






'அசுரன்', 'விடுதலை 2' படங்களின் மூலம் தமிழ் சினிமாவில் நடிகராக அறிமுகமானவர் கென் கருணாஸ். இதுதவிர சில திரைப்படங்களில் உதவி இயக்குநராக பணியாற்றி இருக்கும் கென் கருணாஸ் "யூத்" திரைப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். இந்தப் படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார்.

இந்தப் படம் மார்ச் 19ம் தேதி வெளியாகும் என படக்குழு தெரிவித்து இருக்கிறது. 'யூத்' திரைப்படத்தை பார்வதா என்டர்மெய்ன்மென்ட் நிறுவனம் சார்பில் கருப்பையா சி. ராம் தயாரித்துள்ளார். தேவதர்ஷினி மற்றும் சுராஜ் வெஞ்சாரமூடு ஆகியோர் இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்தப் படம், பள்ளிக்கூட பின்னணியில் உருவாகியுள்ளது.

'யூத்' படத்தின் 'முட்ட கலக்கி,' 'பறந்தேனே பெண்ணே' மற்றும் 'ஆச புள்ள' பாடல்கள் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்த நிலையில், 'யூத்' திரைப்படத்தின் டிரெய்லர் அப்டேட் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி யூத் திரைப்படத்தின் டிரெய்லர் நாளை மாலை வெளியாக இருக்கிறது.

கென் கருணாஸ் எழுதி, இயக்கி இருக்கும் யூத் திரைப்படத்தின் டிரெய்லரை நடிகர் சிலம்பரசன் இன்று மாலை 5 மணிக்கு வெளியிடுவார் என்று அறிவிக்கப்பட்டது. எனினும், இந்தப் படத்தின் டிரெய்லர் இதுவரை வெளியாகவில்லை. இந்த நிலையில் டிரெய்லர் குறித்து X தளத்தில் பதிவிட்டுள்ள யூத் படத்தின் தயாரிப்பு நிறுவனம், "தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக படத்தின் டிரெய்லர் வெளியீடு தாமதமாகி இருக்கிறது.

உங்களை காத்திருக்க செய்ததற்கு மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, உங்கள் பொருமையை பாராட்டுகிறோம். டிரெய்லர் விரைவில் வெளியிடப்படும். இது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடுகிறோம்," என்று குறிப்பிட்டுள்ளது.

# செல்லமடா நீ எனக்கு விமர்சனம்



தாய்மகன் உறவில் இருக்கும் பாசம், வேதனை மற்றும் தியாகங்களை உணர்ச்சியோடு சொல்லி இருக்கிறார் இயக்குனர்.

சிறுவயதில் இருந்தே நாயகன் வசீகரன் தனது தாய் செந்தியை வெறுத்து அவமானப்படுத்தி வருகிறார். ஆனால் அந்த தாய், மகன்தான் தனது உலகம் என்ற எண்ணத்தில், அவனுக்காக எண்ணற்ற தியாகங்களை செய்து அமைதியாக வாழ்ந்து வருகிறார். மகன் காட்டும் வெறுப்பையும் அவமதிப்பையும் மனதில் புதைத்து கொண்டு, ஒரு நாள் அவன் தனது அன்பை புரிந்துகொள்வான் என்ற நம்பிக்கையோடு வாழ்க்கையை தாங்கி நிற்கிறார் அந்த தாய்.

இறுதியில் வசீகரன் ஏன் தாயை இவ்வளவு வெறுக்கிறார்? அவரது தந்தை யார்? அந்த தாயின் கடந்த காலத்தில் என்ன நடந்தது? என்பதே படத்தின் மீதிக்கதை.

சிறுவயதில் இருந்து தாயை ஒதுக்கி விட்டு வாழும் வசீகரன், இறுதியில் தனது தாயின் வாழ்க்கை பின்னணி மற்றும் அவர் செய்துள்ள தியாகங்களை அறியும் தருணத்தில் மனம் உடைந்து கதறி அழும் காட்சிகள் பார்வையாளர்களையும் கண்கலங்க வைக்கிறது. மகனின் அன்புக்காக ஏங்கி தவிக்கும் தாயாக பசங்க செந்தி நடிப்பு படத்தின் முதுகெலும்பாக அமைந்துள்ளது.

காதலியாக வரும் நேகாவுக்கு காட்சிகள் குறைவாக இருந்தாலும், வசீகரனிடம் அவரது தாயின் உண்மையான பாசத்தை எடுத்துரைக்கும் காட்சிகளில் அமைதியான மற்றும் இயல்பான நடிப்பை வழங்கியுள்ளார். நண்பனாக வரும் அமுதவாணன் தனது கலகலப்பான வசனங்களால் படத்தின் இடையிலான சோகத்தை சற்றே குறைத்து சிரிப்பை ஏற்படுத்துகிறார். திருடன் கதாபாத்திரத்தில் வரும் போஸ் வெங்கட் மற்றும் மீரா கிருஷ்ணன் ஆகியோரின் நடிப்பு கதைக்கு கூடுதல் பலம் சேர்க்கிறது. சில துணை கதாபாத்திரங்களுக்கு நடிப்பில் இன்னும் கவனம் செலுத்தி இருக்கலாம்.

தாய்மகன் உறவில் இருக்கும் பாசம், வேதனை மற்றும் தியாகங்களை உணர்ச்சியோடு சொல்லி இருக்கிறார் இயக்குனர் ஆனந்த் சிவம். சில இடங்களில் காட்சிகள் இன்னும் அழுத்தமாக அமைந்திருந்தால் படத்தின் தாக்கம் அதிகரித்திருக்கும்.

தாஜ்நூர் இசையில் பாடல்கள் அனைத்தும் கேட்கும் ரகம். பின்னணி இசையை ஓரளவிற்கு ரசிக்க முடிகிறது. செல்வா.ஆர் ஒளிப்பதிவு கிராமத்து சூழலையும் கதையின் உணர்ச்சிகளையும் அழகாக பதிவு செய்துள்ளது.



பிரபல நடிகர் ராஜசேகரின் மகள் சிவாத்மிகா தற்போது தமிழ், தெலுங்கில் பல படங்களில் நடித்து பாப்புலர் ஆகி வருகிறார். தமிழில் கடந்த வருடம் ரிலீஸ் ஆன ஆரோமலே என்ற படத்தில் அவர் ஹீரோயினாக நடித்திருந்தார். இந்நிலையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள சேலையில் கியூட்டாக சிவாத்மிகா வந்திருக்கும் புகைப்படங்களை பாருங்க. இன்ஸ்டாவில் அவருக்கு 5.6 லட்சம் ரசிகர்கள் இருக்கும் நிலையில் இந்த போட்டோக்களுக்கு லைக்குகள் குவிகிறது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# சின்னத்திரையில் நேர்மையாக பாராட்டுகளை கேட்கும் வாய்ப்பு அரிது - நடிகர் சமுத்திரக்கனி



100 மில்லியன் பார்வை நிமிடங்களை கடந்து சாதனை படைத்துள்ளது.

இந்தியாவின் முன்னணி ஓ.டி.டி. தளமான ZEE5-இல் கடந்த பிப்ரவரி 27-ஆம் தேதியன்று வெளியான தமிழ் ஒரிஜினல் சீரிஸ் "தடயம்", வெளியான சில நாட்களிலேயே ரசிகர்களின் பெரும் வரவேற்பில் 100 மில்லியன் பார்வை நிமிடங்களை கடந்து சாதனை படைத்துள்ளது.

தமிழில் உருவாகும் க்ரைம் த்ரில்லர் கதைகளில் இருந்து மாறுபட்டு, உண்மை சம்பவங்களின் பின்னணியுடன் பரபரப்பும் மர்மமும் நிறைந்த அனுபவத்தை வழங்கும் இந்த சீரிஸ், ரசிகர்களிடமும், விமர்சகர்களிடமும் நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. வெளியான சில நாட்களுக்குள் 100 மில்லியன் பார்வை நிமிடங்களை கடந்துள்ளது அதன் வெற்றியை நிரூபிக்கிறது.

இதனைக் கொண்டாடும் வகையில், படக்குழு பத்திரிக்கை ஊடக நண்பர்களை சந்தித்து, விமர்சனங்களுக்கும் பாராட்டுகளுக்கும் நன்றி தெரிவித்தனர். அப்போது நடிகர் சமுத்திரகனி பேசும் போது, "ஒவ்வொரு மனசும் ஒரு நிறைவைத் தேடி ஏங்கிக்கொண்டே இருக்கும். 'தடயம்' அந்த நிறைவை மிகவும் ஆழமாக மனசுக்குள் கொண்டு வந்து பல விஷயங்களை சரி செய்த மாதிரி உணர்வைத் தருகிறது. அதுதான் இந்த வெற்றியின் மகிழ்ச்சி.

நான் சின்னத்திரையில் கிட்டத்தட்ட 3000 எபிசோடுகள் இயக்கியிருக்கிறேன். ஆனால் அந்த பயணத்தில் இவ்வளவு நேர்மையாக பாராட்டுகளை கேட்கும் வாய்ப்பு அரிது. இன்று அந்த அங்கீகாரம் கிடைத்திருப்பது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது," என்றார்.



ஜீ தமிழ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான யாரடி நீ மோகினி என்ற சீரியல் மூலம் தமிழ் சின்னத்திரை ரசிகர்களிடம் பிரபலமானவர் தான் யமுனா. இந்த சீரியலில் பேயாக சித்ரா என்ற கதாபாத்திரத்தில் நடித்தார். சின்னத்திரையை தாண்டி தமிழ், தெலுங்கு என பல மொழிகளிலும் படங்கள் கமிட்டாகி நடித்துள்ளார். வெயில், ஜிகர்தண்டா டபுள் எக்ஸ், செய், கொலை உள்ளிட்ட படங்களிலும் யமுனா நடித்துள்ளார்.

# AlluArjun இல்ல திருமணத்தில் கலந்து கொண்ட சூர்யா - வைரல் புகைப்படங்கள்



மனமக்களுடன் சூர்யா எடுத்துக்கொண்ட புகைப்படமும்

சிரஞ்சீவி, அல்லு அர்ஜுனுடன் சூர்யா எடுத்துக்கொண்ட புகைப்படமும் இணையத்தில் வைரலானது.

#TVKVijay கோடி கோடியாய் சம்பாதிக்கும் விஜய் தனக்கு நியாயமான ஜீவனாம்சம் வழங்க வேண்டும் - சங்கீதா

தன்னை நீலாங்கரை வீட்டிற்குள் அனுமதிக்குமாறு விஜய்க்கு உத்தரவிடக்கோரி செங்கல்பட்டு நீதிமன்றத்தில் சங்கீதா புதிய மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். விஜய் எனக்கும், என் பிள்ளைகளுக்கும் நியாயமாக சேர வேண்டியதை வழங்க வேண்டும். நடிகரும், தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவருமான விஜயிடம் இருந்து விவாகரத்து வழங்கக்கோரி செங்கல்பட்டு குடும்பல நல நீதிமன்றத்தில் சங்கீதா மனு தாக்கல் செய்துள்ளதாக கடந்த மாதம் 27-ந்தேதி செய்திகள் வெளியாகின. சங்கீதா தாக்கல் செய்த மனுவில் விஜய் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்து இருந்தார்.

விஜய் மீது அவரது மனைவி சங்கீதா கூறிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக கடந்த சில தினங்களாக சமூக வலைத்தளங்களில் பேசு பொருளாகின. இந்த நிலையில், தன்னை நீலாங்கரை வீட்டிற்குள் அனுமதிக்குமாறு விஜய்க்கு உத்தரவிடக்கோரி செங்கல்பட்டு நீதிமன்றத்தில் விஜயின் மனைவி சங்கீதா புதிய மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவில் சங்கீதா கூறியிருப்பதாவது:- * படத்தில் நடித்து கோடி கோடியாய் சம்பாதிக்கும் விஜய் தனக்கும், பிள்ளைகளுக்கும் நியாயமான ஜீவனாம்சம் வழங்க வேண்டும். * விஜய் எனக்கும், என் பிள்ளைகளுக்கும் நியாயமாக சேர வேண்டியதை வழங்க வேண்டும். * பலமுறை முயற்சித்தும் பரஸ்பரம் பிரிந்து செல்ல விஜய் மறுப்பு தெரிவிப்பதாக மனுவில் கூறியுள்ளார்.

#TVKVijay நீலாங்கரை வீட்டில் வசிப்பதற்கு அனுமதி மறுத்து விஜய் தரப்பு மிரட்டுவதாக சங்கீதா பரபரப்பு குற்றச்சாட்டு




## திருக்குறள் வழி வாழ்ந்தால் வாழ்க்கை இனிக்கும்

திருக்குறள் வழி வாழ்ந்தால் வாழ்க்கை இனிக்கும்
திருக்குறள் வழி நடந்தால் வாழ்க்கை சிறக்கும்
தான் என்ற அகந்தையை அகற்றுவது திருக்குறள்
நான் என்ற செருக்கை அழிப்பது திருக்குறள்
உயர்ந்த ஒழுக்கத்தை உணர்த்திடும் திருக்குறள்
ஓயாத உழைப்பைப் போதிக்கும் திருக்குறள்
முயற்சியை முன் நிறுத்திடும் திருக்குறள்
அயற்சியை உடன் அகற்றிடும் திருக்குறள்
ஆறாவது அறிவை பயிற்றுவிக்கும் திருக்குறள்
ஆராய்ச்சி அறிவை வளர்த்திடும் திருக்குறள்
மனிதனை மனிதனாக வாழவைக்கும் திருக்குறள்
மனிதனின் மிருகக்குணம் போக்கிடும் திருக்குறள்
மனிதனை அறிஞனாக ஆக்கிடும் திருக்குறள்
மனிதனின் அறியாமையை நீக்கிடும் திருக்குறள்
மனிதனை சான்றோனாக செதுக்கிடும் திருக்குறள்
அறிவியல் அறிவை உருவாக்கும் திருக்குறள்
அப்துல்கலாமை உயர்த்தியது திருக்குறள்
உலக இலக்கியத்தின் இமயம் திருக்குறள்
உலகில் ஈடு இணையற்ற நூல் திருக்குறள்
உலக மனிதர்கள் யாவருக்கும் வாழ்க்கையை
உணர்த்தும் ஒப்பற்ற உயர்ந்த திருக்குறள்
இல்லறம் நல்லறமாக விளங்கிட வேண்டும்
அன்பும் அறனும் அவசியம் வேண்டும்
உயர்ந்த தவத்தை விட சிறந்தது
ஒழுக்கமாக இல்லறத்தில் வாழ்வது
பிறர் பழிக்கும் தீமைகள் இன்றி
பிறர் போற்றும் வாழ்க்கை இல்லறம்
பூ உலகில் செம்மையாக வாழ்பவன்
வானுலக தேவர்களை விட சிறந்தவன்
வாழ்வது எப்படி என்பதை அறிய
வளமான திருக்குறளைப் படியுங்கள்
பாடாத பொருள் இல்லை திருக்குறளில்
சொல்லாத கருத்து இல்லை திருக்குறளில்
1330 திருக்குறள் மனப்பாடம் செய்வதைவிட
10 திருக்குறள் வழி நடப்பது நன்று!



**கவிஞர் இரா.இரவி**

## பழியும் புகழும்

பழியும் புகழும் நிழல் போல்
நாளும் பொழுதும் தொடரும்.
கழித்து அழிந்து ஒழிந்து
மறையுமா?

பிழியும் துன்பம் தரும் பழி
என்றும் ஒழியாது!
புகழ் என்றும் செல்லும்
வழிக்கு விளங்கிடும்.



தெரிந்தே
பழி சுமப்பதை
களைவாய்
புகழ் சேர்க்க ,
அறமது
புரிவாய்.

**சசிகலா விஸ்வநாதன்**




## கோடையே வருக!

கோடையே வருகவே..நற்
கோடையே வருகவே!
வாடையைத் தருகவே.நல்
வாடையைத் தருகவே!

வெப்பந் தன்னையே..நீ
வீறுடன் தருகிறாய்
தப்பிக்க நாங்கள் நல்
தண்மையைத் தேடுவோம்!

நீண்ட பகலினை..நீ
நேர்ந்தே தருகிறாய்
யாண்டும் உள்ளோரும்..
இங்கு அலைந்தே திரிகிறார்!

சுற்றுலா சென்றிட.. நீ
சேர்ந்தே உதவுவாய்
பற்றுடன் சிறார்கள்..ஆம்
பயணமே கேட்பரே!

வசந்த காலமாய்..நீ
இசைந்தே வருகிறாய்
அசையும் காற்றினை..நீ
அளவாகத் தருகிறாய்!

பருவ மாற்றத்தால்..நீ
பாங்காய்
வருகிறாய்
பருகுவோம்
பானத்தை..
யாம்
பாங்காகத்
தானே!



**முனைவர் இராம.வேதநாயகம்.**
திருவண்ணாமலை.

## கிராமம் !

முன்பெல்லாம் பூர்விக
கிராமத்திற்கு செல்லும்
போது சங்கு கழுத்தும் ,..
இரட்டை ஜடையும்,
திருநீறு திலகம் இட்ட
பிறை நெற்றியும் ...
மறைவில் நின்று ஒலிக்கும்
கொலுசும்... தாவணி
போட்ட
மாமன் மகளை பார்க்கும்
ஆசையை தூண்டிற்று....

இப்பொழுதெல்லாம்
திரைப்படங்களில் கூட
இப்படிப்பட்ட கிராமத்து
கதாபாத்திரங்கள் இல்லாமல்
போனது ...

இப்போதெல்லாம்
கிராமத்திலும்... ஜீன்ஸ்
பேண்ட் லெகின்ஸ்
போட்டபடி.. தலைவிரி
கோலமாய் உலா
வருகின்ற மாமன்
மகள்கள்களை
பார்க்கும்போது சற்று
டெர்ராகவே உள்ளது!



**எம்.பி.தினேஷ்.**
கோவை



## உலக மகளிர் நன் நாள் வாழ்த்து

பெண்மை வாழி!
பேதை வாழி!
பேரிளம்பெண்ணே நீ வாழி!

கண்ணே வாழி!
கருத்தே வாழி!
காரிருள் நீக்கும் விழி வாழி!

கருவறை நிற்கும் கருணை
தெய்வம் கண்முன் காட்டும்
திருவாழி!

உருகிய மெழுகாய் ஒளிரும்
விளக்காய் ஒளிர்வாய்
இல்லத்தின் மதி வாழி!

அறிவின் வளமே , அன்பின்
நிறையே, அவனியின்
அன்னை இறைவாழி!!!

பொறுமையின் உருவே
பூமியின் விளையே!
புத்தொளி வீசிப் பெண் இனம்
வாழி!

**திருமதி இரா.இராஜாமணி**
ஈரோடு

## "கூரைக்குள் சின்ன வெயில்"

கூரையின் கிழிந்த
ஓட்டை வழியே சின்னதாய்
விழுகிறது ஒரு வெயில்
துண்டு! அதுவே சிறுமிக்கு
பாடம் புகட்டும்
ஒளிக்கீற்று!

குடிசை வீடுதான்...
மழை வந்தால்
துடுப்புத்தான்...
காற்று வந்தால்
நடுங்கும் கூரைதான்...
அங்கும் நடக்கிறது
கல்வியின் அடிக்கல்
நாட்டுவிழா!

மேசை இல்லைதான்
முழங்காலே மேசையானது!
பழைய புத்தகம்தான்
அவளுக்கு பாடம் புதுசு!

கூரையில் விழும்
வெயில் நகர்ந்தால்
அவளும் நகர்கிறாள்
ஒளியைத் துரத்தும்
ஒரு சிறிய கனவாக!

பக்கங்களைத் திருப்பும்
விரல்களின் ஒலி
நாளைய வாழ்க்கையின்
நம்பிக்கைத் திறவுகோல்!

இன்று கூரைக்குள்
சின்னதாய் வரும் வெயில்...
நாளைய நாட்களை
முழு ஒளியால் நிரப்பும்!

கூரையின் ஓட்டை
கசியும் ஒளி சின்னதுதான்!
அவ்வொளியில்
படிக்கும்
அவள் கனவு
முழுச்
சூரியன்!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



விண்மீன்களின்
கூட்டு குடும்பத்தில்
மின்னுகிறது சந்தோஷம்
ஒற்றை நிலா
மன
அழுத்தத்தில்
தேய்பிறையாய்.



**ஜயந்தி சிவக்குமார்**
திருச்சி.



தனியே நிற்கிறது
குட்டி மேகம்
எப்படிக் கொண்டு போய்
சேர்ப்பது ?

மேகங்களின் கூட்டம்
சொற்பொழிவில்
பூமி நனைகிறது

அடையாளமற்று
சுற்ற மேகமானேன்
அதோ பார்
யானை
என்கிறது
குழந்தை
என்னைக்
காட்டி.



**ரிஷபன்**

## எஃகு என எண்ணம் கொள்.

கரும்பாய் இருந்தால் உலகம்
உன்னைக் கடித்தேத்
துப்பிவிடும்.! இரும்பாய்
இருக்கவும் பழகிவிடு
இதயமாவது தப்பிவிடும்.!


இலகும் இதயம் உனக்கு
இருந்தால்.. உதைத்தே
தள்ளிவிடும்.! எஃகு போல்
உன் எண்ணமிருந்தால்
பணிந்தே உன்
பின்னேவரும்.!

குனிந்தே கிடந்தால்
முதுகு வளைந்து.. கூனம்
என்றாகிவிடும்! இனி உன்
எண்ணம் எஃகாய் மாற..
எல்லாம் கூடி வரும்.!

படுத்தேக் கிடந்தால்..
படுத்த இடத்தில் புற்கள்
முளைத்துவிடும்..!
பாய்ந்து எழுந்து பறக்க
நினைத்தால் உன்புகழ்
நிலைத்து விடும்.!

எஃகைப் போல் உன்
எண்ணமிருந்தால்.. எதிலும்
உறுதி பெறும்!
தக்க நேரம் இதுதான்
என்றால் உன் தலைமையில்
உலகம் வரும்.!

**வே.கல்யாண்குமார்.**



## நானென்று பெருமை கொள்ளாத-மகளிர்

நித்தமும் கொண்டாடலாம்
செய்யும் தியாகங்கள்
கருத்தில் கொண்டு

கருணையில்லாத உலகில்
நாம் மூழ்கிவிடாது
காத்திட்ட செயல்கண்டு

இன்னும்கூட அன்பு
தழைக்கிறதென்றால்
இவர்கள் மன்னித்தலின்றி
வேறுயாதாகும்

எத்தனை பரிமாணங்கள்
இவர்கள் எடுத்தாயிற்று
இந்தச்சமூகநிலைத்தலுக்கு...

விதையாக ஆழ்ந்து
பயிராக வளர்ந்து
கொடியாகப் படர்ந்து
கனியாகக் கொட்டியும்கூட
நானென்று
பெருமை
கொண்டாடத
மகளிர்
வாழ்க வாழ்க.



**கா. ஹபீப் முகமது.**



## இல்லம் இறைவனின் வீடு

சுவர்கள் சுமப்பது கற்களை
அல்ல நம் குடும்பத்தின்
அன்புப் பிணைப்பை!

வாசல்கள் வரவேற்பது
மனிதர்களை மட்டுமல்ல
நல்ல நேர்மறை
எண்ணங்களையும்!

சமையல் அறையின் வாசம்–
தாயின் பாசம் !

வரவேற்பு அறையில் சிரிப்பு
உறவின் பிணைப்பு !

ஒவ்வொரு செங்கல்லும்
சொல்லும் ஒரு கதை ,
அதுவே நம் வாழ்வின் அழகிய
கவிதை!

கோவில் என்பது கல்லில்
அல்ல நாம் வாழும் இல்லத்தில்
நிம்மதி உள்ளது!

அன்பு எனும் நீரால் நனைத்து,
பண்பு எனும் விதையை
விதைத்து, சிரிப்பால் செங்கல்
அடுக்கி, கட்டிய கோட்டை
இந்த இல்லம்!

அன்பு நிறைந்த இல்லமே
இறைவனின் ஆலயம்!

மனதில் தூய்மையும்
மொழியில் உண்மையும்
இருந்தால் நான் வாழும் வீடே
சொர்க்கமே!

அன்பு நிறைந்த கூரை கீழே,
அமைதி தங்கும் அறையின்
உள்ளே!

பண்பு மணக்கும் இல்லம்
இதுவே, படைத்தவன் வாழும்
கோயில்!

பொறாமை நீக்கி புன்னகை
பூத்தால், பொறுமை காத்துப்
பாசம் சேர்த்தால்,
கல்லும் மண்ணும் வீடல்ல–
நாம் கலந்திருக்கும் மனமே
இறைவன் வாசல்!

அன்பெனும் விளக்கேற்றினால்
அமைதி என்றும் நிலைக்கும்!

சுவர்கள் தாங்கிய கட்டிடம்
அல்ல சுற்றம் போற்றும்
நந்தவனம் !

கதவுகள் திறக்கும் வீடல்ல–
நம் கருணை திறக்கும்
ஆலயம் !

இன்சொல் பேசி அறம்
வளர்த்தால் ஈசன் அங்கே
குடியிருப்பான் !

கல்லில் வடித்த சிலையினை
விட கருணை உள்ளம்
கொண்ட
மனிதர்கள்
வாழும்
இடத்தையே
இறைவன்
விரும்புகிறான்!



உள்ளத்தின் உயர்வே
இல்லத்தின் உயர்!

**பெ.திருமுகம் ஆசிரியர்**
மணமேல்குடி



## உயிரே லஞ்சம்

நான் வாழ்ந்த வாழ்கின்ற
இதயமல்லவா உன் நெஞ்சம் !

நீ இல்லாத வாழ்வை
கொடுக்க நினைப்பது
உன் வஞ்சம் !


உன் இதயத்தில்
எனக்கொரு இடம்
கொடுப்பதற்கு என்ன பஞ்சம்!

உனக்காக இந்த உலக
வாழ்க்கையேவே துறந்து என்
"உயிரையேக்" கொடுக்கிறேன்
லஞ்சம் !
நாம் இணைந்து
வாழ்ந்தால் பூர்த்தியடையும்
நல்வாழ்க்கையின் மஞ்சம் !

எப்போதும்
எப்பொழுதும் நீயே என்
வாழ்வின் தஞ்சம் !



**G.A.கோவிந்தராஜ் (எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்



எத்தனை கூட்டத்திற்கு
நடுவே வந்தாலும்
நீயே என் மகாராணி!
என் மகாராணி ஏனோ
கிரீடம் சூடி அடையாளப்
படுத்தி கொள்வதில்லை!

கண் பற்றி கவிதை எழுதச்
சொல்லினர் உயிர் உருகும்
உன்னைப் பற்றி எழுதி விட்டு
வந்தேன்.

உன் கண் பேசும்
கவிதைகளை
குறிப்பெழுத
முடிவுப்பெறாத
டைரிக்குறிப்புகள் வேண்டும்!

பொய் முகம் தேடி
அலைகிறேன் இங்கே
காதலிக்க யாருமில்லை
காசில்லாத ஊரில் காதல்
இனிக்கும் மாசில்லாத
மனதில் ஈக்கள் கூட
மொய்க்காதடா?!!
ஏடிஎம் ஆண்ட்ராய்டு
வாழ்வில்
பேலன்ஸ் இல்லையென்றால்
பேஸ்மண்ட்டும் போகுமடா?
சித்தம் கலங்கி பித்தனாகலாம்
ஒரு போதும் அங்கு காதல்
யுத்தம் நடவாது.
காட்டை அழித்து
காசு பார்த்து கார்ப்பரேட்யாகி
ஆள்பவனையும் காலில் விழ
வைத்து காலிப் பயலெல்லாம்
புத்தனாகும் பூமியது
இங்கே மனிதன் மதத்தில்
ஊறி ஊறுகாயாகி விட்டான்
நாட்டில் வாழும் மிருகங்கள்
இடையே மனிதத்தை
தேடாதே!! காசு
பார்க்கும்
கல் நெஞ்சு இதயங்கள்
இடையே
காதலை தேடாதே!!



**நௌஷாத் கான்.லி.**

## காதல் கோட்டை


பால பருவத்திலிருந்து
முதுமை வரை~நாம்
பல நிகழ்வுகளை
மறந்துப்போயிருப்போம்
அல்லது மறத்துப்
போயிருக்கும், கட்டையில்
போகும்வரை நம்மை
கலவரப்படுத்திக்கொண்டே
இருப்பது காதல்
மட்டும்தான்,
அதையெல்லாம் நான்
மறந்துவிட்டேன்யென
நீங்கள் சொல்வது
கேட்கிறது
இப்போ~உங்கள் அடி மனசு
வலிக்கவில்லையா,?
காதல்~நீங்கள்
சிறுப்பிள்ளையாய்
இருந்தப்போது
சிலேட்டில் கிறுக்கிய
ஓவியம் அல்ல,~அது
இதயத்தில் சுவாசத்தால்
உருவாக்கிய கோட்டை,
சுடுகாட்டில் வேகும்
போதுக்கூட விம்மி
அழுவது
காதலித்தவர்களுக்கு
மட்டுமே
கேட்கும் அதீதசக்தி,



**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## நூல் விமர்சனம்

**நூலின் பெயர் : இந்திய ஆட்சிப் பணியும் சினிமாவும் மற்றும் நானும்**
**ஆசிரியர்: ஞான ராஜசேகரன்**
**வெளியீடு: டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ்**
**விலை: ₹250**
**தொடர்புக்கு: 8754507070**




*என் இனிய முகநூல் நண்பர் உயர் திரு.ஞானராஜசேகரன் IAS அவர்கள் தன் அனுபவப் பதிவுகளை ஏற்கனவே இங்கு பதிவு செய்ததன் தொகுப்பே இந்நூல்.*

*ஆட்சிப்பணி, சினிமா தணிக்கை அதிகாரி, இயக்குனர் என 3 பகுதிகளாக அவரின் அனுபவம் விரிகிறது.*

*1. ஆட்சிப்பணியில் பாலா சப்கலெக்டராக இருந்தபோது ஒரு பெண் கணவர் இருக்கும் போதே விதவை பென்ஷன் வாங்குவதாக ஒருவர் புகாரளிக்க கள ஆய்விற்கு அவரையும் அழைத்துக் கொண்டு விசாரணை மேற்கொள்ள அந்தப் பெண் உண்மைதான் என்றும் புகாரளித்தவர் தன் கணவர் என்றும், 8 ஆண்டுகளாக வேறு ஒரு பெண்ணுடன் இருப்பதாகவும் கூறி, 7 ஆண்டுகளுக்கு மேல் கணவன் பற்றிய விவரம் தெரியாவிட்டால், இறந்ததற்கு சமம் தானே , நிராதரவான பெண் விதவை பென்ஷன் வாங்குவதில் தவறென்ன என்று கேட்டிருக்கிறார்.*

*அதிகாரியான இவர் நியாயம் உணர்ந்து அந்தப் பெண்ணைப் போன்றோர் உதவி பெற அச்சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள அரசுக்கு கடிதம் எழுதி பரிந்துரைக்கிறார்.*

*2. தணிக்கை அதிகாரியாக இவர் சென்சார் செய்த முதல் ரஜினி படம் " பாட்ஷா" .வழக்கமாக படம் திரையிடப்படும் முன் ரஜினி அதிகாரிகளை சந்தித்து வணக்கம் சொல்வது வழக்கம் என்கின்றனர்.*

*இவர் அவரை இப்ப வரவேண்டாம் எனச் சொல்லுங்கள் என்கிறார். அதன்படி ரஜினி திரும்பச் சென்று படத் தணிக்கை முடிந்து வந்ததும் வணக்கம் சொன்னதோடு, அதன்பிறகு தன் படங்களுக்கு பிரதிநிதிகளை அனுப்பி அவர் அதிகாரியாக இருக்கும் வரை சொல்லும் "கட்"களை அப்படியே ஏற்றுக் கொள்ளும்படி கூறினாராம்.*

*3. இயக்குனர் : இவர் இயக்கிய படங்களில் மோகமுள், முகம், பாரதி தொலைக்காட்சிகளில் பார்த்து மகிழ்ந்தேன். பெரியார், ராமானுஜன், ஐந்து உணர்வுகள் பார்க்க வேண்டும். தி.ஜானகிராமன் எழுதிய " மோகமுள்" கதை படிக்காவிட்டாலும் , அவர் எடுத்த விதம் தேர்வு செய்த அர்ச்சனா ஜோக்லேகர், அபிஷேக் வெகு பொருத்தம்.*

*பல இடர்களுக்குக்கிடையே எடுக்கப்பட்ட படம் வெளியாகலேப் கட்டணமான ₹4லட்சத்திற்கு செக் கொடுத்து நல்லிகுப்புசாமி செட்டியார் உதவியதாக தெரிவித்துள்ளார்.*

*பாரதி படத்தில் சாயாஜி ஷிண்டேவுக்கு பின்னணி பேச 40க்கும் மேற்பட்டோரில் மிகச் சரியாகப் பொருந்தியது நடிகர் "ராஜீவ்" குரலே என்றார்.*

*நிற்பதுவே நடப்பதுவே பாடலை ஹரீஷ் ராகவேந்திரா முதலில் டிராக் பாடினாராம். பின்னர் ஜேசுதாஸ் பாட இருந்த நிலையில் உடனிருந்த பலர் சொன்னபடி ஹரீஷ் குரலே உறுதி செய்யப்பட்டதாம்.*

*மோகமுள் அபிஷேக், பாரதி மணி, ஞான ராஜசேகரன் ஆகியோர் இங்கே முகநூல் நட்பாகக் கிடைத்தது பெரும்பேறு.*

**ஸ்ரீகாந்த் திருச்சி**




## தனித்தியங்கும் தமிழ்மொழிக்குத் தகுந்ததென்றும் தமிழ் எழுத்தே !

வடமொழி எழுத்துக்கள் என்றும் வேண்டாம் !
வளமான உலகின் முதல் மொழி தமிழுக்கு !

நடக்க முடியாதவருக்கு ஊன்றுகோல் தேவை !
ஓட முடிந்தவருக்கு ஊன்றுகோல் தேவையன்று !

.தனித்தியங்கும் தமிழ்மொழிக்குத் தமிழ் எழுத்து போதும் !
தன்னிகரில்லா மொழிக்கு பிறமொழி எழுத்து வேண்டாம் !

பொருளில் கலப்படம் உடலுக்குக் கேடு தரும் !
தமிழில் கலப்படம் தமிழுக்குக் கேடு தரும் !

ரோஜா என்று எழுதவதை நிறுத்துங்கள் !
ரோசா என்று எழுதிப் பழகுங்கள் !

இராஜா என்று எழுதவதை நிறுத்துங்கள் !
இராசா என்று எழுதிப் பழகுங்கள் !

ரமேஷ் என்று எழுதவதை நிறுத்துங்கள் !
ரமேசு என்று எழுதிப் பழகுங்கள் !

எழுத்துக்குப் பற்றாக்குறை தமிழில் இல்லை !
ஏன் கையை ஏந்த வேண்டும் வடமொழியில் !

இல்லாதவன்தான் பிட்சை எடுத்து வாழ்வான் !
இருப்பவன் ஏன் பிச்சை எடுக்க வேண்டும் !




வளமான எழுத்துக்களின் களஞ்சியம் தமிழ் !
வடமொழி எழுத்துக்களை கலப்பவரை இகழ் !

திட்டமிட்டு எழுத்துக் கலப்பை செய்கின்றனர் !
தடுத்திட திட்டம் வகுத்துத் தடுத்திடுவோம் !

அனைத்து மொழிகளின் தாய் நம் தமிழ்மொழி !
அனைவரும் தமிழ்மொழி காக்க அணி வகுப்போம் !

**கவிஞர் இரா.இரவி**



## "கந்து வட்டி என்னும் காலன்"

கடன் கொடுப்பவன்
கையில் கரன்ஸி
தருகிறான்... திரும்ப வாங்கும்
போது உயிரை
எடுத்துக் கொள்கிறான்!

வறுமையின் கதவை
உடைத்துக் கொண்டிருப்பது
பசியல்ல... கந்து வட்டிக்
காலனின் காலடிச் சத்தம்!

ஓராயிரம் தந்து
பத்தாயிரம் பிடுங்கும்
கணக்குப் புத்தகத்திற்கு
கருணை தெரியாத
எண்ணிக்கை மட்டும்தான்
தெரியும்!

கதவுக்கு வெளியே
கடன்காரன் நின்றால்
உள்ளிருப்போர்க்கு
குலை நடுங்கும்
மனம் தவிக்கும்!

அம்மாவின் தாலியும்
அப்பாவின் வியர்வையும்
வட்டியில் கரையும்!

கடன் கொடுத்த கைக்கு
இரக்கம் இல்லாதிருந்தால்
அது கையல்ல
காலனின் கயிறு!!

கடன் கொடுத்தவன்
உதவிக்காரன் இல்லை
உயிர் பிழியும் கொலைகாரன்!


வட்டிக் கோடாரியில்
உயிர் சுரண்டும்
காலா யோசி...

நீ கொடுக்கும் காசு
திரும்பலாம்...ஆனால்
நீ கெடுத்து விட்ட
குடும்பத்தின் நிம்மதி
திரும்ப வராது!



கந்து வட்டி என்பது
காப்பாற்றும்
தோணியல்ல..
வறுமையின் வாழ்விற்கு
வந்து விழும் மரண
மணி.

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



## மகளிர் மகிமை

கடவுளின் படைப்பில்
"அன்பான" "அற்புதமான"
பெண்ணே !

வலிமைமிக்க உள்ளத்தால்
எவ்வலியையும்
"தாங்கிக்கொண்டு"
வழிநடத்தும் பெண்ணே !

எந்தச் சூழலிலும்
ஆண்களுக்கு "துணையாக"
பல ரூபம் எடுக்கும்
பெண்ணே !

நீங்கள் என் வாழ்வில்
"தாயாக" "சகோதரியாக"
"மனைவியாக" "மகளாக"
"தோழியாக" பல

உறவுகளில் துணை புரியும்
பெண்ணே ! என் கண்ணே !
மகளிர் தின வாழ்த்துக்களை
ஒரு "வரிகளில்" வாழ்த்தி
எழுதினால் போதாது !
"ஓராயிரம்" வரிகளில்
உங்களை வாழ்த்தி
எழுதினாலும்
உங்கள் "அன்பின் அருமை "
எண்ணிலடங்காது !

இதற்கு மேல் எனக்கு எழுதத்
தெரியாது !

என் வாழ்வில் வந்த
"பெண்மணிகளே"
நீங்கள் இல்லையேல் எனக்கு
உயிரேது !

மகளிர்க்கான தினம்
என்பது "ஒவ்வொரு நாளும்"
உண்டென்பதை உணர்ந்து
வணங்கி "மகளிர் தின"
வாழ்த்துக்களை
வாழ்த்தி
எழுதுகிறேன்!



**G.A.கோவிந்தராஜ்**
**(எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்



## மகளிர் தினம்

மகளிர் தினம் இன்று. வருடத்தின் ஒவ்வொரு நாளுமே மகளிருக்கும், மகளிரைச் சார்ந்தவர்களுக்கும் முக்கிய தினம் தான். மங்கையராய் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டுமென்பார்கள்.

ஒரு ஆண்மகனுக்கு பாட்டி, அம்மா, அக்கா, தங்கை, மனைவி, மகள், பேத்தி என்று அன்பான உறவுகள் மிக முக்கியமாக அமைகின்றது. பழங்காலத்தில் கணவர் இறந்துவிட்டால் உடன் கட்டை ஏறும் வழக்கம் இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக மாறுதல் ஏற்பட்டு தற்கால பெண்கள் தனி மனுஷியாய் குடும்பத்தை, பெற்றோரை பார்த்துக் கொள்ளுதல், மறுமணம் செய்து கொள்ளுதல் என நிறைய முன்னேற்றம் கண்டுள்ளது.

பாரதி கண்ட புதுமைப் பெண்களாய், பாஞ்சாலி முதலாய் பார்போற்றும் ஜான்சி ராணி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, ராணி மங்கம்மா, வேலு நாச்சியார் போன்று எண்ணற்ற பெண்கள் சுதந்திரப் போராட்டத்திலும் கலந்து கொண்டு ஆங்கிலேயனை எதிர்த்து போர்புரிந்து வீரமரணம் எய்தினர் என்றால் கேட்கவும் வேண்டுமா?

அனைத்துத் துறைகளிலும் பெண்களின் கால்தடம் பதித்து வெற்றி பெற்று கோலோச்சுகின்றனர்.

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற கேள்விக்கு தக்க பதிலடி கொடுக்கும் வகையில் பெண்கள் கல்வியில் உச்சத்தைத் தொட்டுள்ளனர்.

அரசியல், ஆன்மீகம் எதையும் விட்டு வைக்கவில்லை. ஆணுக்கு நிகர் என்றாலும் இயற்கையால் பெண்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வரமான பூப்பெய்துவது, மகப்பேறு முதலானவை மிகவும் புனிதமானது. இதை ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் உணர வேண்டும்.

எத்தனை உயரப் பறந்தாலும், விண்வெளிக்கே சென்று பெண்கள் ஆய்வு செய்த போதிலும் பெண்கள் போதைப் பொருளாக பார்க்கப்படுவது மாறவில்லை.

பச்சிளம் குழந்தை முதல் பாட்டி வரை பாலியல் வன்கொடுமை என்ற பெயரில் பலாத்காரம் செய்யப்படுவது வெட்கித் தலை குனிய வேண்டிய நிலையாகும். கண்ணீர் சிந்தி சிந்தி கண்களில் நீர் வற்றி விடும்.

பெரும்பாலும் பெண்களே பெண்களுக்கு எதிராக இருப்பதும் வருந்தத்தக்க விஷயமாகும்.

இரவில் தைரியமாக ஒரு பெண் தைரியமாக நடக்க வேண்டும். அப்போதே நாடு நலம்பெறும் என்று பல பெரியோர்கள் சொன்னார்கள்.

இன்னமும் கைம்பெண்கள், திருநங்கைகள் பயந்து பயந்துதான் வாழ வேண்டிய நிலை உள்ளது.

என்று விடியும் பெண்களின் இழிநிலை? என்று கிடைக்கும் பெண்களுக்கு மதிப்பும் மரியாதையும்? என்று பெண்மை போற்றப்படும்? என்று பெண்ணினம் காக்கப்படும்?



அன்றுதான் மகளிருக்கு மகத்தான தினமாகும். அதுவரை இந்நிலை உருவாவதற்கு வித்திடும் வகையில் மார்ச் 8 அன்று வரும் மகளிர் தினத்தை ஆரம்ப தினமாகக் கொண்டாடுவோம். வாழ்க பெண்கள்! வாழ்க பெண்மை!

**வி.பிரபாவதி,** மடிப்பாக்கம்.

அடர்த்தியினூடே
கதிரவக் கதிர்கள்
எப்படியோ ஊடுருவியதில்..
மண் வளத்தின் தயவில்..

ஆகாயக் கொடைகளில்
தவறாது பொழுந்த
கார்கால மாரிப் பொழிவினில்..
மரகதப் பச்சையங்கள்
நிகழ்த்தும் மாயங்களில்..
வனச்செழுமை
கண்கொள்ளாக்
காட்சியாகிறது.

துளிர்விட்ட
இலைகளுக்குச்
சொந்தமான

நரம்புகளின் ஊடே.. காற்று
நுண்ணறைகளின் மூலம்
அருந்திய பிராணவாயுவின்
போஷாக்கில்
காட்டின் மலர்ச்சி
அமோகமாயுள்ளது

அக நினைவடுக்குகளில்
படிந்து பசுமையாயிருக்கும்
ஆதிகாலப் பிரியத்தில்



சிலிர்த்து மலர்ச்சியினைக்
காண்பதில் நிறைந்து
மனதை மயக்குவது
வனமெல்லாம் உயிர்ப்பூவின்
வாசம் மட்டுமே!

**கீதா கண்ணன்**
ஸ்ரீரங்கம்.

1. அமர்ந்திருக்கும் கிளை
முறிந்தாலும்
பறவைகள் அஞ்சுவதில்லை
ஏனென்றால் அது நம்புவது
கிளையை அல்ல தன் சிறகை

2. ஏழையை வரிசையில்
நிறுத்திபணக்காரனை
பக்கத்தில் நிறுத்தும்
கடவுளிடம் என்ன
கருணையை
எதிர்பார்ப்பது.

3. ஆடம்பரம் பற்றி
தெரிந்து கொள்ள
விரும்பும் ஒருவன்
கண்டிப்பாக ஏழையாக
இருக்க வேண்டும்

4.வாழ்க்கையில் வெற்றி பெற
நல்ல நண்பர்கள் தேவை
வாழ்நாள் முழுவதும் வெற்றி
பெற ஒரு எதிரியாவது
வேண்டும்

5. நமக்கான நியாயங்கள்
வேண்டாதவர்களின்



காதுகளுக்கு
அர்த்தமில்லாத
பேச்சாகவே
இருக்கும்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## சீராய்வு

கோடிக்கணக்கில் பணம்
இருப்பவன் உதவலாம்
மரங்கள் வளர்க்கலாம்
விவசாயத்தைப் பெருக்கலாம்
கல்விக்கு
உறுதுணையாகலாம்

கிளியாட்டம் மனைவி
இருந்தாலும் குரங்காட்டம்
இன்னொருத்தியை தேடும்
அவலம் தேவைதானா?

ஒழுக்கமே உயர்த்தும் குணம்
ஒழுங்கீனம் ஆழத்தில்
தள்ளும்



சிறந்ததை
தீர்மானிப்பீர்
உச்சாணியில்
பறப்பீர்

**பி. பழனி,**
சென்னை.



மகளிர்நாள்
சிறப்புக் கவிதைப் போட்டி:

## உலகின் பிரம்மா!

(கலிவெண்பா)

பெண்ணே பிரபஞ்சம்
புரியாதே நயவஞ்சம்
கண்ணாகக்
காக்கவேண்டாம்
காத்திட அவளறிவாள்!

மண்ணின் மகாசக்தி
மாதவள் தானே
விண்ணுயர் புகழையும்
வீறுடன் பெற்றவளே!

உலகின் பிரம்மாவே
உன்னதம் பெறுவாளே
கலைகளின் நாயகியே
காட்சிப்பொ ருளாக்காதே!
மலையன்ன புகழினாள்
மாண்புறுத் தகவினாள்
தலைமகள் ஆவாளே
தக்கநன் னாட்டிற்கும்!


ஆளுமை கொண்டவளே
அழகுத் திருமகளே
தோளினை உயர்த்திவிட்டால்
தோழனாக உயர்ந்தோங்கும்!

வாளினையும் எடுப்பாளே
வன்மம் புரிந்தாலே
ஏளனம் செய்யாதே
எழிலரசி பெண்ணவளை!

உலகின் மகாசக்தி
ஊரெலாம் தருபக்தி
பலவாறாய்த் துறையெல்லாம்
பணியாற்றும் நல்லரசி!

அலையாத உள்ளத்தாள்
அன்புக்கும் பஞ்சமில்லை
நலமகளை வாழ்த்துவோம்
நாம்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**



## துளிப்பாக்கள்

அவன் வளர்க்கும் நாய்
படுத்துதிருந்தது சோபாவில்
அவன் தாய் தரையில்!

பல்லாங்குழி விளையாட
இல்லம் செல்ல வேண்டாம்
சாலையில் விளையாடலாம்!

பறவை இறந்து கிடந்தாலும்
காற்றில் பறக்கிறது
அதன் உதிர்ந்த சிறகு!

கீழே உதிர்ந்த இலைகள்
ஏக்கமுடன் பார்த்தன
தான் இருந்த மரக்கிளையை



முள் இல்லா
ரோஜா
வண்டு வந்து
அமரவில்லை
காகித ரோஜா!

**பூ.சுப்ரமணியன்**
சென்னை



## மகளிர் விடுதலையே மாண்பு.!

கலங்காதே பெண்ணே!
காலமிருக்குது முன்னே
அலங்காரப் பதுமையல்ல..
அகிலம் உனதுப் பெண்ணே.!

விலா எலும்பை எடுத்து
இறைவன் படைத்தானா
உன்னை..
நிலம் உழுத போது கண்டுப்
பிடித்தானா உன்னை..!

சபை நடுவே நிற்க வைத்து
ஏலமிட்டான் ஒருவன்..
சந்தேகத் தீயில் உன்னை
இறக்கிவிட்டான் ஒருவன்..!

கல்லாகப் போ என்று
சாபம் தந்தான் முனிவன்..
கொல்லாமல் கொல்லுகின்ற
பேய் என்றான் ஒருவன்!

பந்தையப் பொருளாக்கி
உருட்டி விட்டன் ஒருவன்..
பலர் நடுவே துகிலுறிந்தான்
மற்றொருவன்!

பிள்ளை பெறும்
எந்திரமாய்.. பேசா
மடந்தையாய் ஆக்கி
வைத்தான் ஒருவன்!

இத்தனைத்
தடை கடந்து இன்றுவரை
உலகத்திலே.. சாதனைப்
புரிந்தவளே பெண்தான்.!

சோதனைகள் வென்று
சோர்விலா ஓட்டத்திலே
விண்ணெழுந்து கைகள்
தொட்டதெல்லாம்
பொன்தான்!

செம்பரிதி பெண்தான்
செல்வமெல்லாம் பெண்தான்..
தம்முடைய வயிற்றினிலே
பத்து மாதம் சுமந்தவளும்
பெண்தான்!

அவளை வாழ்த்தாது அறம்
இங்கு வாழாது.. அவள்
மாண்பைப் போற்றாது
கவிதைகளும் பிறக்காது..

தாயாய்.. தாரமாய்..
தங்கையாய்.. அக்காளாய்..
தன்னுயிர் மகளாய்..
பெயர்த்தியாய்.. பேறு
பெற்றாள் பெண்தான்!



வாழ்த்துவோம்
வாருங்கள்.. வரலாற்றைப்
போற்றுங்கள்.. வாழை
போல் தன்னைத்
தந்தாள்.. வாழிய வாழிய
என்று பெண்மையைப்
போற்றுங்கள்..!

**வே.கல்யாண்குமார்.**

## எதைத் தொட....

என் நெஞ்சினில் பூத்த நூறு
மலர்களில் எந்த
மலரை... நான்
எடுத்து நுகர...?

கண்ணினில் பூத்து
கருத்தாய் மலர்ந்த



காதல் மலரை... நான் எடுத்து
நுகர்ந்தால் என்னிலும் பேதை
எவரும் உளரோ...?
வேண்டாம் ...
வேண்டாம் ... காதல்
வேண்டாம்...!

**எஸ் .சந்திரசேகரன்**
**அமுதா**
செஞ்சிக்கோட்டை.




## பெண்ணும் பெருங்கனவும்

அதிகாலை அடுப்படியில்
அவசரப் பணியில்
அன்றாடம் உதவி

அலுவலகப் பணியின்
பிரச்சனைகளை
ஆதரவோடு கேட்டு
ஆறுதலாய் ஒரு வார்த்தை
கொண்டவன் செய்வானோ?
வேண்டுது மனம்

சுற்றமும் நட்பும்
துயரத்தில் கைகொடுக்க
மயிலிறகின் வருடலாய்
மனதிற்கு இதமாய்
சில வார்த்தை

ஆடவர் கண்களில்
சகோதரத்துவம்
அன்பின் வெளிப்பாட்டில்
அமைதி மனம்

தோளோடு கரம் போட்டு
தோழமையாய் ஒரு பார்வை

பார்வையின் புரிதலில்
பரவசமாய்த் துடிக்கும் இதயம்

பண்பாடு பேணும் பாவையர்
மனம் பாதுகாப்பை
வேண்டுது தினம்

உறக்கத்தில் கண்ட
கனவு
உண்மையாகவில்லை
உறங்கிக் கண்ட கனவு
போதும் – இனியாவது
விழித்தெழு!

பல கனவு நெஞ்சத்தில்
அத்தனையும் பகல் கனவாய்

அரவைக்குள் சிக்கிய
அரிசியாய் அன்றாட வாழ்வு

பட்டாடை தேவையில்லை
பஞ்சு மெத்தை
வேண்டவில்லை
பகட்டு ஊர்திகள்
தேவையில்லை அறுசுவை
உணவு கேட்கவில்லை
ஆடம்பரம் சிறிதும்
தேவையில்லை

கொண்ட குணங்கள்
கவசமாகத்தாங்கி நிற்கும்
பெண்மை மென்மை என்னும்
ஓராயுதம் பெண்மை காக்கும்
பேராயுதம்

அன்பாய் ஒரு பார்வை
ஆறுதலாய் சில வார்த்தை
துவண்டு போகையில்
நீளும் கைகள்

பெண்மைக்குள் செய்யும்
மாற்றங்கள்
வாழ்வின் ஏற்றங்கள்

கனவு காணப் பிறந்தவள்
அல்ல பெண் கனலாய்
எரிக்கும் சக்தி அவள்
மௌன யுத்தத்தில்



வலிமை வாளால்
வல்லமை காக்கப்
போராடுவாள் பெண்ணும்
பெரும் கனவும்
நனவாகட்டும்

**தமிழ்நிலா**




# WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெவப்ர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

**7540003588**


























Get Free Jobs Alert on Your
**WhatsApp**
Register Yourself on our
**8122664699**
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs













FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots • Flats • House
Villa • Bungalows
Farm Land • Ware Houses
Factory Sites • Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
IATA
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909
+91 96770 88843
info@sevenstarslogistics.com
www.sevenstarslogistics.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337/7436914247


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package
Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்


Any Website
Rs.10,000/-
Professional Websites at Affordable Price!
Call: 7789941009


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai


WANTED
Needed female staff to look after children, patients.
Contact
9150989424


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872


WANTED
Site Supervisor required for construction work in Ambattur
Contact:
8428872887


சிவா விஷ்ணு
திருமண தகவல் மையம்
அனைத்து இனத்தவர்களுக்கும்
முதல் மணம் • மறுமணம்
பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்
மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும்
நம்பகமான மற்றும் விரைவான சேவை
✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
✓ ஜாதக பொருததம் பார்த்து அனுப்பப்படும்
✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்
தொடர்புக்கு: 9150989424


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


BUSINESS NEWS
DAILY ePAPER
DAILY ePAPER
SPORTS
TRAVEL GUIDE
EBOOK LIBRARY
TECH TRENDS
START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009
HEALTH & FITNESS
ENTERTAINMENT
TECH NEWS
TECH TRENDS
FOOD RECIPES


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
TV NEWS
PRESS
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ராசி
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com



# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்

## நீ மனிதனாகவே இரு...



ஒரு முறை மகாகவி காளிதாசர் வயல்வெளியே வெயிலில் நடந்து சென்ற போது தாகம் எடுத்தது..!

சற்று தூரத்தில் ஒரு கிராமப்பெண் கிணற்றில் தண்ணீர் சேந்தி குடத்தில் எடுத்து வந்து கொண்டிருந்தாள்!

காளிதாசர் அவரைப் பார்த்து அம்மா தாகமாகஇருக்கு... கொஞ்சம் தண்ணீர் தருவீர்களா? என்று கேட்டார்.....

அந்த கிராமத்துப்பெண்ணும், தருகிறேன் உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள் என்றாள்!

உடனே காளிதாசருக்கு ஒரு உயர்வு மனப்பான்மை ஏற்பட்டு, இந்த பெண்ணிடம் நாம் யார் என்று சொல்ல வேண்டுமா என நினைத்து நான் ஒரு பயணி அம்மா என்றார்!

உடன் அந்த பெண், உலகில் இரண்டு பயணிகள் தான்! ஒருவர் சந்திரன் ! ஒருவர் சூரியன் ! இவர்கள் தான் இரவு பகலென பயணிப்பவர்கள் என்றாள்.....!

சரி என்னை விருந்தினர் என்று வைத்துக் கொள் என்றார் காளிதாசர்!

உடனே அந்தப் பெண், உலகில் இரண்டு விருந்தினர் தான்! ஒன்று செல்வம்! இரண்டு இளமை! இவை இரண்டும் தான் விருந்தினராக வந்து உடனே போய் விடும் என்றாள்!

சற்று எரிச்சலான காளிதாசர் தான் ஒரு பொறுமைசாலி என்றார்! ....

உடனே அந்த பெண் அதுவும் இரண்டு பேர்தான்...! ஒன்று பூமி ! எவ்வளவு மிதித்தாலும், எவர் மிதித்தாலும் தாங்கும்! மற்றொன்று மரம் ! யார் கல்லால் அடித்தாலும் பொறுத்துக் கொண்டு காய்களைக் கொடுக்கும் என்றாள்!

சற்று கோபமடைந்த காளிதாசர் நான் ஒரு பிடிவாதக்காரன் என்றார்!

அதற்கும் அந்த பெண் உலகிலேயே பிடிவாதக்காரர்கள் இரண்டு பேர் தான்... ஒன்று முடி ! மற்றொன்று நகம் ! இரண்டும் எத்தனை முறை வேண்டாம் என்று வெட்டினாலும் பிடிவாதமாக வளரும் என்றாள் சிரித்தபடி!....

தாகம் அதிகரிக்கவே நான் ஒரு முட்டாள் என்று தன்னை கூறிக்கொண்டார்!

உடனே அந்த பெண், உலகிலேயே இரண்டு முட்டாள்கள் தான்!

ஒருவன் நாட்டை ஆளத்தெரியாத அரசன் மற்றவன் அவனுக்குத் துதிபாடும் அமைச்சன் ! என்றாள்! ...

காளிதாசர் செய்வதறியாது, அந்த பெண்ணின் காலில் விழுந்தார்!

உடனே அந்த பெண் மகனே... எழுந்திரு... என்றதும் நிமிர்ந்து பார்த்த காளிதாசர் மலைத்துப்போனார்!

சாட்சாத் சரஸ்வதி தேவி யே அவர் முன் நின்றாள்! காளிதாசர் கைகூப்பி வணங்கியதும், தேவி தாசரைப் பார்த்து... காளிதாசா! எவன் ஒருவன் தன்னை மனிதன் என்று உணர்கின்றானோ, அவனே மனிதப்பிறவியின் உச்சத்தை அடைகிறான்!

"நீ மனிதனாகவே இரு" என்று கூறி தண்ணீர் குடத்தை காளிதாசர் கையில் கொடுத்து சரஸ்வதி தேவி மறைந்தார்..!

## சிந்திக்க சில வரிகள்....



நமது இரவுகள் நீளமானவை. அவற்றை நெடுந்தூக்கத்தில் சுருக்க வேண்டாம். நமது பகல்கள் தூய்மையானவை. அவற்றை நம் பாவங்களால் அசுத்தப் படுத்த வேண்டாம். வாழ்வில் நாம் போகிற வழி சாக்கடையாய் அமைந்து விட்டாலும், சேருகிற இடம் கோயிலாக இருக்க வேண்டும். அப்படி ஒரு வீரிய வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.
வாழ்வில் நம் செயல்கள் நமது சொற்களைப் பிரதிபலிக்க வேண்டும். ஒன்று சொன்னாலும் "நச்"சென்று சொல்ல வேண்டும். அது மந்திரச் சொல்லாக ஒலிக்க வேண்டும். நம் சொல்லை உலகம் உன்னிப்பாகக் கேட்க வேண்டும். போரில்லா உலகம் காண விழைவது, "No War" மந்திரம் ஒலிப்பது, பேரன்பு வெளிச்சம் பரப்புவது போன்ற நமது சொல்லும், செயலும் மானுட சமூகத்திற்கு நன்மை பயக்கும் அதிர்வலையை ஏற்படுத்த வேண்டும்.
நமது சொல், செயல் ஒவ்வொன்றும் அர்ச்சுனன் அம்பு போன்று இருக்க வேண்டும். எடுக்கும் போது ஒன்று. தொடுக்கிறபோது நூறு. படுகிறபோது ஆயிரம். நமது சொல்லும், செயலும் நம் எதிர் நிற்பவனை நம்முடன் இணைத்துக் கொள்ளும்படி அமைய வேண்டும். உலகின் எந்த மூலையில் போர் வெடித்தாலும், இங்கே நமக்கு வலிக்க வேண்டும். அதற்கு நாம் சத்ரியனாக இருக்கத் தேவை இல்லை. சாணக்யனாக இருக்க வேண்டும். நாம் "தீ" என்று எழுதினால் பேப்பர் பொசுங்குகிற வாடை வரவேண்டும். அதுதான் சொல்லிலும், செயலிலும் நமக்கு சரஸ்வதி கடாட்சம். கனவுகள் மெய்ப்பட வாழ வேண்டும். அதுதான் சரியான, வீரியமான வாழ்க்கை.
ஒருவன் பிறக்கும் போது அவனுக்கு மூச்சு இருக்கிறது. ஆனால் பெயர் இல்லை. அவன் இறந்த பிறகு பெயர் (சடலம்) இருக்கிறது. ஆனால் மூச்சு இல்லை. அவ்வாறு மூச்சுக்கும், பெயருக்கும் இடையே உள்ள இடைவெளி தான் வாழ்க்கை. வாழ்க்கை என்பது எவரும் பதில் காண முடியாத கேள்வி. மரணம் என்பது எவரும் எதிர்த்து கேள்வி எழுப்ப முடியாத பதில். எனவே பதில் நம்மை எட்டும் வரை, கேள்வியை ரசிப்போம். புலம்பல்களைத் தவிர்ப்போம். நமது இருப்பை அர்த்தமுள்ளதாக ஆக்கி, மண் பயனுற வாழ்வோம். வாழ்க்கை வாழ்வதற்கே.









## விடுகதை

| | |
|---|---|
| அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம். அது என்ன? | வளையல் |
| வானத்தில் பறக்கும் பறவை இது, ஊரையே சுமக்கும் பறவை இது அது என்ன? | விமானம் |
| ஒட்டியவன் ஒருத்தன், பிரித்தவன் இன்னொருவன். அது என்ன? | கடிதம் |
| உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன். அவன் யார்? | எறும்பு |
| நான் சூரியனைக் கடந்து சென்றால் கூட எனக்கு நிழல் ஏற்படாது. நான் யார்? | தென்றல் |



## ஜோக்ஸ்

1--ஒரு புடவை வாங்க கடையையே புர ட்டிப் போடுகிறாயே?? ஆதிகாலத்தில் ஆதாமுக்கு இந்த தொல்லைகள் இல்லை!! ஏவாள் தான் வெறும் இலை தழைகளைத் தானே உடுத்தி வந்தாள்?
மனைவி --அதற்கு அவள் கணவன் எத்தனை மரங்கள் ஏறி இறங்கினானோ???

==========================

2-- தொலைபேசி யில் ஒரு பதற்றமான குரல்
"டேய் மச்சான் ---,எங்கடா இருக்க??
""வீட்ல தான்டா இருக்கேன்--

""அப்பா இப்பதான் டா நிம்மதி யா இருக்கு--

"ஏன்டா ? என்ன விஷயம்??
""காலையில் பேப்பர் பார்த்தேன்.அதுல,,உங்க தெருவில் வெட்டியா சுத்திகிட்டிருந்த நாய்களை யெல்லாம் கார்பரேஷன்காரங்க. புடிச்சுட்டு போனதா செய்தி வந்தது !!நீ மாட்டிக்கிட்டியோன்னு பயந்தே போயிட்டேன்!!!

==========================


3-- அம்மா --என்னடி உன் புருஷன் தினமும் இப்படி குடிச்சிட்டு வாரே??
மகள்--தெரியல அம்மா நான் இன்னும் டேஸ்ட் பண்ணி பார்க்கல!!!

=========================

4-- தாத்தா --நீ என் தங்கக் குட்டி தாத்தா சொல்வதை கேள்!!
புத்தகப்பை மிகவும் கனமாக இருக்கு அதனால் நான் பையை தூக்கி வருகிறேன் நீ நடந்து வரயா??
பேத்தி--
வேண்டாம் தாத்தா என் பையை தூக்கி நீ கஷ்டப் பட வேண்டாம் பையை நானே தூக்கிக்கிறேன் ..நீ என்னை தன் தூக்கி க்கிட்டு வா!!

==========================

5-- பகலில் உங்களு க்கு கண் தெரியாதா. டாக்டர்??
தெரியுமே ஏன் கேட்கிறாய்??
இல்ல. பகிர்வை நேரம் மாலை ஆறிலிருந்து எட்டு வரை ன்னு போர்டு வெச்சிருக்காங்க அதான் கேட்டேன்!!++





# ஜோதிடம் அறிவோம்



## ஏகாதசி




அமாவாசையை அடுத்துவரும் ஏகாதசியை சுக்கில ஏகாதசி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் ஏகாதசியை கிருஷ்ண பட்ச ஏகாதசி என்றும் அழைக்கின்றனர்.

ஏகாதசி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :
போட்டி போடும் குணம் கொண்டவர்கள்.
கல்வி வேள்விகளில் ஆர்வம் உடையவர்கள்.
குருமார்களின் மீது பற்று கொண்டவர்கள்.
மற்றவர்கள் மதிக்கும் பொறுப்புகளில் இருக்கக்கூடியவர்கள்.
எதிர்பாலின மக்களின் மீது ஈர்ப்பு உடையவர்கள்.
வித்தியாசமான செயல்களை செய்வதில் ஆர்வம் கொண்டவர்கள்.
நீதியுடன் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.
சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னை மாற்றி கொள்ளக்கூடியவர்கள்.

## துவாதசி





அமாவாசை நாளையும், பூரணை (பௌர்ணமி) பனிரெண்டாவது திதி துவாதசி ஆகும். நாளையும் அடுத்து வரும்

அமாவாசையை அடுத்துவரும் துவாதசியை சுக்கில பட்ச துவாதசி என்றும், பூரணையை (பௌர்ணமி) அடுத்துவரும் துவாதசியை கிருஷ்ண பட்ச துவாதசி என்றும் அழைக்கின்றனர்.

துவாதசி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :
சொத்துச்சேர்க்கை உடையவர்கள்.
நல்ல குணம் மற்றும் பண்புகளை கொண்டவர்கள்.
எதிர்ப்புகளை உடையவர்கள்.
வசீகரிக்கும் தோற்றம் கொண்டவர்கள்.
புதிரான அணுகுமுறைகளை உடையவர்கள்.
எதிர்பாலின மக்களின் மீது கீர்த்தி கொண்டவர்கள்.

## "சிவ மந்திரம்" கூறினால் மறுபிறவியை இல்லையா?



மனிதராக பிறந்தவர்கள் அனைவரும் ஏழு பிறவிகளை எடுப்பார்கள் என்றும், கர்மம் தீரும் வரை பிறப்பு என்பது நிகழும் என்றும் சாஸ்திரங்கள் கூறுகிறது.

ஆனால், ஒரு பிறவிலேயே நாம் படாதபாடு படுகிறோம். இக்காலத்தில் யாரிடமாவது உனக்கு இன்னொரு பிறவி வேண்டுமா என்று கேட்டால் போதும்டா சாமி..! ஆளவிடுங்க என்று தெரித்து ஓடும் சூழல்தான் இருக்கிறது.

அதனால், மீண்டும் எனக்கு மனிதனாக பிறக்கவே வேண்டாம்.. பிறவா வரம் வேண்டும் என்பவர்கள் தான் நம்மில் ஏராளம்.

இப்படி பிறவா நிலையை வேண்டுபவர்கள், எந்த பரிகாரத்தை செய்ய வேண்டும்? என்பதைத் தான் இந்த ஆன்மீகம் சார்ந்த பதிவின் மூலம் நாம் அறிந்து கொள்ள போகிறோம்.

முற்பிறவியில் செய்த பாவங்களுக்கான தண்டனைகளை அடுத்தடுத்த பிறவிகளில் தொடர்ந்து அனுபவித்து கொண்டே இருக்க வேண்டும். அந்த பிறவியிலும் பாவம் செய்தால், மீண்டும் பிறவி எடுக்க வேண்டும், இது தொடர்கதை ஆகும்..

எப்பிறவியில் பாவம் செய்யாமல், நேர்வழியில் பக்தி மார்க்கத்துடன் இணைந்து இருக்கிறானோ, அப்பிறவியில் அவனுடைய பிறவி முடிவடைகிறது.

இறைவனின் விழிகளில் இருந்து நம்மால் தப்பிக்க முடியாது. நான் என்ன தவறு செய்தேன்? எனக்கு ஏன் இந்த பிரச்சனை என்று கேட்க முடியுமா? அப்படி நீங்கள் கேட்பவராக இருந்தால், உங்கள் மனசாட்சிப்படி நீங்கள் நடப்பவராக இருந்தால் அடுத்த பிறவி உங்களுக்கு கிடையாது.

மறுபிறவி வேண்டாம் என்று நினைப்பவர்கள், 108 வில்வ இலைகளில், "ஓம் நமச்சிவாய" என்னும் ஆத்ம சக்தி வாய்ந்த சிவ மந்திரத்தை எழுதி, லிங்கத்திற்கு 108 முறை அர்ச்சனை செய்து வர வேண்டும்.

கண் குளிர சிவபெருமானை தரிசித்து, மனதார "இப்பிறவி போதும், இனி பிறவா நிலை வேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

48 பிரதோஷங்கள் காளை மாட்டிற்கு அருகம்புல் தானம் செய்பவர்களுக்கு, பிறவா நிலை வரும். இப்பரிகாரங்களை செய்து வந்தால், அப்பிறவியிலேயே அவர்களுக்கு மோட்சம் பக்தி மூலமாக உண்டாகி, மறுபிறவி என்பதே கிடையாது என்பது ஐதீகம்.

## பஞ்சாங்கம் பார்ப்பது எப்படி?

சில அடிப்படைத் தகவல்கள்:

ஆண்டுகளைக் நமது முன்னோர் சுழற்சி முறையில் (in rotation) அறுபது ஆண்டுகள் திரும்பத் திரும்ப வருவதாகக் கணக்கிட்டனர்.

வான் மண்டல தொகுதி அல்லது ராசி மண்டல தொகுதி ஒரு வட்டப் பாதையாக 360 பாகைகளைக் (Degrees) கொண்டுள்ளது.

நாம் முக்கியமானவையாக நம்பும 27 நட்சத்திரங்களும் இந்த பாதையில் உள்ளன.

இதன் வழியாகவே ஒன்பது க்ரஹங்களும் சஞ்சாரம் செய்கின்றன.

360 பாகைகளில் (degrees) 12 ராசிகள் அடங்கியுள்ளன.

எனவே ஒவ்வொரு ராசியும் 30 பாகைகளை (degrees) கொண்டுள்ளது.

சூரியன் வான் பாதையில் தினசரி 1 பாகை(degree) நகர்கிறது.

ஒருமுறை சுற்றிவர 365 நாள் 6 மணி நேரம் ஆகிறது.

குரு சுமார் ஒரு வருடத்தில் ஒரு ராசியைத் தாண்டும்.

சனி மாதத்துக்கு ஒருபாகை (degree) நகரும்.

எனவே குரு ஒரு தடவை வான வட்டத்தைச் சுற்றி வர 12வருடங்கள் ஆகின்றன.

சனி ஒரு தடவை வான வட்டத்தைச் சுற்றி வர 30வருடங்கள் ஆகின்றன.



சனியும் குருவும் சேர்ந்து அசுவதி நக்ஷத்திரத்தில் அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை காணப்படுகிறது.

அதுவே பிரபவ வருடம்.

இதுவே முதல் வருடம்.

இதிலிருந்து 60 வருடங்கள் கணக்கிடப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டின் பெயரும் காரணப் பெயராக அமைந்துள்ளது.

ஆண்டுகள் 60
1.பிரபவ 2.விபவ 3.சுக்கில
4.ப்ரமோதூத, 5. ப்ரஜோத்பத்தி
6.ஆங்கிரஸ 7. ஸ்ரீமுக 8.பவ
9.யுவ,10.தாது, 11.ஈசுவர
12.வெகுதான்ய, 13.ப்ரமாதி
14.விக்கிரம,15.விஷு
16.சித்ரபானு,17.சுபானு
18.தாரண,19.பார்த்திப ,20.விய
21.ஸர்வஜித், 22.ஸர்வதாரி
23.விரோதி,24.விக்ருதி, 25.கர
26.நந்தன,27.விஜய, 28.ஜய
29.மன்மத, 30.துர்முகி,
31.ஹேவிளம்பி, 32.விளம்பி
33.விகாரி, 34.சார்வரி, 35.ப்லவ
36.சுபகிருது, 37.சோபக்கிருது
38.குரோதி, 39.விசுவாவசு
40.பராபவ, 41.ப்லவங்க,
42.கீலக, 43.சௌமிய
44.சாதாரண,45.விரோதிகிருது
46.பரிதாபி,47.ப்ரமாதீ,
48.ஆனந்த, 49.ராக்ஷஸ,50.நள
51.பிங்கள, 52.களயுக்தி,
53.சித்தார்த்தி,
54.ரௌத்ரி
55.துன்மதி,
56.துந்துபி
57.ருத்ரோத்காரி,58.ரக்தாக்ஷி
59.குரோதன, 60.அக்ஷய

தமிழ்மாதங்கள்

சூரியன் ஒரு ராசியைக் கடக்க எடுத்துக் கொள்ளும் 30 நாட்கள் ஒரு மாதம் என கணக்கிடப்பட்டுள்ளது.

சூரியன் எந்த ராசியில் என்று பிரவேசிக்கிறதோ அதுவே மாதத்தின் தொடக்க நாள். அந்த ராசியின் பெயரே அந்த மாதத்தின் பெயர்.

வீட்டில் பூஜைகள் செய்யும்போது ஸங்கல்பத்தில் நாம் சொல்வது மாதத்தின் இந்தப் பெயர்களையே..

நடைமுறையில் தமிழ் மாதங்களின் பெயர்கள்-

அந்த மாதத்தில் எந்த நட்சத்திரத்தன்று பௌர்ணமி திதி வருகிறதோ அந்த நட்சத்திரத்தின் பெயரையே கொண்டதாக அமைந்துள்ளது.

## திரயோதசி




அமாவாசை நாளையும், பூரணை (பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் பதிமூன்றாவது திதி திரயோதசி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் திரயோதசியை சுக்கில பட்ச திரயோதசி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் திரயோதசியை கிருஷ்ண பட்ச திரயோதசி என்றும் அழைக்கின்றனர்.

திரயோதசி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :
வெள்ளை மனம் கொண்டவர்கள்.
நண்பர்கள் அதிகம் உடையவர்கள்.
உறவினர்களின் மீது அன்பு கொண்டவர்கள்.
கற்பனை வளம் கொண்டவர்கள்.
தற்பெருமை உடையவர்கள்.
சூழ்நிலைக்கு ஏற்ப தன்னை வடிவமைத்து கொள்ளக்கூடியவர்கள்.

## சதுர்த்தசி



அமாவாசை நாளையும், பூரணை (பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் பதினான்காவது திதி சதுர்த்தசி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் சதுர்த்தசியை சுக்கில பட்ச சதுர்த்தசி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் சதுர்த்தசியை கிருஷ்ண பட்ச சதுர்த்தசி என்றும் அழைக்கின்றனர்.

சதுர்த்தசி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :
எழில்மிகு தோற்றம் கொண்டவர்கள்.
முன்கோபம் கொள்ளும் குணம் உடையவர்கள்.
உடல் மற்றும் மனோபலம் கொண்டவர்கள்.
சண்டையிடுவதில் வல்லவர்கள்.
நினைத்ததை செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.
குரோத மனமுடையவர்கள்.
தனிக்கொள்கை பிடிப்பு கொண்டவர்கள்.

மாதங்களின் பெயர்கள்
நடைமுறை - ஸங்கல்பம்
===========
===========

| | | |
|---|---|---|
| சித்திரை | - | மேஷ மாசம் |
| வைகாசி | - | ரிஷப மாசம் |
| ஆனி. | - | மிதுன மாசம் |
| ஆடி. | - | கடக மாசம் |
| ஆவணி. | - | சிம்ம மாசம் |
| புரட்டாசி | - | கன்னி மாசம் |
| ஐப்பசி. | - | துலா மாசம் |
| கார்த்திகை | - | விருச்சிக மாசம் |
| மார்கழி. | - | தனுர் மாசம் |
| தை. | - | மகர மாசம் |
| மாசி. | - | கும்ப மாசம் |
| பங்குனி. | - | மீன மாசம் |

எந்த மாதத்தில் பௌர்ணமி, அமாவாஸ்யை இல்லையோ அந்த மாதத்துக்கு விஷமாதம் என்று பெயர்.

எந்த மாதத்தில் இரண்டு பௌர்ணமி, அல்லது இரண்டு அமாவாஸ்யை வருகிறதோ அதற்கு மலமாதம் என்று பெயர்.

விஷ மாதத்திலும், மல மாதத்திலும் சுபகார்யங்கள் செய்யக்கூடாது.

ஆனால் சித்திரை, வைகாசி, மாதங்களில் இவைகள் ஏற்பட்டால் அந்த இரண்டு மாதங்களுக்கும் இந்த தோஷம் கிடையாது.

### அயனங்கள் (Path)
---------------------------

ஒரு வருடம் இரண்டு அயனங்களாகப் (Half yearly paths) பிரிக்கப்பட்டுள்ளது.

சூரியன் மகரராசியில் பிரவேசிக்கும்போது உத்தராயனம் ஆரம்பம்.

சூரியன் கடக ராசியில் பிரவேசிக்கும் போது தட்சிணாயனம் ஆரம்பம்.

தைமாதம் முதல் ஆனி மாதம் வரை 6 மாதங்கள் உத்தராயன காலம்.

இக்காலகட்டத்தில் எல்லா நல்ல காரியங்களும் செய்யலாம்.

கும்பாபிஷேகம், கிரகப்பிரவேசம் போன்றவை இக்காலகட்டத்தில் செய்வது

### உத்தமம்.

ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை 6 மாதங்கள் தட்சிணாயன காலம்.

இக்காலகட்டத்தில் நல்ல காரியங்கள் தொடங்குவதை தவிர்க்க முடியுமானால் தவிர்ப்பது நல்லது.

ருதுக்கள் (Season s) - 6
ஒரு வருடம் 6 ருதுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
சித்திரை, வைகாசி - வஸந்த ருது
ஆனி, ஆடி, - க்ரீஷ்ம ருது
ஆவணி, புரட்டாசி - வர்ஷ ருது
ஐப்பசி, கார்த்திகை - சரத் ருது
மார்கழி, தை - ஹேமந்த ருது
மாசி, பங்குனி - சிசிர ருது

கிழமைகள் (days) - 7
ஒரு நாள் என்பது 60 நாழிகைகள் கொண்டது.
சூரிய உதயத்திலிருந்து மறுநாள் சூர்ய உதயம் வரை ஒரு நாள்.
சாயா கிரகங்கள் இரண்டு (ராகு, கேது) நீங்கலாக மீதமுள்ள ஏழு கிரகங்களின் ஏழு நாட்கள் கொண்ட கால அளவு ஒரு வாரம்.
ஒரு நாளைக்குரிய பெயராக வாஸரம் என்ற சொல் ஸங்கல்பத்தில் சொல்லப்படும்

நடைமுறை - ஸங்கல்பம்
************ ************

| | | |
|---|---|---|
| ஞாயிறு. | - | பானு வாஸரம் |
| திங்கள். | - | இந்து வாஸரம் |
| செவ்வாய் | - | பௌம வாஸரம் |
| புதன். | - | ஸௌம்ய வாஸரம் |
| வியாழன் | - | குரு வாஸரம் |
| வெள்ளி | - | ப்ருகு வாஸரம் |
| சனி | - | ஸ்திர வாஸரம் |



### திதிகள் (Lunar day) - 15
***************************

சூரியன் இருக்கும் இடத்தில் இருநது 12 பாகைகள்(Degrees) சந்திரன் நடப்பினில் ஒரு திதியாகும்.

1. ப்ரதமை
2. த்விதியை
3. த்ருதியை
4. சதுர்த்தி
5. பஞ்சமி,
6. ஷஷ்டி
7. ஸப்தமி
8. அஷ்டமி
9. நவமி
10. தசமி
11. ஏகாதசி
12. துவாதசி
13. த்ரயோதசி
14. சதுர்த்தி
15. பூர்ணிமா (அல்லது) அமாவாஸ்யை.

ஒரு மாதம் இரண்டு பட்சங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

அமாவாஸ்யை அடுத்த பிரதமை முதல் பௌர்ணமி வரை சுக்லபட்சம்.

பௌர்ணமியை அடுத்து வரும் பிரமை முதல் அமாவாஸ்யை வரை கிருஷ்ணபட்சம்.

தமிழில் இதை வளர்பிறை என்றும் தேய்பிறை என்றும் கூறுஇவர்கள்.

திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்பவை பஞ்சாங்கத்தின் ஐந்து அங்கங்களாகும்.

இவற்றில் திதி, வாரம், (வாஸரம்) ஆகிய பற்றி மேலே கூறப்பட்டுள்து.

இனி மற்ற மூன்றை பற்றி அறிவோம்.

### நட்சத்திரங்கள் - 27

வான் வட்டப்பாதையில் உள்ள நட்சத்திரங்கள் இருபத்தேழும் பன்னிரண்டு ராசிகளுக்குப் பிரித்து வழங்கப்பட்டுள்ளன.

### நக்ஷத்திரங்கள் - 27 -
************************

| | | |
|---|---|---|
| நடைமுறை | - | ஸங்கல்பம் |
| அஸ்வதி | - | அஸ்வினி |
| பரணி | - | அபபரணீ |
| கார்த்திகை | - | க்ருத்திகா |
| ரோகிணி. | - | ரோகிணீ |
| மிருகசீர்ஷம் | - | ம்ருகசிரோ |
| திருவாதிரை | - | ஆர்த்ரா |
| புனர்பூசம். | - | புனர்வஸூ |
| பூசம். | - | புஷ்யம் |
| ஆயில்யம் | - | ஆஸ்லேஷா |
| மகம் | - | மகா |
| பூரம் | - | பூர்வபல்குனி |
| உத்திரம் | - | உத்ரபல்குனி |
| ஹஸ்தம் | - | ஹஸ்த |
| சித்திரை | - | சித்ரா |
| சுவாதி | - | ஸ்வாதீ |
| விசாகம் | - | விசாகா |
| அனுஷம் | - | அனுராதா |
| கேட்டை | - | ஜ்யேஷ்டா |
| மூலம் | - | மூலா |
| பூராடம் | - | பூர்வ ஆஷாடா |
| உத்திராடம் | - | உத்ர ஆஷாடா |
| திருவோணம் | - | ச்ரவண |
| அவிட்டம் | - | ஸ்ரவிஷ்டா |
| சதயம் | - | சதபிஷக் |
| பூரட்டாதி | - | பூர்வப்ரோஷ்டபதா |
| உத்திரட்டாதி | - | உத்ரப்ரோஷ்டபதா |
| ரேவதி | - | ரேவதி |

### ராசிகள் - 12

1. மேஷம் 2. ரிஷபம் 3. மிதுனம் 4. கடகம் 5. சிம்மம் 6. கன்னி
7. துலாம் 8. விருச்சிகம் 9. தனுசு
10. மகரம் 11. கும்பம் 12. மீனம்

மேலே சொன்ன நக்ஷத்திரங்கள் இருபத்தி ஏழும் ஒவ்வொரு ராசிக்கும் 21/4 நக்ஷத்திரம் விதம் பங்கிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நக்ஷத்திரத்துக்கும் நான்கு பாதங்கள் உண்டு.

ஆகவே, ஒவ்வொரு ராசியிலும் ஒன்பது பாதங்கள் அல்லது 2 1/4 நக்ஷத்திரங்கள் உண்டு.

### யோகங்கள் - 27

1. விஷ்கம்பம் 2. ப்ரீதி
3. ஆயுமான், 4.சௌபாக்யம்
5. சோபனம் 6. அதிகண்டம்
7.சுகர்மம், 8.த்ருதி, 9.சூலம்
10.கண்டம், 11.வ்ருத்தி,
12. துருவம்,13. வியாகாதம்
14.ஹர்ஷணம், 15.வஜ்ரம்
16.ஸித்தி ,17.வ்யதீபாதம்,
18.வரியான், 19.பரீகம்,
20.சிவம், 21.ஸித்தம்
22. ஸாத்தியம், 23.சுபம்
24.சுப்ரம், 25. ப்ராம்யம்
26.மாஹேந்த்ரம் 27.வைத்ருதி

கரணங்கள் - 11
1. பவம் - சிங்கம்
2. பாலவம் - புலி
3. கௌலவம் - பன்றி
4. தைதிலம் - கழுகு
5. கரம் - யானை
6. வணிஜை - எருது
7. பத்ரம் - கோழி
8. சகுனி - காக்கை
9. சதுஷ்பாதம் - நாய்
0. நாகவம் - பாம்பு
11. கிமுஸ்துக்னம் - புழு

### இராகு காலம்

ஒவ்வொரு கிழமையிலும் இராகு காலம் எப்போது என்பதனை நினைவில் வைத்துக் கொள்ள ஒரு வரிப்பாட்டு ஒன்று சொல்லுவார்கள்.

"தி"ருவிழா "ச"ந்தையில் "வெ"ளியில் "பு"குந்து "வி"ளையாட "செ"ல்வது "ஞா"யமா?"

| கிழமை | இராகு காலம் |
|---|---|
| ஞாயிறு. | = 04.30 - 06.00 |
| திங்கள் | = 07.30 - 09.00 |
| செவ்வாய் | = 03.00 - 04.30 |
| புதன் | = 12.00 - 01.30 |
| வியாழன் | = 01.30 - 03.00 |
| வெள்ளி | = 10.30 - 12.00 |
| சனி. | = 09.00 - 10.30 |

### எமகண்டம்

இதேபோல எமகண்ட காலம் எப்போது என்பதனை அறிய ஒரு வரிப்பாட்டு உண்டு.

"வி"ழாவுக்கு "பு"திதாக "செ"ன்று "தி"ரும்பும் "ஞா"பகம் "ச"ற்றும் "வெ"றுக்காதே

| கிழமை - | எமகண்டம் : பகல் |
|---|---|
| ஞாயிறு : | 12.00 - 01.30 |
| திங்கள் : | 10.30 - 12.00 |
| செவ்வாய் : | 09.00 - 10.30 |
| புதன் : | 07.30 - 09.00 |
| வியாழன் : | 06.00 - 07.30 |
| வெள்ளி : | 03.00 - 04.30 |
| சனி : | 01.30 - 03.00 |

| கிழமை - | எமகண்டம் :இரவு |
|---|---|
| ஞாயிறு : | 06.00 - 07.30 |
| திங்கள் : | 03.00 - 04.30 |
| செவ்வாய் : | 01.30 - 03.00 |
| புதன் : | 12.00 - 01.30 |
| வியாழன் : | 10.30 - 12.00 |
| வெள்ளி : | 09.00 - 10.30 |
| சனி : | 07.30 - 09.00 |

# திருப்பதி தேவஸ்தான முழு நேர நிர்வாக அதிகாரியாக ரவிசந்திரா பதவியேற்பு



**திருமலை, மார்ச் 8:**

திருப்பதி தேவஸ்தானத்தில் ஜெகன்மோகன் ஆட்சி காலத்தில் நடந்த கலப்பட நெய் விவகாரத்தில் சம்மந்தப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கலாம் என ஆந்திர அரசுக்கு சிபிஐ விசாரணை குழு பரிந்துரை செய்தது. அதன்பேரில், தேவஸ்தான நிர்வாக அதிகாரி அனில்குமார் சிங்கால் இடமாற்றம் செய்யப்பட்டார்.

இவரை தொடர்ந்து, முதல்வர் அலுவலகத்தில் முக்கிய பொறுப்பில் இருந்த ஐஏஎஸ் அதிகாரி ரவிசந்திராவை அரசு தற்காலிக நிர்வாக அதிகாரியாக நியமனம் செய்தது. சமீபத்தில் அவரை நிரந்தர நிர்வாக அதிகாரியாக பணி நியமனம் செய்து உத்தரவிட்டது.

அதன்பேரில் நேற்று காலை 7.44 மணிக்கு ஏழுமலையான் கோயிலில் பதவி பொறுப்பேற்றார். முன்னதாக ரவிசந்திரா தம்பதியினர் ஏழுமலையானை தரிசனம் செய்தனர். அவர்களுக்கு தேவஸ்தானம் சார்பில் கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கைய்ய சவுத்ரி தீர்த்த பிரசாதங்கள், மற்றும் சுவாமியின் திரு உருவப்படத்தையும் வழங்கி கவுரவித்தார்.

# ஈரான் போர்க் கப்பல் மூழ்கடிப்பு: இந்தியா மீதான குற்றச்சாட்டுக்கு மத்திய அரசு மறுப்பு

**புதுடெல்லி, மார்ச் 8:**

ஈரான் போர்க் கப்பலை அமெரிக்கா தாக்கி அழித்த விவகாரத்தில் இந்தியா மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளை மத்திய அரசு உறுதியாக மறுத்துள்ளது.

இலங்கை கடல்பரப்பு அருகே சர்வதேச கடல் எல்லையில் கடந்த 4-ஆம் தேதி ஈரானின் 'ஐரிஸ் டெனா' போர்க் கப்பலை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் குண்டு வீசி மூழ்கடித்தது. இதில் 87 ஈரான் கடற்படை வீரர்கள் உயிரிழந்தனர். 37 பேரை இலங்கை கடற்படையினர் மீட்டனர். விசாகப்பட்டினத்தில் கடந்த மாத இறுதியில் இந்தியா நடத்திய பல்வேறு நாடுகள் பங்கேற்ற கடற்படைப் பயிற்சியை முடித்துக் கொண்டு நாடு திரும்பியபோது இந்த சம்பவம் நிகழ்ந்தது. பிப். 25-ஆம் தேதி இந்திய கடல் எல்லையைவிட்டு வெளியேறிவிட்ட ஈரான் போர்க்கப்பலில் ஆயுத தளவாடங்கள் எதுவும் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கைக்குத் தெற்கே 40 கடல் மைல் (சுமார் 74 கி.மீ.) தொலைவில் இந்திய பெருங்கடலில் அந்தப் போர்க்கப்பல் தகர்க்கப்பட்டது.

எனினும், இதை முன்வைத்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மத்திய அரசை வன்மையாகக் கண்டித்தன. இந்தியாவின் மிக அருகில் வந்து அமெரிக்கா தாக்குதல் நடத்திய நிலையில், பிரதமர் மோடி அமைதி காப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டினார். தங்கள் நாட்டு கடல் எல்லையில் இருந்து பல நூறு கி.மீ. அப்பால் இருந்த போர்க் கப்பலை அமெரிக்கா தாக்கி அழித்ததற்கு உரிய விளைவுகளைச் சந்திக்கும் என்று ஈரான் ஏற்கெனவே எச்சரித்துள்ளது. இந்நிலையில், ஈரான் போர்க் கப்பல் குறித்து இந்திய கடற்படை அமெரிக்காவுக்கு உளவுத்தகவல் வழங்கியதாகப் பரப்பப்படும் தகவல் முற்றிலும் பொய்யானது,

# போர் காரணமாக மருந்து ஏற்றுமதி பாதிப்பு: நிறுவனங்களுக்கு ரூ.5,000 கோடி இழப்பு அபாயம்



**புதுடெல்லி, மார்ச் 8:**

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர் இறக்குமதி, ஏற்றுமதியில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. ஹார்முஸ் ஜலசந்தியை மூடுவதாக ஈரான் அச்சுறுத்தியிருப்பதே இதற்கு காரணம். ஏனெனில், மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான முக்கிய கடல் பாதையாக ஹார்முஸ் ஜலசந்தி உள்ளது.

மத்திய கிழக்கில் 3 நாடுகளுக்கு இடையிலான போர் காரணமாக, உலகளாவிய சரக்குகளுக்கான ஏற்றுமதி, இறக்குமதி செலவுகள் அதிகரித்துள்ளன. இதுகுறித்து இந்திய மருந்து ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சிலின் தலைவர் நமித் ஜோஷி கூறியதாவது: வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் (ஜிசிசி) உறுப்பு நாடுகள் இந்திய மருந்து நிறுவனங்களின் மொத்த ஏற்றுமதியில் 5.58 சதவீதத்தைக் கொண்டுள்ளன. மேற்கு ஆசியா மற்றும் வட ஆப்பிரிக்கா பிராந்தியத்திற்கான மருந்து ஏற்றுமதியின் மதிப்பு 2024-25 நிதியாண்டில் 1,749.6 மில்லியன் டாலராக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சவுதி, ஓமன், குவைத் மற்றும் ஏமன் போன்ற முக்கிய சந்தைகள் மலிவு விலையில், பொதுவான மருந்துகளை வாங்குவதற்கு இந்தியாவை பெரிதும் நம்பியுள்ளன. ஜோர்டான், குவைத் மற்றும் லிபியா போன்ற வளர்ந்து வரும் சந்தைகளுக்கான ஏற்றுமதியும் சமீப காலமாக அதிகரித்துள்ளது. இந்நிலையில் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் இந்திய மருந்து ஏற்று மதியை பாதிக்கலாம் என கூறப்படுகிறது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி இரண்டிற்கும் சரக்கு வரியும் இரண்டு மடங்காகி உள்ளது. இவை, மருந்து ஏற்றுமதி நிறுவனங்களை மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாக்குகின்றன. மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக மார்ச் மாதத்தில் ஏற்றுமதிகள் முற்றிலுமாக பாதிக்கப்பட்டால், மருந்து தொழில்துறை 5,000 கோடி ரூபாய் வரை இழப்புகளை சந்திக்க நேரிடும். மருந்து ஏற்றுமதியாளர்களுக்கான சரக்கு நிவாரணம், மானியங்கள் மற்றும் தளவாட ஆதரவு போன்ற நடவடிக்கைகளை மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும். மத்திய அரசின் உதவியால் மட்டுமே ஏற்படவிருக்கும் இழப்பு குறையும். இவ்வாறு நமித் ஜோஷி தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவின் மிரட்டல் எத்தனை நாள்களுக்குத் தொடரும்?: காங்கிரஸ்

**புதுடெல்லி, மார்ச் 8:**

காங்கிரஸ் பொதுச் செயலர் ஜெய்ராம் ரமேஷ் தனது எக்ஸ் பக்கத்தில் வெள்ளிக்கிழமை வெளியிட்ட பதிவில், 'அமெரிக்க அதிபர் டிரம்ப் தற்போது புதிய விளையாட்டை தொடங்கியுள்ளார். இந்தச் சூழலில், ரஷிய அதிபர் புதினிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்து கொள்ளலாம் என இந்தியாவிலுள்ள தனது நண்பருக்கு டிரம்ப் தற்காலிக அனுமதியை அளித்துள்ளார். அமெரிக்காவின் இந்த மிரட்டல் எத்தனை நாள்களுக்குத் தொடரும்?' என்று கேள்வி எழுப்பியுள்ளார். பிரதமரின் ராஜதந்திரத்துக்கான வெற்றி - பாஜக: ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்துகொள்ளும் வகையில் இந்தியா மீதான கட்டுப்பாடுகளுக்கு அமெரிக்கா 30 நாள்கள் தற்காலிக விலக்கு அளித்திருப்பது பிரதமர் நரேந்திர மோடியின் ராஜதந்திரத்துக்கு கிடைத்த வெற்றி என்று பாஜக பெருமிதம் தெரிவித்தது.

இதுகுறித்து பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் பிரதீப் பண்டாரி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் இந்தியாவின் முக்கிய கச்சா எண்ணெய் வள ராஜதந்திரம் மீண்டும் வெற்றி பெற்றுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு என்ற பொய்யான செய்திகளைப் பரப்பி மக்களிடையே பீதியை ஏற்படுத்திய இந்திய விரோத ராகுல் காந்தி முகத்திலும், காங்கிரஸ் மீதும் பெரிய முட்டை விழுந்துள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

# ராஜஸ்தானில் நிலநடுக்கம்: ரிக்டர் அளவில் 3.5 ஆக பதிவு

**புதுடெல்லி, மார்ச் 8:**

ராஜஸ்தானின் சிகார் பகுதியில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. காலை 6.32 மணியளவில் ரிக்டர் அளவில் 3.5 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 5 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 27.42 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 75.37 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை.

# ஆந்திராவில் தம்பதிகளுக்கு ரூ.25,000.. அரசின் அதிரடி அறிவிப்பால் பெற்றோர் குதூகலம்..!

**அமராவதி, மார்ச் 8:**

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் குறைந்து வரும் பிறப்பு விகிதம் மற்றும் அதிகரித்து வரும் முதியோர் மக்கள்தொகை ஆகிய சவால்களைச் சமாளிக்க, முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு ஒரு புரட்சிகரமான மக்கள்தொகை மேலாண்மைக் கொள்கையை அறிவித்துள்ளார். இந்தக் கொள்கையின் கீழ், அதிக குழந்தைகளைப் பெற்றெடுக்கும் தம்பதிகளுக்குப் பல்வேறு நிதியுதவிகள் மற்றும் சலுகைகளை அரசு வாரி வழங்கி உள்ளது.

* இரண்டாவது அல்லது மூன்றாவது குழந்தையைப் பெற்றெடுக்கும் தம்பதிகளுக்குத் தலா ரூ. 25,000 ஒருமுறை நிதியுதவியாக வழங்கப்படும். * மூன்றாவது குழந்தையின் ஊட்டச்சத்து மற்றும் பராமரிப்புச் செலவுகளுக்காக, அக்குழந்தைக்கு 5 வயது ஆகும் வரை மாதம் ரூ. 1,000 வீதம் மொத்தம் 60 மாதங்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும். * 18 வயது வரை குழந்தைகளுக்கு இலவச கல்வி வழங்க ஏற்பாடு செய்யப்படும். மக்கள்தொகை பெருக்கத்தை ஊக்குவிக்க அரசு ஊழியர்களுக்குக் கூடுதல் சலுகைகளை முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார்.

*தாய்மார்களுக்கு 12 மாதங்கள் (ஒரு வருடம்) சம்பளத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு. *தந்தைமார்களுக்கு 2 மாதங்கள் தந்தைவழி விடுப்பு. * கூடுதல் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் ஊழியர்களுக்குப் பதவி உயர்வுகளில் முன்னுரிமை அளிப்பதற்கான சட்டத் திருத்தங்களும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

ஆந்திராவின் மொத்தக் கருவுறுதல் விகிதம் (TOTAL FERTILITY RATE - TFR) தற்போது 1.5 ஆகக் குறைந்துள்ளது. இது மக்கள்தொகையை நிலையாக வைத்திருக்கத் தேவையான 2.1 என்ற அளவை விட மிகவும் குறைவு. இதனால், 2047-ம் ஆண்டிற்குள் ஆந்திரா ஒரு "வயதான மாநிலமாக" மாறும் அபாயம் உள்ளதால், இளைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முதல்-மந்திரி இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளதாக கூறப்படுகிறது.

# நாடாளுமன்ற வாயில்களில் 10 கி.மீ. வேகம் மட்டுமே! எம்.பி.க்களுக்கு அறிவுறுத்தல்!

**புதுடெல்லி, மார்ச் 8:**

நாடாளுமன்ற வாயில்களில் நுழையும்போது, அதிகபட்சமாக 10 கி.மீ. வேகத்தில்தான் கார் இயக்கப்பட வேண்டும்; இல்லையெனில், உயர் தொழில்நுட்ப பாதுகாப்பு சாதனங்கள் தாமாக செயல்பட்டு வாகனத்துக்கு சேதம் விளைவிப்பதுடன், உள்ளே இருப்பவரும் காயமடைய வாய்ப்புள்ளது என்று எம்.பி.க்களுக்கு நாடாளுமன்ற பாதுகாப்புப் பணி அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

பட்ஜெட் கூட்டத் தொடரின் இரண்டாம் கட்ட அமர்வு மார்ச் 9-ஆம் தேதி தொடங்கவுள்ள நிலையில், நாடாளுமன்ற வளாகத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான நாடாளுமன்ற பாதுகாப்புப் பணி அமைப்பு, எம்.பி.க்களுக்கான புதிய அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது.

அதில், 'நாடாளுமன்ற நுழைவாயில்களில் உள்ள உயர் தொழில்நுட்ப பாதுகாப்பு சாதனங்களைக் கடந்து செல்லும் வரையில் காரின் வேகம் 10 கி.மீ.க்கு மிகாமல் பராமரிக்கப்பட வேண்டும். இல்லையெனில், டயர்களை சேதப்படுத்தி, தடையை உருவாக்கக் கூடிய அமைப்புகள் தாமாக செயல்பட்டுவிடும். இதனால், வாகனம் சேதமடைவதுடன், உள்ளே இருப்பவரும் காயமடைய வாய்ப்புள்ளது.

இதேபோல், தானியங்கி தடுப்பை கடந்து செல்லும்போது, வாகனங்களுக்கு இடையே குறைந்தபட்சம் 5 அடி இடைவெளி கடைப்பிடிக்கப்பட வேண்டும். இந்த அமைப்பு, ஒரு நேரத்தில் ஒரு வாகனத்தை மட்டுமே அனுமதிக்கும்.

ஒருவேளை தானியங்கி தடுப்பு மீது எதிர்பாராதவிதமாக மோதிவிட்டால் வாகனத்தை ஓட்டுநர் உடனடியாக நிறுத்திவிட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பணமோசடி வழக்கு: ரிலையன்ஸ் நிறுவனத்தில் அமலாக்கத்துறை ரெய்டு



**மும்பை, மார்ச் 8:**

இந்தியாவில் முன்னணி தொழிலதிபர்களில் ஒருவர் அனில் அம்பானி. அனில் திருபாய் அம்பானி குழுமத்தின் தலைவரான இவர் ரிலையன்ஸ் பவர் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களை நடத்தி வருகிறார்.

இதனிடையே, ரிலையன்ஸ் பவர் உள்பட ரிலையன்ஸ் குழுமத்தின் பெயரில் பெற்ற கடன், சட்டவிரோதமாக மற்ற நிறுவனங்களுக்கு மாற்றம் செய்துள்ளதாக அனில் அம்பானி மீது குற்றச்சாட்டு எழுந்தது.

விசாரணையில், அனில் அம்பானி ரூ.40 ஆயிரம் கோடி பண மோசடி செய்துவிட்டதாக சிபிஐ வழக்குப்பதிவு செய்துள்ளது.

சட்டவிரோத பணப் பரிமாற்ற தடுப்பு சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறையும் வழக்குப் பதிவு செய்துள்ளது. இந்த வழக்கு தொடர்பாக அனில் அம்பானி வீடு, அலுவலகம் உட்பட 35க்கும் மேற்பட்ட இடங்களில், அமலாக்கத்துறை சோதனை நடத்தியது.

மேலும், அனில் அம்பானிக்கு நோட்டீஸ் அனுப்பிய அமலாக்கத்துறை அவரிடம் விசாரணை நடத்தியது. மேலும், பணமோசடி வழக்கு தொடர்பாக அனில் அம்பானியில் ரூ. 15 ஆயிரத்து 700 கோடி சொத்துக்களை அமலாக்கத்துறை ஏற்கனவே முடக்கியுள்ளது.

இந்நிலையில், பணமோசடி வழக்கு தொடர்பாக ரிலையன்ஸ் பவர் நிறுவனம் மற்றும் தொடர்புடைய இடங்களில் இன்று அமலாக்கத்துறை அதிரடி சோதனை நடத்தி வருகிறது.

மும்பை, ஐதராபாத் ஆகிய 2 பகுதிகளில் 10க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

# மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான 4 டிஜிட்டல் தளங்கள் அறிமுகம்



**புதுடெல்லி, மார்ச் 8:**

மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான 4 டிஜிட்டல் தளங்கள் மற்றும் சின்னங்களை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா டெல்லியில் நேற்று அறிமுகம் செய்தார்.

பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. கடந்த 2011-ம் ஆண்டில் நாடு தழுவிய அளவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன் பிறகு 2021ம் ஆண்டில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கரோனா பெருந்தொற்று காரணமாக கணக்கெடுப்பு பணி தள்ளிவைக்கப்பட்டது. இந்த சூழலில் நாடு முழுவதும் இரு கட்டங்களாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று மத்திய அரசு கடந்த ஆண்டு அறிவித்தது. இதன்படி ஏப்ரல் 1-ம் தேதி முதல் செப்டம்பர் 30 வரை வீடுகள், கட்டிடங்கள், வீட்டில் உள்ள வசதிகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட உள்ளன. இதன்பிறகு அடுத்த ஆண்டு பிப்ரவரியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கப்படும். அப்போது ஒவ்வொரு நபரின் சமூக, பொருளாதார தகவல்கள் சேகரிக்கப்பட உள்ளன. இந்த சூழலில் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான டிஜிட்டல் தளங்கள், சின்னங்களை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா டெல்லியில் நேற்று அறிமுகம் செய்தார். முதல் முறையாக டிஜிட்டல் முறையில் மக்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. இதற்காக 4 டிஜிட்டல் தளங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன.

வீடுகள், கட்டிடங்கள் தொடர்பான பட்டியலை தயாரிக்க புதிதாக செயலி உருவாக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் நாடு முழுவதும் பல்வேறு புவியியல் பகுதிகளை உறுதி செய்து, செயற்கைக் கோள் படங்களைப் பயன்படுத்தி டிஜிட்டல் முறையில் வீடுகள், கட்டிடங்களின் பட்டியலை தயாரிக்க முடியும்.

# கேரளா: பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியருக்கு 18 ஆண்டு சிறை



**திருவனந்தபுரம், மார்ச் 8:**

கேரளாவில் 2013-ல் டியூஷன் படிக்க வந்த சிறுமியை ஓராண்டுக்கு மேலாக ஆசிரியர் பாலியல் தொல்லை கொடுத்ததால் மன நோய்க்கு ஆளானார்.

பின்னர் பிளஸ்-2, நீட் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று எம்பிபிஎஸ் படிப்பில் சேர்ந்தபோது, டியூஷன் ஆசிரியரைப் போன்ற ஒருவரைப் பார்த்துவிட்டு 2024-ல் மீண்டும் அவருக்கு மனநலம் பாதிக்கப்பட்டது. அதற்கான சிகிச்சையும் அவருக்கு அளிக்கப்பட்டது.

அப்போதுதான் பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் விவரம் தெரிய வந்து சிகிச்சை அளித்த டாக்டர் மூலம் போலீஸில் புகார் அளிக்கப்பட்டது.

போலீஸார் விசாரணை நடத்தி 57 வயதான அந்த ஆசிரியரைக் கைது செய்தனர். இந்த வழக்கில் ஆசிரியருக்கு 18 ஆண்டு சிறை தண்டனை, ரூ.35,000 அபராதம் விதித்து திருவனந்தபுரம் விரைவு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# இந்திய மாணவர்களுக்கு வழங்கப்படும் அமெரிக்க கல்வி விசா 69% குறைந்தது




**புதுடெல்லி, மார்ச் 8:**

இந்திய மாணவர்களுக்கு வழங்கப்படும் அமெரிக்க கல்வி விசா 69 சதவீதம் அளவுக்கு குறைந்து உள்ளது.

கடந்த 2017 முதல் 2021-ம் ஆண்டு வரை அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவி வகித்தார். அப்போது அமெரிக்காவில் வசிக்கும், பணியாற்றும் வெளிநாட்டினர் மீது மிகப் பெரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

கடந்த ஆண்டு ஜனவரியில் ட்ரம்ப் 2-வது முறையாக அதிபராக பதவியேற்றார். அப்போது முதல் இந்தியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டினர் மீது அவர் மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த சுமார் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் நாடு கடத்தப்பட்டனர். அமெரிக்காவில் பணியாற்ற வழங்கப்படும் எச்1 பி விசா கட்டணம் ரூ.88 லட்சமாக உயர்த்தப்பட்டது. அமெரிக்காவில் கல்வி பயில வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் எப்1 விசா கட்டணம் இரு மடங்காக அதிகரிக்கப்பட்டு உள்ளது. மேலும் விசா நடைமுறைகளும் கடுமையாக்கப்பட்டு உள்ளன.

கடந்த 2018-ல் 26,506 இந்திய மாணவர்களுக்கு எப்1 விசாக்கள் வழங்கப்பட்டன. கடந்த 2019-ல் 26,247 விசாக்கள் விநியோகிக்கப்பட்டன. கரோனா தொற்று காரணமாக கடந்த 2020-ம் ஆண்டில் 114 இந்திய மாணவர்களுக்கு மட்டுமே எப்1 விசா வழங்கப்பட்டது.

கடந்த 2021-ம் ஆண்டில் 40,194 பேர், 2022-ம் ஆண்டில் 62,229 பேர், 2023-ம் ஆண்டில் 72,027 பேர், 2024-ம் ஆண்டில் 41,336 இந்திய மாணவர்கள் எப்1 விசாக்களை பெற்றனர். ஆனால் கடந்த 2025-ம் ஆண்டில் 12,776 இந்திய மாணவர்களுக்கு மட்டுமே எப்1 விசா வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த 2024-ம் ஆண்டை ஒப்பிடும் போது 2025-ம் ஆண்டில் இந்திய மாணவர்களுக்கு வழங்கப்படும் அமெரிக்க கல்வி விசா 69 சதவீதம் வரை குறைந்து உள்ளது.

# சுற்றுலா: மங்களூரில் கண்டு களிக்க வேண்டிய முக்கியமான 10 இடங்கள்!

மங்களூரில் சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்க வேண்டிய முக்கியமான 10 இடங்களை இந்தக் கட்டுரையில் பார்க்கலாம். மங்களூர் அருமையான கடற்கரை நகரம். நீங்களும் ஒருமுறை சுற்றுலா சென்று வாருங்கள்.

1. மங்களாதேவி கோவில்

இங்கு குடியிருக்கும் மங்களாதேவியின் பெயராலேயே மங்களூர் என்ற பெயர் இந்த ஊருக்கு ஏற்பட்டது. இங்கு 9ம் நூற்றாண்டில் கேரள பாணியில் கட்டப்பட்ட கோவில் உள்ளது. இங்கு மங்களாதேவி அமர்ந்த நிலையில் பக்தர்களுக்கு அருள்புரிகிறார்.

2. குட்ரோலி கோகர்நாத் கோவில்

1912ம் ஆண்டு, ஞானி நாராயண குருவினால் கட்டப்பட்ட குட்ரோலி கோகர்நாத் சிவன் கோயில், பிரசித்தி பெற்றது. இது பில்லவா சமூகத்தின் முக்கிய கோவிலாக உள்ளது. பில்லவா சமூகத்தின் தலைவராக இருந்த கோரகப்பா, தனது குரு நாராயண குருவின் துணையுடன் இந்தக் கோவிலைக் கட்டினார். பிரம்மாண்டமான கோபுரத்துடன், அழகிய வேலைப்பாடுகளை உடைய கோவில்.



3. கட்டீல் துர்காபரமேஷ்வரி கோவில்: துலு மொழியில், கட்டீல் என்ற கடலுக்கும், ஆற்றுக்கும் நடுவில் அமைந்துள்ள நிலம் என்று பொருள். இங்கு அமைந்துள்ள துர்கை அம்மன் கோவில் பிரசித்தி பெற்றது. இங்கு கிடைக்கும் அன்னதானம் பிரபலமானது.

4. கத்ரி மஞ்சுநாதஸ்வாமி கோவில்: இது 10 ஆம் அல்லது 11 ஆவது நூற்றாண்டில் கட்டப்பட்ட பழமையாக கோவில். இங்குள்ள பஞ்சலோக பிரம்மா சிலை, தென் இந்தியாவிலேயே பழமையானதாகக் கருதப்படுகிறது.



இங்குள்ள சிவன், பிரசித்தி பெற்றவர். இவர் பரசுராமரின் பிரார்த்தனையால், இங்கு கோவில் கொண்டதாக கருதப்படுகிறது.

5. பனம்பூர் (PANAMBUR) கடற்கரை: அரபிக்கடலினைக் கண்டுகளிக்க இந்தக் கடற்கரைகள் பிரபலமாக உள்ளன. இங்கு பல்வேறு விளையாட்டு அம்சங்களும், பொழுதுபோக்கு அம்சங்களும் இருந்து, மக்களுக்கு நல்லதொரு அனுபவத்தை தருகின்றன.மாலை, கதிரவனின் அஸ்தமனத்தைக் கண்டுகளிக்க அருமையான கடற்கரைகள்.

6. சுல்தான் பேட்டரி (SULTAN BATTERY)

திப்புசுல்தான் காலத்தில், சுல்தான் பேட்டரி என்ற ஒரு கண்காணிப்பு மேடை கட்டப்பட்டது. இங்கிருந்து, கடல்வழியாக வரும் எதிரிக் கப்பல்களைக் கண்காணிப்பதற்கு, இது 1784ம் ஆண்டு திப்புசுல்தானால் கட்டப்பட்டது. இங்கு, கீழே உள்ள அறையில் வெடிமருந்துகள் வைக்கப்பட்டதால், இது சுல்தான் பேட்டரி என்று அழைக்கப்படுகிறது. இங்கிருந்து தண்ணீர் பாவி கடற்கரைக்கு, பெரிய சுற்றுலாப் படகுகள் செல்கின்றன.

7. வெங்கடநாராயணா கோவில்

18ம் நூற்றாண்டைச் சேர்ந்த பழமையான கோவிலில் , வெங்கடநாராயணர் குடி கொண்டுள்ளார். இந்தக் கோவில் அருமையாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

8. பப்பாஸ் (PABBAS) ஐஸ்கிரீம்

இங்கு மங்களூரில் பப்பாஸ் ஐஸ்கிரிம் கடையில் , கட்பட் (GUDBAD) என்ற ஐஸ்கிரீம் மிகவும் பிரபலமாக உள்ளது. எப்போதும், கடையில் கூட்டம் நிரம்பி வழிகிறது. இந்தக் கட்பட் ஐஸ்கிரீமில், அடுக்கடுக்காக பழத்துண்டு, கொட்டைகள் போன்று பல்வேறு பொருட்களைப் போட்டு, மிகவும் சுவையாக ஐஸ்கிரீம் செய்கின்றனர்.

9. புனித அலோசியஸ் தேவாலயம்

19 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்த தேவாலயம், இதிலுள்ள ஓவியங்களுக்குப் பிரசித்தி பெற்றது. பொதுவாக, மற்ற தேவாலயங்களில் இல்லாதபடிக்கு, சுவரெல்லாம், ஓவியங்கள் வரையப்பட்டு, அருமையாக அமைக்கப்பட்டுள்ளது.

10. மங்களூர் துறைமுகம்

மங்களூர் துறைமுகத்தில் உள்ள கப்பல்களைக் கண்டுகளிக்க, மங்களூர் துறைமுகம் செல்லலாம்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## என்.எல்.சி., நிறுவனத்தில் சுகாதார ஆய்வாளர் பணியிடங்கள்

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் (என்.எல்.சி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

'சுகாதார ஆய்வாளர்' பிரிவில் மொத்தம் 16 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: தொடர்புடைய பிரிவில் டிப்ளமோ

வயது: 18-30 (2.4.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 486. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 236

கடைசிநாள்: 2.4.2026

விவரங்களுக்கு: nlcindia.in

## அழைக்கிறது பாதுகாப்பு படை

மத்திய ஆயுத போலீஸ் படையில் காலியிடங்களுக்கு தேர்வு அறிவிப்பை யு.பி.எஸ்.சி., வெளியிட்டுள்ளது.

'அசிஸ்டென்ட் கமாண்டன்ட்' பதவியில் எல்லை பாதுகாப்பு படை 108, மத்திய ரிசர்வ் போலீஸ் 106, இந்தோ - திபெத் எல்லை போலீஸ் 12, எஸ்.எஸ்.பி., 53, மத்திய தொழில் பாதுகாப்பு 70 என மொத்தம் 349 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பட்டப்படிப்பு

வயது: 20-25 (1.7.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, உடல் தகுதி தேர்வு, நேர்முகத்தேர்வு

தேர்வு மையம்: சென்னை, மதுரை

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 200. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 12.3.2026

விவரங்களுக்கு: upsc.gov.in

# மார்ச் மாதம் (2026) வார ராசிபலன்

## 08.3.2026 முதல் 14.3.2026 வரை

### மேஷம்

இந்த வாரம் எதிர்பார்த்த பண வரத்து வந்து சேரும். கொடுத்த வாக்குறுதியை நீங்கள் காப்பாற்ற முடியும். மற்றவர்களுக்கு உங்கள் மீது இருந்த கோபம் குறையும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். வாடிக்கையாளர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அவசரப்படாமல் நிதானமாக பணிகளை கவனிப்பது நல்லது.

குடும்பத்தில் இருந்த மனவருத்தங்கள் அகலும். பிள்ளைகள் முன்னேற்றத்தில் இருந்த தடை தாமதம் நீங்கும். பெண்களுக்கு கோபத்தை குறைப்பது நன்மை தரும். கலைத்துறையினருக்கு இடைத்தரகர்கள் போன்றவர்களின் ஒத்துழைப்பை எதிர்பாராமல் நீங்கள் நேரடியாகவே முயற்சி செய்து வருவதன் மூலம் புதிய வாய்ப்புகள் சிலவற்றைப் பெற்று மகிழ இடம் உண்டு.

அரசியல்வாதிகள் தலைமையின் பேரன்பையும், நன்மதிப்பையும் பெறுவீர்கள்.

### ரிஷபம்

இந்த வாரம் பல வித நன்மைகள் ஏற்படும். நண்பர்கள், உறவினர்களிடம் இருந்து வந்த வீண் மனஸ்தாபங்கள் அகலும். நீண்ட நாட்களாக வாங்க வேண்டும் என்று எண்ணிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிலும் அவசரம் காட்டுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பாக இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும். ஆக்கப்பூர்வமான யோசனைகள் தோன்றும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு காரியங்களை செய்து எதிர்பார்த்த வெற்றியை அடைவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன், மனைவிக்கு இடையில் நெருக்கம் உண்டாகும்.

பிள்ளைகளுக்காக பாடுபடுவீர்கள். எதிர்பாராத செலவுகள் உண்டாகும். பெண்களுக்கு எதிலும் நிதானம் தேவை. பொருள் சேர்க்கை உண்டாகும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் எளிதில் கிடைக்கக் கூடிய கால கட்டம்.

நீங்கள் பெரும் முயற்சி செய்ய வேண்டிய அவசியமில்லாமலேயே வாய்ப்புகள் தேடி வரும்.

### மிதுனம்

இந்த வாரம் மனக்கவலை அகலும். பண வரத்து திருப்தி தரும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். ஆடம்பர செலவுகள் ஏற்படும். எதிர்மறை எண்ணங்கள் மறைந்து நேர்மறையான எண்ணங்கள் உருவாகும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். எதிர்பார்த்த லாபம் வரும். வியாபார செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். அதனால் களைப்பு ஏற்படலாம். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கி எல்லோரும் உங்களது வார்த்தைக்கு மதிப்பு தருவார்கள். கணவன், மனைவிக்கு இடையே சகஜ நிலை நீடிக்கும். பிள்ளைகள் மூலம் மன மகிழ்ச்சி ஏற்படும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி தரும். பெண்களுக்கு வீண் மனக் கவலை உண்டாகும். கலைத் துறையினருக்கு முயற்சிகளைத் தொடர்வது அவசியம். உங்கள் வசதிகளில் பெரும்குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் அளவில் சில வாய்ப்புகளை பெறக்கூடும்..

### கடகம்

இந்த வாரம் ராசியைப் பார்க்கும் குருவாலும் சனியாலும் எல்லா முயற்சிகளும், காரியங்களும் சாதகமான பலன் தரும். பண வரத்து அதிகரிக்கும். கடினமான வேலைகளையும் எளிதாக செய்து முடிக்கும் திறமை உண்டாகும். மனதில் இருந்த தயக்கம், பயம் நீங்கும். வெளியூர், வெளிநாடு பயணங்கள் செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமான முடியும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். லாபம் அதிகரிக்கும். தேவையான பண உதவி கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வும் கூடுதல் பொறுப்புகளும் கிடைக்கும். வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். சுப காரியங்கள் நடக்கலாம். சகோதரர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். கணவன் மனைவிக்கு இடையே நெருக்கம் அதிகரிக்கும். சந்தோஷமாக காணப்படுவார்கள். குழந்தைகள் மூலம் பெருமை கிடைக்கும். பெண்களுக்கு எந்த வேலையையும் எளிதாக செய்து விடுவீர்கள்.

மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவது நன்மை தரும். திறமை வெளிப்படும்.

### சிம்மம்

இந்த வாரம் எதிலும் கவனமாக இருப்பது நல்லது. காரியங்களில் தடை தாமதம் உண்டாகாமல் இருக்க எதையும் திட்டமிட்டு செய்வது நன்மை தரும். எதிலும் தலையிடாமல் ஒதுங்கி சென்றாலும் மற்றவர்கள் வலிய வந்து உங்களையும் இழுப்பார்கள். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் இருந்த மந்தமாக நிலை மாறும். பழைய பாக்கிகள் வசூலாகும். வாடிக்கையாளர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், வேலைப் பளுவும் ஏற்படலாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கு இடையே விட்டுக் கொடுத்து செல்வது நன்மை தரும். பிள்ளைகளுக்காக அலைய வேண்டி இருக்கும். குடும்பத்திற்காக கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். பெண்களுக்கு மற்றவர்களின் பேச்சை கேட்டு எதிலும் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. கலைத் துறையினருக்கு பல முன்னனி நிறுவனங்கள் தாமே உங்களைத் தேடி வந்து வாய்ப்பு கொடுக்கும்.

### கன்னி

இந்த வாரம் பண வரத்து. பொருள் வரத்து அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மற்றவர்களால் கைவிடப்பட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் அனுகூலமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்திற்கு தேவையான பண உதவி கிடைக்கும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் சாதகமான நிலை காணப்படும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு விருப்பம் இல்லாத இடமாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் இருந்த சண்டைகள் நீங்கும். கணவன், மனைவிக்கு இடையே இருந்த இடைவெளி குறையும். திருமணம் தொடர்பாக எடுக்கும் முயற்சிகள் கைகூடும். வீட்டிற்கு தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகள் மகிழ்ச்சியாக காணப்படுவார்கள். பெண்களுக்கு எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள்.

கலைத்துறையினருக்கு பல முயற்சிக்குப் பிறகு புதிய வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும்.

சக கலைஞர்களின் போட்டி உங்கள் வாய்ப்புகளுக்கு சவாலாக இருக்கும்.

### துலாம்

இந்த வாரம் எடுத்த காரியங்களில் இருந்த தடை தாமதம் நீங்கும். ராசிநாதன் சுக்கிரன் கிரன் சஞ்சாரத்தால் பண வரத்து அதிகரிக்கும்.

எந்த ஒரு வேலையை செய்யும் போதும் மன மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். வீடு, வாகனம் வாங்கும் சுபச் செலவுகள் ஏற்படலாம். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். சுக்கிரன் கிரன் சஞ்சாரம் புதிய தொடர்புகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். தொழில் வியாபாரத்தில் புத்தி சாதுரியத்தால் முன்னேற்றம் காண்பீர்கள்.

சரக்குகளை அனுப்பும் போது கூடுதல் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிர்பந்தமாக இட மாற்றம் அல்லது பணி மாற்றம் இருக்கலாம். உழைப்பு அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் குறையும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பாடுபடுவீர்கள். உறவினர் மூலம் உதவிகள் கிடைக்கும். பெண்களுக்கு சுபச் செலவு அதிகரிக்கும்.

### விருச்சிகம்

இந்த வாரம் எந்த காரியத்தை செய்தாலும் லாபம் ஏற்படும். பண வரத்து அதிகரிக்கும். உடல் சோர்வு நீங்கும். வீண் பிரச்சனைகள் அகலும். நண்பர்கள் உறவினர்களுடன் மன வருத்தம் நீங்கி சுப உறவு உண்டாகலாம். பயணங்கள் செல்ல நேரிடும். கூட்டு தொழில் அல்லது வியாபாரம் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் உண்டாகும். வேலைப்பளு கூடும்.

குடும்பத்தில் அடுத்தவர்களால் ஏதேனும் குழப்பம் உண்டாகலாம். கணவன், மனைவிக்கு இடையே ஒருவருக்கு ஒருவர் அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளுக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும். பெண்களுக்கு உறவினர்களிடம் பேசும் போது கவனமாக பேசுவது நல்லது. கலைத் துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பொருளாதார நிலை உயர்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள். சேமிப்புகளில் கவனம் செலுத்துவீர்கள். அரசியல் வாதிகளுக்கு உங்கள் பொறுப்பான பணிகளுக்காக தலைமையின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். அவர்களின் தனிப்பட்ட அபிமானத்தையும் பெற்று மகிழ்வீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் செலுத்துவது நல்லது. பெரியோர் சொல்படி நடப்பது வெற்றிக்கு உதவும்.

### தனுசு

இந்த வாரம் எல்லா காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். பண வரத்து அதிகரிக்கும். கடன் பிரச்சனை தீரும். தகராறு, வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். மறைமுக எதிர்ப்புகள் விலகும். கவுரவம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். பண பிரச்சனை தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு குறையும். முயற்சிகள் காலதாமதமாக பலன் கொடுக்கும். எதை பற்றியும் கவலைப்படாமல் செயலாற்றுவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். திருமண காரியங்கள் கைகூடும். கணவன், மனைவிக்கு இடையே இருந்த இடைவெளி குறையும். பிள்ளைகள் உங்கள் சொல்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சியை தரும். பெண்களுக்கு எதிர்ப்புகள் விலகும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கொட்டும்.

அதன் மூலம் உங்களது பொருளாதார நிலை உயரும். வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும்.

### மகரம்

இந்த வாரம் மன உறுதி அதிகரிக்கும். எதையும் கண்டு அஞ்சாமல் பணியாற்றுவீர்கள். வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் உண்டாகும். பண தேவை ஏற்படலாம். தேவையான நேரத்தில் மற்றவர்களின் உதவி கிடைக்கும். புதிய சொத்து வாங்குவதில் கவனம் செல்லும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். திறமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்வீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகள் சொல்வதை செய்வதன் மூலம் நன்மை கிடைக்க பெறுவார்கள். குடும்பத்தில் அமைதி ஏற்படும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும். பிள்ளைகள் பற்றிய கவலை நீங்கும். பெண்களுக்கு புதிதாக செய்யும் காரியங்களில் கவனம் தேவை. கலைத் துறையினருக்கு புதிய புதிய வாய்ப்புகள் பெருமளவில் தேடி வரும்.

வாய்ப்பு தேடி நீங்கள் பெருமளவில் அலைந்த நிலைமாறி, உங்களைத் தேடி பலர் வரும் நிலை ஏற்படும். அரசியல் வாதிகளுக்கு உங்கள் செல்வாக்கு நாளுக்கு நாள் பெருகி வரும்.

### கும்பம்

இந்த வாரம் எடுக்கும் காரியங்களை செய்வதற்கு அனுபவ அறிவும், செயல் திறனும் அதிகரிக்கும். உங்களது செயல்களுக்கு பாராட்டுகள் கிடைக்க பெறுவீர்கள். சுபச் செலவு அதிகரிக்கும். வாகனங்கள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கை தரம் உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை நீங்கும்.

உங்களது பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவரை நம்பி பொறுப்புக்களை ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது.

குடும்பத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பால் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன், மனைவிக்கு இடையில் இருந்த மன வருத்தம் நீங்கும். பிள்ளைகளிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். பெண்களுக்கு அடுத்தவருக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை.

கலைத் துறையினருக்கு முயற்சி செய்தால் பல புதிய வாய்ப்புகளைப் பெறலாம்.

### மீனம்

இந்த வாரம் எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் அதிகமாகும். பண வரவு எதிர்பார்த்தபடி இருக்கும். எதிர்ப்புகள் விலகும். புதிய நண்பர்கள் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். மரியாதை கூடும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். தேவையான பண உதவியும் கிடைக்கும். கடன் தொல்லை குறையும்.

தொழில் போட்டிகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும். கணவன், மனைவிக்கு இடையில் இருந்த கருத்து வேற்றுமை நீங்கி ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். உறவினர்கள் மூலம் நன்மை உண்டாகும். பெண்களுக்கு மனோ தைரியம் கூடும். கலைத் துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

# கோவை கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் 3 பேருக்கு சாகும் வரை சிறை தண்டனை: நீதிமன்றம் தீர்ப்பு



**கோவை, மார்ச் 8:**

கோவையில் கல்லூரி மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் கைதான மூவருக்கும் சாகும் வரை சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

கோவை பீளமேடு விமான நிலையம் அருகே, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் தேதி இரவு, கோவையைச் சேர்ந்த கல்லூரி மாணவி, ஆண் நண்பருடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த 3 நபர்கள், ஆண் நண்பரை தாக்கிவிட்டு, கல்லூரி மாணவியை கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்தனர். இந்த வழக்கு தொடர்பாக கருப்பசாமி, அவருடைய தம்பி காளீஸ்வரன் மற்றும் தவசி ஆகிய 3 பேரை மறுநாள் போலீஸார் துப்பாக்கியால் சுட்டுப் ப்டித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை, கோவை அனைத்து மகளிர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக முதல் கட்டமாக 50 பக்கமும், 2-வது கட்டமாக 220 பக்கமும் என மொத்தம் 270 பக்க குற்றப்பத்திரிகை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிபதி சுந்தர்ராஜ் முன்னிலையில் நடந்து வரும் இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட மாணவி, அவருடைய ஆண் நண்பர், உறவினர்கள், விசாரணை நடத்திய அதிகாரிகள் என 112 சாட்சிகள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டனர். 72 பேர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்தனர்.

சென்னையில் உள்ள தடயவியல் மற்றும் டி.என்.ஏ. பரிசோதனை அதிகாரிகள் காணொலி காட்சி மூலம் சாட்சியம் அளித்தனர். குற்றச் சம்பவம் நடந்து கடந்த 4 மாதங்களாக துரித விசாரணை நடைபெற்றது. குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் குற்றச்சாட்டு குறித்து நீதிபதி சுந்தர்ராஜ் கேள்வி கேட்டார்.

அரசு தரப்பு வழக்கறிஞர் பி.ஜிஷாவும் குற்றச்சாட்டுகள் குறித்து வாதிட்டார். இதைத் தொடர்ந்து எதிர்தரப்பு வழக்கறிஞர் ஒரு மணி நேரம் ஆஜராகி வாதாடினார். அவரது வாதத்துக்கு அரசு தரப்பு வழக்கறிஞர் பதில் வாதம் செய்தார்.

இதைத் தொடர்ந்து, இந்த வழக்கின் விசாரணை கடந்த மாதம் முடிந்தது. இதையடுத்து, இந்த வழக்கில் மார்ச் 7-ம் தேதி தீர்ப்பு கூறப்படும் என்று நீதிபதி சுந்தர்ராஜன் அறிவித்தார்.

அதன்படி கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள மகளிர் நீதிமன்றத்துக்கு குற்றச்சாட்டுக்குள்ள என மூவரும் பலத்த போலீஸ் பாதுகாப்பு அளித்துவரப்பட்டு இன்று (மார்ச் 7) ஆஜர்படுத்தப்பட்டனர். இந்த மூவர் மீதான குற்றச்சாட்டுகளை உறுதிபடுத்திய நீதிபதி சுந்தரராஜன், மூவருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு அளித்தார்.

## க்ரைம் கார்னர்

### சீருடையுடன் மதுபோதையில் பெண்ணின் வீட்டுக்குள் நுழைந்து பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட காவலர் கைது

**சென்னை, மார்ச் 8:**

சேலம் மாவட்டம், மேட்டூர் பகுதியைச் சேர்ந்தவர் சூர்யா (28). சென்னை ஐஸ்ஹவுஸ் காவல் நிலையத்தில் காவலராகப் பணியாற்றி வருகிறார். கருத்து வேறுபாடு காரணமாக மனைவியை பிரிந்து வசித்து வருகிறார்.

இவர் நேற்று முன்தினம் மாலை போலீஸ் சீருடையில் ராயப்பேட்டை பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்துள்ளார். பின்னர் அங்கு தனியாக இருந்த 32 வயதுடைய பெண்ணிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட முயன்றதாக கூறப்படுகிறது. காவலரை அந்த பெண் வீட்டுக்குள்ளே வைத்து வெளிப்புறமாக பூட்டிவிட்டு கூச்சலிட்டார். அதைக் கேட்டு அக்கம்பக்கத்தினர் திரண்டனர். மேலும் காவல் கட்டுப்பாட்டு அறைக்கும் தகவல் தெரிவித்தனர். போலீஸார் சம்பவ இடம் விரைந்து கதவைத் திறந்து காவலர் சூர்யாவை கைது செய்தனர். அப்போது அவர் மது போதையில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த விவகாரம் தொடர்பாக ஐஸ்ஹவுஸ் போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர் .இந்த விவகாரம் சமூக வலைதளங்களில் வைரலானது. இதையடுத்து, உரிய விசாரணை நடத்த காவல் ஆணையர் உத்தரவிட்டார். அதன்படி விசாரணை நடத்தப்பட்டது. இதில் காவலர் சூர்யா அத்துமீறியது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து அவரை காவல் ஆணையர் அருண் பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டார்.

### உரிய ஆவணமின்றி கொண்டுவரப்பட்ட ரூ.1.25 கோடி மதிப்பிலான தங்கம், வெள்ளி பறிமுதல்

**சென்னை, மார்ச் 8:**

சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ரயில்வே பாதுகாப்பு படையினர் வழக்கம்போல் நேற்று கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது நள்ளிரவு 12.10 மணியளவில் பெங்களூருவில் இருந்து சென்னை வந்த லால்பாக் எக்ஸ் பிரஸ் ரயில் பயணிகளிடம் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது ஒருவரிடமிருந்து ரூ.47.52 லட்சம் மதிப்பிலான 288 கிராம் எடையுள்ள 4 தங்கக் கட்டிகள், ரூ.29.40 லட்சம் மதிப்பிலான 10 கிலோ எடைகொண்ட ஒரு வெள்ளிக்கட்டி ஆகியவை கைப்பற்றப்பட்டன. இந்த பொருட்களுக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் ரயில்வே போலீஸார் இவற்றை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டனர். அதில் தங்கம் கடத்தி வந்த நபர் கர்நாடக மாநிலம் கோலார் மாவட்டத்தைச் சேர்ந்த வெங்கடேஷ் என்பது தெரிய வந்தது. இதேபோல நேற்று மதியம் 1 மணியளவில் விஜயவாடாவில் இருந்து சென்ட்ரல் வந்த பினாகினி அதிவிரைவு ரயில் பயணிகளிடம் சோதனை செய்த போது பயணி ஒருவரிடம்இருந்து உரிய ஆவணங்களின்றி எடுத்துவரப்பட்ட ரூ.48.59 லட்சம் பணத்தை ரயில்வே போலீஸார் பறிமுதல் செய்தனர். விசாரணையில் அந்த நபர் ஆந்திர மாநிலம் பிரகாசம் மாவட்டத்தைச் சேர்ந்த கார்த்திக் என்பது தெரிய வந்தது. இதையடுத்து பறிமுதல் செய்த பொருட்களையும், கடத்தலில் ஈடுபட்ட இருவரையும் ரயில்வே போலீஸார் வருமான வரித் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

### ஆங்கில மருத்துவம் பார்த்த மும்பை ஹோமியோபதி மருத்துவர் உதவியாளருடன் கைது

**சென்னை, மார்ச் 8:**

சென்னை நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் பிரபலமான தனியார் உணவகம் உள்ளது. அங்குள்ள அறை ஒன்றில் மகாராஷ்டிரா மாநிலம் மும்பையைச் சேர்ந்த பூனம் லலித் சர்மா (52) என்பவர் ஹோமியோபதி மருத்துவம் படித்துவிட்டு, காது தொடர்பான பிரச்சினைகளுக்கு ஆங்கில மருந்துகளைப் பயன்படுத்தியதோடு, அறுவை சிகிச்சைகளை செய்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இதுகுறித்து, சென்னையில் உள்ள மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்கக அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். இதில் பூனம் லலித் சர்மா ஆங்கில மருத்துவம் படிக்காமல் அது தொடர்பான சிகிச்சை அளித்து வந்தது உறுதி செய்யப்பட்டது. இதுகுறித்து அவர்கள் தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து பூனம் லலித் சர்மா, அவருக்கு உதவியாகவும் இருந்து வந்த சவுகார் பேட்டையைச் சேர்ந்த ஷில்பா (44) ஆகிய இருவரைக் கைது செய்தனர்.

## விளையாட்டு செய்திகள்

### சர்வதேச பிராக்ஸ் செஸ்: ஜோர்டானை வீழ்த்தினார் அரவிந்த்

**பிராக், மார்ச் 8:**

செக்குடியரசின் பிராக் நகரில் சர்வதேச பிராக்ஸ் செஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இதன் 8-வது சுற்றில் நடப்பு சாம்பியனான இந்திய கிராண்ட் மாஸ்டரான அரவிந்த் சிதம்பரம், நெதர்லாந்தின் ஜோர்டான் வான் பாரஸ்டை எதிர்த்து விளையாடினார். இதில் அரவிந்த் சிதரம்பரம் 63-வது காய் நகர்த்தலின் போது வெற்றி பெற்றார். அதேவேளையில் உலக சாம்பியனான இந்தியாவின் டி.குகேஷ், ஜெர்மனியின் வின்செட் கீமருக்கு எதிரான ஆட்டத்தை 47-வது நகர்த்தலின் போது டிரா செய்தார். 8 சுற்றுகளின் முடிவில் அரவிந்த் சிதம்பரம் 4 புள்ளிகளுடன் 6-வது இடத்தில் உள்ளார். உஸ்பெகிஸ்தானின் நோடிர்பெக் அப்துசத்தோரோவ் 5.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். ஜோர்டான் வான் பாரஸ்ட் 5 புள்ளிகளுடன் 2-வது இடத்திலும், செக்குடியரசின் டேவிட் நவரா 4.5 புள்ளிகளுடன் 3-வது இடத்திலும் உள்ளனர். 10 வீரர்கள் பங்கேற்றுள்ள தொடரில் குகேஷ் 2.5 புள்ளிகளுடன் கடைசி இடத்தில் உள்ளார். இன்று கடைசி சுற்று ஆட்டம் நடைபெறுகிறது.

### கிரிக்கெட்: எஸ்எஸ்என் கல்லூரி சாம்பியன்

**சென்னை, மார்ச் 8:**

சென்னையை அடுத்த கவரப்பேட்டையில் உள்ள ஆர்எம்கே பொறியியல் கல்லூரியில் மண்டல அளவிலான பொறியியல் கல்லூரிகளுக்கு இடையிலான மஞ்சுளா முனிரத்தினம் நினைவு கோப்பைக்கான கிரிக்கெட் தொடர் நடைபெற்றது. 16 அணிகள் கலந்துகொண்ட இந்த தொடரில் இறுதிப் போட்டியில் நேற்று ஆர்எம்கே - எஸ்எஸ்என் கல்லூரி அணிகள் மோதின. முதலில் பேட் செய்த ஆர்எம்கே அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 130 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக முகிலன் 37 ரன்கள் சேர்த்தார். 131 ரன்கள் இலக்குடன் பேட் செய்த எஸ்எஸ்என் கல்லூரி 17 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 132 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக வீரா 62, ஜித் 32 ரன்கள் சேர்த்தனர். 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற எஸ்எஸ்என் கல்லூரி அணி சாம்பியன் பட்டம் வென்றது. வெற்றி பெற்ற அணிக்கு ஆர்எம்கே கல்விக்குழுமங்களின் தலைவர் ஆர்.எஸ்.முனிரத்தினம் கோப்பையை வழங்கினார்.

### அபிஷேக் சர்மா மீது நம்பிக்கை வைக்க வேண்டும்: கபில்தேவ் வலியுறுத்தல்

**புதுடெல்லி, மார்ச் 8:**

முன்னாள் கேப்டன் கபில் தேவ் கூறியதாவது: அபிஷேக் சர்மா, மிகச் சிறந்த வீரர் என்பதில் சந்தேகமில்லை. இறுதிப் போட்டிக்கு அவரை அணி நிர்வாகம் தேர்வு செய்யவேண்டும். இதற்கு முந்தைய போட்டிகளில் அவரது செயல்திறனைப் பார்த்து முடிவு செய்யக்கூடாது. அபிஷேக் சர்மா மீது அணி நிர்வாகம் நம்பிக்கை வைக்கவேண்டும். நான் சிறப்பாக விளையாட முடியும், நான் நிச்சயம் உயர்மட்ட செயல்திறனை வெளிப்படுத்துவேன் என்று அபிஷேக் சர்மாவும் தன் மீது நம்பிக்கை வைக்கவேண்டும். இந்தத் தொடரில் இன்னும் ஒரே ஒரு ஆட்டம்தான் உள்ளது. கடந்த 2 போட்டிகளிலும் அவர் அபாரமாக விளையாடினார். இவ்வாறு கபில்தேவ் கூறினார்.

## வானிலை: தமிழகத்தில் வெப்ப நிலை 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்பு

**சென்னை, மார்ச் 8:**

தமிழகத்தில் வெப்ப நிலை நாளை (மார்ச் 8) வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (மார்ச் 8) நீலகிரி மாவட்டம் மற்றும் கோவை மாவட்டதின் மலை பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

மார்ச் 9-ம் தேதி மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தமிழக கடலோர மாவட்டங்களிலும், 10-ம் தேதி தென் தமிழக மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மார்ச் 11-ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 12, 13 தேதிகளில் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்ப நிலை, வழக்கத்தை விட ஒரு சில இடங்களில் நாளை 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 77 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுத்தேர்வு எழுதும் மாற்று திறனாளி மாணவர்களுக்கு கூடுதலாக ஒரு மணி நேரம் சலுகை: தேர்வு துறை இயக்குநர் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 8:**



அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கு தேர்வு துறை இயக்குநர் க.சசிகலா அனுப்பிய சுற்றறிக்கையில்: பொதுத்தேர்வு எழுதும் மாற்று திறனாளி மாணவர்களுக்கு வழக்கத்தை விட கூடுதலாக ஒரு மணி நேரம் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம் அந்த மாணவர்கள் கூடுதல் ஒரு மணி நேரம் சலுகையை பயன்படுத்த விரும்பவில்லை எனில் அதற்கு அனுமதிக்க வேண்டும்.

அதாவது, வழக்கமான தேர்வு நேரமான 3 மணி நேரம் (காலை 10.15 முதல் மதியம் 1.15 மணி வரை) முடிந்த பின்னர் மாற்று திறனாளிகள் தங்கள் விருப்பத்தின்படி தேர்வு அறையை விட்டு செல்லலாம். அதற்கான படிவத்தில் பூர்த்தி செய்து கையொப்பமிட வேண்டும். அந்த படிவங்களை தொகுத்து அனைத்து தேர்வுகளும் முடிந்ததும், சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்வு துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க முதன்மை கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

## நாங்குநேரி இரட்டைக்கொலை: சமூக வலைதளங்களில் பதிவு; 11 வழக்குப்பதிவு, 2 பேர் கைது

**திருநெல்வேலி, மார்ச் 8:**




திருநெல்வேலி மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி பகுதியில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக, சமூக வலைதளங்களில் வன்முறையை தூண்டும் வகையிலும், பொது அமைதி மற்றும் சமூக நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையிலும் பதிவுகள் வெளியிடப்பட்ட குற்றத்திற்காக, மாவட்டம் முழுவதும் இதுவரை 11 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்சொன்ன வழக்குகளில் தொடர்புடைய 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் இதில் தொடர்புடைய 2 இளஞ்சிறார்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளனர். வன்முறையை ஊக்குவிக்கும் வகையிலான மற்றும் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் பதிவுகளை சமூக வலைதளங்களில் வெளியிடும் நபர்களை திருநெல்வேலி மாவட்ட காவல்துறை தொடர்ந்து தீவிரமாக கண்காணித்து வருகிறது.

திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. பிரசண்ண குமார், இவ்வாறான சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது பாரபட்சமின்றி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும், பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளில் தொடர்புடைய மற்ற நபர்களை கண்டறிந்து கைது செய்ய நவீன தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வணிகச் செய்திகள்

### தொடர் சரிவுக்கு பிறகு சற்றே உயர்ந்த தங்கம் விலை

**சென்னை, மார்ச் 8:**

ஈரான் - அமெரிக்கா, இஸ்ரேல் இடையிலான போர் காரணமாக தங்கத்தின் விலையில் பெரிய அளவில் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த போரினால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்படும் சூழல் நிலவுவதாக தகவல்.

தங்கம் விலை மார்ச் 2-ம் தேதி பவுனுக்கு ரூ.920 என குறைந்தது. அதன் பின்னர் மார்ச் 3 - ரூ.1,560, மார்ச் 4 - ரூ.2,120, மார்ச் 5 - ரூ.640, மார்ச் 6 - ரூ.1,280 என விலை குறைந்தது. இந்த சூழலில் சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று உயர்ந்துள்ளது.

இன்று (சனிக்கிழமை) காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.90 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.15,050-க்கும், பவுனுக்கு ரூ.720 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,20,400-க்கும் விற்பனை ஆகிறது.

24 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.784 என விலை உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,31,344-க்கு விற்பனை ஆகிறது. 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.320 என விலை உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,04,560-க்கு விற்பனை ஆகிறது. வெள்ளி விலையில் மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.290-க்கும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.2,90,000-க்கும் விற்பனை ஆகிறது.

## மதுரை - கொல்லம் 4 வழிச்சாலை: வடுகபட்டி - ராஜபாளையம் இடையிலான 36 கி.மீ. சாலை ஏப்ரலில் திறப்பு

**ஸ்ரீவில்லிபுத்தூர், மார்ச் 8:**

மதுரை-கொல்லம் நான்கு வழிச் சாலை திட்டத்தில் வடுகப்பட்டி-ராஜபாளையம் இடையேயான 35.6 கிலோ மீட்டர் சாலை ஏப்ரலில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்படுகிறது. இவ்வழித்தடத்தில் விபத்துகளை தவிர்க்கும் வகையில் சென்டர் மீடியன் கிராஸிங் இல்லாமல் அமைக்கப்படுவதாக தேசிய நெடுஞ் சாலை ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மதுரை-கொல்லம் தேசிய நெடுஞ்சாலை நான்கு வழிச் சாலையாக (என்.ஹெச்744) தரம் உயர்த்த 2022 ஜனவரியில் அரசாணை வெளியிடப்பட்டது.

முதற்கட்டமாக திருமங்கலம்-ராஜபாளையம் இடையே 71.6 கிலோ மீட்டர் தொலைவுக்கு நான்கு வழிச்சாலை அமைக்க ரூ.1,318 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 2023 மார்ச் மாதம் பணிகள் தொடங்கியது.

இதில் திருமங்கலம்-வடுகப்பட்டி (36 கி.மீ), வடுகபட்டி - ராஜபாளையம் (35.6 கி.மீ) 2 பிரிவுகளாக பிரித்து பணிகள் நடைபெற்று வருகிறது. வடுகப்பட்டி - ராஜபாளையம் பிரிவில் கிருஷ்ணன்கோவில் வரை தற்போதைய சாலையே நான்கு வழிச் சாலையாக விரிவாக்கம் செய்யப்பட்டு உள்ளது.

கிருஷ்ணன்கோவில் - ராஜபாளையம் இடையே 27 கிலோ மீட்டர் தொலைவுக்கு புதிதாக நான்கு வழிச்சாலை அமைக்கப்பட்டு உள்ளது.

இதில் 2 ரயில்வே மேம்பாலங்கள், 1 மேம்பாலம், 19 பாலங்கள், சிறிய வாகனங்கள் மற்றும் மக்கள் செல்லும் வகையில் 16 சுரங்கப்பாதை, 62 நீர்வழிப் பாதைகள் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்த சாலையில் நத்தம்பட்டியில் சுங்கச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

சாலைஅமைக்கும்பணிகள் 99.7 சதவீதம் முடிவடைந்த நிலையில், ஏப்ரல் மாதம் வடுகப்பட்டி-ராஜபாளையம் இடையேயான நான்கு வழிச்சாலை பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஈரான் போர்க் கப்பல் மூழ்கடிப்பு: இந்தியா மீதான குற்றச்சாட்டுக்கு மத்திய அரசு மறுப்பு



**புதுடெல்லி, மார்ச் 8:**

ஈரான் போர்க் கப்பலை அமெரிக்கா தாக்கி அழித்த விவகாரத்தில் இந்தியா மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளை மத்திய அரசு உறுதியாக மறுத்துள்ளது.

இலங்கை கடல்பரப்பு அருகே சர்வதேச கடல் எல்லையில் கடந்த 4-ஆம் தேதி ஈரானின் 'ஐரிஸ் டெனா' போர்க் கப்பலை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் குண்டு வீசி மூழ்கடித்தது. இதில் 87 ஈரான் கடற்படை வீரர்கள் உயிரிழந்தனர். 37 பேரை இலங்கை கடற்படையினர் மீட்டனர். விசாகப்பட்டினத்தில் கடந்த மாத இறுதியில் இந்தியா நடத்திய பல்வேறு நாடுகள் பங்கேற்ற கடற்படைப் பயிற்சியை முடித்துக் கொண்டு நாடு திரும்பியபோது இந்த சம்பவம் நிகழ்ந்தது.

பிப். 25-ஆம் தேதி இந்திய கடல் எல்லையை விட்டு வெளியேறிவிட்ட ஈரான் போர்க்கப்பலில் ஆயுத தளவாடங்கள் எதுவும் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்குத் தெற்கே 40 கடல் மைல் (சுமார் 74 கி.மீ.) தொலைவில் இந்திய பெருங்கடலில் அந்தப் போர்க்கப்பல் தகர்க்கப்பட்டது. எனினும், இதை முன்வைத்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மத்திய அரசை வன்மையாகக் கண்டித்தன. இந்தியாவின் மிக அருகில் வந்து அமெரிக்கா தாக்குதல் நடத்திய நிலையில், பிரதமர் மோடி அமைதி காப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டினார். தங்கள் நாட்டு கடல் எல்லையில் இருந்து பல நூறு கி.மீ. அப்பால் இருந்த போர்க் கப்பலை அமெரிக்கா தாக்கி அழித்ததற்கு உரிய விளைவுகளைச் சந்திக்கும் என்று ஈரான் ஏற்கெனவே எச்சரித்துள்ளது. இந்நிலையில், ஈரான் போர்க் கப்பல் குறித்து இந்திய கடற்படை அமெரிக்காவுக்கு உளவுத்தகவல் வழங்கியதாகப் பரப்பப்படும் தகவல் முற்றிலும் பொய்யானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருப்பதி தேவஸ்தான முழு நேர நிர்வாக அதிகாரியாக ரவிசந்திரா பதவியேற்பு



**திருப்பதி, மார்ச் 8:**

திருப்பதி தேவஸ்தானத்தில் ஜெகன்மோகன் ஆட்சி காலத்தில் நடந்த கலப்பட நெய் விவகாரத்தில் சம்மந்தப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கலாம் என ஆந்திர அரசுக்கு சிபிஐ விசாரணை குழு பரிந்துரை செய்தது. அதன்பேரில், தேவஸ்தான நிர்வாக அதிகாரி அனில்குமார் சிங்கால் இடமாற்றம் செய்யப்பட்டார். இவரை தொடர்ந்து, முதல்வர் அலுவலகத்தில் முக்கிய பொறுப்பில் இருந்த ஐஏஎஸ் அதிகாரி ரவிசந்திராவை அரசு தற்காலிக நிர்வாக அதிகாரியாக நியமனம் செய்தது. சமீபத்தில் அவரை நிரந்தர நிர்வாக அதிகாரியாக பணி நியமனம் செய்து உத்தரவிட்டது. அதன்பேரில் ஏழுமலையான் கோயிலில் பதவி பொறுப்பேற்றார். முன்னதாக ரவிசந்திரா தம்பதியினர் ஏழுமலையானை தரிசனம் செய்தனர். அவர்களுக்கு தேவஸ்தானம் சார்பில் கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கைய்ய சவுத்ரி தீர்த்த பிரசாதங்கள், மற்றும் சுவாமியின் திரு உருவப்படத்தையும் வழங்கி கவுரவித்தார்.

## பணமோசடி வழக்கு: ரிலையன்ஸ் நிறுவனத்தில் அமலாக்கத்துறை ரெய்டு

**மும்பை, மார்ச் 8:**

இந்தியாவில் முன்னணி தொழிலதிபர்களில் ஒருவர் அனில் அம்பானி. அனில் திருபாய் அம்பானி குழுமத்தின் தலைவரான இவர் ரிலையன்ஸ் பவர் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களை நடத்தி வருகிறார். இதனிடையே, ரிலையன்ஸ் பவர் உள்பட ரிலையன்ஸ் குழுமத்தின் பெயரில் பெற்ற கடன், சட்டவிரோதமாக மற்ற நிறுவனங்களுக்கு மாற்றம் செய்துள்ளதாக அனில் அம்பானி மீது குற்றச்சாட்டு எழுந்தது. விசாரணையில், அனில் அம்பானி ரூ.40 ஆயிரம் கோடி பண மோசடி செய்துவிட்டதாக சிபிஐ வழக்குப்பதிவு செய்துள்ளது.

சட்டவிரோத பணப் பரிமாற்ற தடுப்பு சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறையும் வழக்குப் பதிவு செய்துள்ளது. இந்த வழக்கு தொடர்பாக அனில் அம்பானி வீடு, அலுவலகம் உட்பட 35க்கும் மேற்பட்ட இடங்களில், அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. மேலும், அனில் அம்பானிக்கு நோட்டீஸ் அனுப்பிய அமலாக்கத்துறை அவரிடம் விசாரணை நடத்தியது. மேலும், பணமோசடி வழக்கு தொடர்பாக அனில் அம்பானியில் ரூ. 15 ஆயிரத்து 700 கோடி சொத்துக்களை அமலாக்கத்துறை ஏற்கனவே முடக்கியுள்ளது. இந்நிலையில், பணமோசடி வழக்கு தொடர்பாக ரிலையன்ஸ் பவர் நிறுவனம் மற்றும் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறை அதிரடி சோதனை நடத்தி வருகிறது.

## மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான 4 டிஜிட்டல் தளங்கள் அறிமுகம்

**புதுடெல்லி, மார்ச் 8:**

மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான 4 டிஜிட்டல் தளங்கள் மற்றும் சின்னங்களை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா டெல்லியில் நேற்று அறிமுகம் செய்தார்.



பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. கடந்த 2011-ம் ஆண்டில் நாடு தழுவிய அளவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன் பிறகு 2021ம் ஆண்டில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கரோனா பெருந்தொற்று காரணமாக கணக்கெடுப்பு பணி தள்ளிவைக்கப்பட்டது. இந்த சூழலில் நாடு முழுவதும் இரு கட்டங்களாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று மத்திய அரசு கடந்த ஆண்டு அறிவித்தது. இதன்படி ஏப்ரல் 1-ம் தேதி முதல் செப்டம்பர் 30 வரை வீடுகள், கட்டிடங்கள், வீட்டில் உள்ள வசதிகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட உள்ளன. இதன் பிறகு அடுத்த ஆண்டு பிப்ரவரியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கப்படும். அப்போது ஒவ்வொரு நபரின் சமூக, பொருளாதார தகவல்கள் சேகரிக்கப்பட உள்ளன. இந்த சூழலில் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான டிஜிட்டல் தளங்கள், சின்னங்களை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா டெல்லியில் அறிமுகம் செய்தார். முதல் முறையாக டிஜிட்டல் முறையில் மக்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. இதற்காக 4 டிஜிட்டல் தளங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. வீடுகள், கட்டிடங்கள் தொடர்பான பட்டியலை தயாரிக்க புதிதாக செயலி உருவாக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் நாடு முழுவதும் பல்வேறு புவியியல் பகுதிகளை உறுதி செய்து, செயற்கைக்கோள் படங்களைப் பயன்படுத்தி டிஜிட்டல் முறையில் வீடுகள், கட்டிடங்களின் பட்டியலை தயாரிக்க முடியும்.

## இந்திய மாணவர்களுக்கு வழங்கப்படும் அமெரிக்க கல்வி விசா 69% குறைந்தது

**புதுடெல்லி, மார்ச் 8:**

இந்திய மாணவர்களுக்கு வழங்கப்படும் அமெரிக்க கல்வி விசா 69 சதவீதம் அளவுக்கு குறைந்து உள்ளது.




கடந்த 2017 முதல் 2021-ம் ஆண்டு வரை அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவி வகித்தார். அப்போது அமெரிக்காவில் வசிக்கும், பணியாற்றும் வெளிநாட்டினர் மீது மிகப் பெரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

கடந்த ஆண்டு ஜனவரியில் ட்ரம்ப் 2-வது முறையாக அதிபராக பதவியேற்றார். அப்போது முதல் இந்தியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டினர் மீது அவர் மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த சுமார் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் நாடு கடத்தப்பட்டனர். அமெரிக்காவில் பணியாற்ற வழங்கப்படும் எச்1 பி விசா கட்டணம் ரூ.88 லட்சமாக உயர்த்தப்பட்டது. அமெரிக்காவில் கல்வி பயில வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் எப்1 விசா கட்டணம் இரு மடங்காக அதிகரிக்கப்பட்டு உள்ளது.

மேலும் விசா நடைமுறைகளும் கடுமையாக்கப்பட்டு உள்ளன.

கடந்த 2018-ல் 26,506 இந்திய மாணவர்களுக்கு எப்1 விசாக்கள் வழங்கப்பட்டன. கடந்த 2019-ல் 26,247 விசாக்கள் விநியோகிக்கப்பட்டன. கரோனா தொற்று காரணமாக கடந்த 2020-ம் ஆண்டில் 114 இந்திய மாணவர்களுக்கு மட்டுமே எப்1 விசா வழங்கப்பட்டது.

கடந்த 2021-ம் ஆண்டில் 40,194 பேர், 2022-ம் ஆண்டில் 62,229 பேர், 2023-ம் ஆண்டில் 72,027 பேர், 2024-ம் ஆண்டில் 41,336 இந்திய மாணவர்கள் எப்1 விசாக்களை பெற்றனர். ஆனால் கடந்த 2025-ம் ஆண்டில் 12,776 இந்திய மாணவர்களுக்கு மட்டுமே எப்1 விசா வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த 2024-ம் ஆண்டை ஒப்பிடும்போது 2025-ம் ஆண்டில் இந்திய மாணவர்களுக்கு வழங்கப்படும் அமெரிக்க கல்வி விசா 69 சதவீதம் வரை குறைந்து உள்ளது.

# போர் காரணமாக மருந்து ஏற்றுமதி பாதிப்பு: நிறுவனங்களுக்கு ரூ.5,000 கோடி இழப்பு அபாயம்

**புதுடெல்லி, மார்ச் 8:**



இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர் இறக்குமதி, ஏற்றுமதியில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. ஹார்முஸ் ஜலசந்தியை மூடுவதாக ஈரான் அச்சுறுத்தியிருப்பதே இதற்கு காரணம். ஏனெனில், மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான முக்கிய கடல் பாதையாக ஹார்முஸ் ஜலசந்தி உள்ளது.

மத்திய கிழக்கில் 3 நாடுகளுக்கு இடையிலான போர் காரணமாக, உலகளாவிய சரக்குகளுக்கான ஏற்றுமதி, இறக்குமதி செலவுகள் அதிகரித்துள்ளன. இதுகுறித்து இந்திய மருந்து ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சிலின் தலைவர் நமித் ஜோஷி கூறியதாவது: வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் (ஜிசிசி) உறுப்பு நாடுகள் இந்திய மருந்து நிறுவனங்களின் மொத்த ஏற்றுமதியில் 5.58 சதவீதத்தைக் கொண்டுள்ளன. மேற்கு ஆசியா மற்றும் வடஆப்பிரிக்கா பிராந்தியத்திற்கான மருந்து ஏற்றுமதியின் மதிப்பு 2024-25 நிதியாண்டில் 1,749.6 மில்லியன் டாலராக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சவுதி, ஓமன், குவைத் மற்றும் ஏமன் போன்ற முக்கிய சந்தைகள் மலிவு விலையில், பொதுவான மருந்துகளை வாங்குவதற்கு இந்தியாவை பெரிதும் நம்பியுள்ளன. ஜோர்டான், குவைத் மற்றும் லிபியா போன்ற வளர்ந்து வரும் சந்தைகளுக்கான ஏற்றுமதியும் சமீப காலமாக அதிகரித்துள்ளது. இந்நிலையில் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் இந்திய மருந்து ஏற்றுமதியை பாதிக்கலாம் என கூறப்படுகிறது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி இரண்டிற்கும் சரக்கு வரியும் இரண்டு மடங்காகி உள்ளது.

இவை, மருந்து ஏற்றுமதி நிறுவனங்களை மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாக்குகின்றன. மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக மார்ச் மாதத்தில் ஏற்றுமதிகள் முற்றிலுமாக பாதிக்கப்பட்டால், மருந்து தொழில்துறை 5,000 கோடி ரூபாய் வரை இழப்புகளை சந்திக்க நேரிடும். மருந்து ஏற்றுமதியாளர்களுக்கான சரக்கு நிவாரணம், மானியங்கள் மற்றும் தளவாட ஆதரவு போன்ற நடவடிக்கைகளை மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும். மத்திய அரசின் உதவியால் மட்டுமே ஏற்படவிருக்கும் இழப்பு குறையும். இவ்வாறு நமித் ஜோஷி தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்ற வாயில்களில் 10 கி.மீ. வேகம் மட்டுமே! எம்.பி.க்களுக்கு அறிவுறுத்தல்!

**புதுடெல்லி, மார்ச் 8:**

நாடாளுமன்ற வாயில்களில் நுழையும்போது, அதிகபட்சமாக 10 கி.மீ. வேகத்தில்தான் கார் இயக்கப்பட வேண்டும்; இல்லையெனில், உயர் தொழில்நுட்ப பாதுகாப்பு சாதனங்கள் தாமாக செயல்பட்டு வாகனத்துக்கு சேதம் விளைவிப்பதுடன், உள்ளே இருப்பவரும் காயமடைய வாய்ப்புள்ளது என்று எம்.பி.க்களுக்கு நாடாளுமன்ற பாதுகாப்புப் பணி அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

பட்ஜெட் கூட்டத் தொடரின் இரண்டாம் கட்ட அமர்வு மார்ச் 9-ஆம் தேதி தொடங்கவுள்ள நிலையில், நாடாளுமன்ற வளாகத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான நாடாளுமன்ற பாதுகாப்புப் பணி அமைப்பு, எம்.பி.க்களுக்கான புதிய அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது.

அதில், 'நாடாளுமன்ற நுழைவாயில்களில் உள்ள உயர் தொழில்நுட்ப பாதுகாப்பு சாதனங்களைக் கடந்து செல்லும் வரையில் காரின் வேகம் 10 கி.மீ.க்கு மிகாமல் பராமரிக்கப்பட வேண்டும். இல்லையெனில், டயர்களை சேதப்படுத்தி, தடையை உருவாக்கக் கூடிய அமைப்புகள் தாமாக செயல்பட்டுவிடும். இதனால், வாகனம் சேதமடைவதுடன், உள்ளே இருப்பவரும் காயமடைய வாய்ப்புள்ளது.

இதேபோல், தானியங்கி தடுப்பை கடந்து செல்லும்போது, வாகனங்களுக்கு இடையே குறைந்தபட்சம் 5 அடி இடைவெளி கடைப்பிடிக்கப்பட வேண்டும். இந்த அமைப்பு, ஒரு நேரத்தில் ஒரு வாகனத்தை மட்டுமே அனுமதிக்கும்.

ஒருவேளை தானியங்கி தடுப்பு மீது எதிர்பாராதவிதமாக மோதிவிட்டால் வாகனத்தை ஓட்டுநர் உடனடியாக நிறுத்திவிட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## அமெரிக்காவின் மிரட்டல் எத்தனை நாள்களுக்குத் தொடரும்?: காங்கிரஸ்

**புதுடெல்லி, மார்ச் 8:**

காங்கிரஸ் பொதுச் செயலர் ஜெய்ராம் ரமேஷ் தனது எக்ஸ் பக்கத்தில் வெள்ளிக்கிழமை வெளியிட்ட பதிவில், 'அமெரிக்க அதிபர் டிரம்ப் தற்போது புதிய விளையாட்டை தொடங்கியுள்ளார். இந்தச் சூழலில், ரஷிய அதிபர் புதினிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்து கொள்ளலாம் என இந்தியாவிலுள்ள தனது நண்பருக்கு டிரம்ப் தற்காலிக அனுமதியை அளித்துள்ளார். அமெரிக்காவின் இந்த மிரட்டல் எத்தனை நாள்களுக்குத் தொடரும்?' என்று கேள்வி எழுப்பியுள்ளார். பிரதமரின் ராஜதந்திரத்துக்கான வெற்றி - பாஜக: ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்துகொள்ளும் வகையில் இந்தியா மீதான கட்டுப்பாடுகளுக்கு அமெரிக்கா 30 நாள்கள் தற்காலிக விலக்கு அளித்திருப்பது பிரதமர் நரேந்திர மோடியின் ராஜதந்திரத்துக்கு கிடைத்த வெற்றி என்று பாஜக பெருமிதம் தெரிவித்தது.

இதுகுறித்து பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் பிரதீப் பண்டாரி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் இந்தியாவின் முக்கிய கச்சா எண்ணெய் வள ராஜதந்திரம் மீண்டும் வெற்றி பெற்றுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு என்ற பொய்யான செய்திகளைப் பரப்பி மக்களிடையே பீதியை ஏற்படுத்திய இந்திய விரோத ராகுல் காந்தி முகத்திலும், காங்கிரஸ் மீதும் பெரிய முட்டை விழுந்துள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

## ராஜஸ்தானில் நிலநடுக்கம்: ரிக்டர் அளவில் 3.5 ஆக பதிவு

**புதுடெல்லி, மார்ச் 8:**

ராஜஸ்தானின் சிகார் பகுதியில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. காலை 6.32 மணியளவில் ரிக்டர் அளவில் 3.5 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 5 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 27.42 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 75.37 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை.

## ஆந்திராவில் தம்பதிகளுக்கு ரூ.25,000.. அரசின் அதிரடி அறிவிப்பால் பெற்றோர் குதூகலம்..!

**அமராவதி, மார்ச் 8:**

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் குறைந்து வரும் பிறப்பு விகிதம் மற்றும் அதிகரித்து வரும் முதியோர் மக்கள்தொகை ஆகிய சவால்களைச் சமாளிக்க, முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு ஒரு புரட்சிகரமான மக்கள்தொகை மேலாண்மைக் கொள்கையை அறிவித்துள்ளார். இந்தக் கொள்கையின் கீழ், அதிக குழந்தைகளைப் பெற்றெடுக்கும் தம்பதிகளுக்குப் பல்வேறு நிதியுதவிகள் மற்றும் சலுகைகளை அரசு வாரி வழங்கி உள்ளது.

* இரண்டாவது அல்லது மூன்றாவது குழந்தையைப் பெற்றெடுக்கும் தம்பதிகளுக்குத் தலா ரூ. 25,000 ஒருமுறை நிதியுதவியாக வழங்கப்படும். * மூன்றாவது குழந்தையின் ஊட்டச்சத்து மற்றும் பராமரிப்புச் செலவுகளுக்காக, அக்குழந்தைக்கு 5 வயது ஆகும் வரை மாதம் ரூ. 1,000 வீதம் மொத்தம் 60 மாதங்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்.

* 18 வயது வரை குழந்தைகளுக்கு இலவச கல்வி வழங்க ஏற்பாடு செய்யப்படும். மக்கள்தொகை பெருக்கத்தை ஊக்குவிக்க அரசு ஊழியர்களுக்குக் கூடுதல் சலுகைகளை முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார்.

*தாய்மார்களுக்கு 12 மாதங்கள் (ஒரு வருடம்) சம்பளத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு. *தந்தைமார்களுக்கு 2 மாதங்கள் தந்தைவழி விடுப்பு. * கூடுதல் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் ஊழியர்களுக்குப் பதவி உயர்வுகளில் முன்னுரிமை அளிப்பதற்கான சட்டத் திருத்தங்களும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

ஆந்திராவின் மொத்தக் கருவுறுதல் விகிதம் (Total Fertility Rate - TFR) தற்போது 1.5 ஆகக் குறைந்துள்ளது. இது மக்கள்தொகையை நிலையாக வைத்திருக்கத் தேவையான 2.1 என்ற அளவை விட மிகவும் குறைவு. இதனால், 2047-ம் ஆண்டிற்குள் ஆந்திரா ஒரு "வயதான மாநிலமாக" மாறும் அபாயம் உள்ளதால், இளைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முதல்-மந்திரி இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளதாக கூறப்படுகிறது.

# ‘எங்கள் கப்பலை இந்தியப் பெருங்கடலில் மூழ்கடித்தது போர்க்குற்றம்!’ - ஐ.நாவில் ஈரான் குற்றச்சாட்டு

**நியூயார்க், மார்ச் 8:**

இந்திய பெருங்கடலில் ஐ.ஆர்.ஐ.எஸ் தேனாவை மூழ்கடித்த அமெரிக்காவின் தாக்குதல் சர்வதேச சட்டத்தை மீறியது, போர்க்குற்றம் என்று ஈரான் ஐ.நா.வில் குற்றம் சாட்டியுள்ளது.

நியூயார்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய ஐ.நா.வுக்கான ஈரானின் தூதர் அமீர் சயீத் இரவானி, "ஈரானின் கடற்கரையிலிருந்து கிட்டத்தட்ட 2,000 மைல்கள் தொலைவில் இந்தியப் பெருங்கடலில் அமெரிக்கா ஓர் ஆபத்தான




ஆக்கிரமிப்புச் செயலை செய்தது. நல்லெண்ணப் பயணத்தில் இந்திய கடற்படையின் அழைப்பின் பேரில் சுமார் 130 மாலுமிகளை ஏற்றிச் சென்ற ஈரானிய போர்க்கப்பலான தேனா சர்வதேச நீரில் தாக்கப்பட்டது. கிட்டத்தட்ட 100 ஈரானிய மாலுமிகள் கொல்லப்பட்டனர். அமெரிக்கா ஒரு போர்க்குற்றத்தைச் செய்தது. இந்த கொடூரமான மற்றும் சட்டவிரோத தாக்குதல் சட்டம் மற்றும் கடல்வழி சுதந்திரத்தின் அடிப்படைக் கொள்கையின் கடுமையான மீறலாகும். மேலும், தனது நாட்டுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து நடத்தும் கூட்டு ராணுவ நடவடிக்கையை நிறுத்த உறுதியாகவும், தெளிவாகவும், தாமதமின்றியும் தலையிட வேண்டும்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் நமது மக்களுக்கு எதிராகச் செய்து வரும் ஆக்கிரமிப்பு, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களைக் கண்டிக்க ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் மற்றும் பொதுச் செயலாளரை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம். ஈரானுக்கு எதிராகவும், பொதுமக்களுக்கு எதிராகவும் அனைத்து குற்றங்கள் மற்றும் ராணுவத் தாக்குதல்களையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர கட்டாயப்படுத்த வேண்டும். சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் போர்க்குற்றங்களின் மீதான இந்த கடுமையான மீறல்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்ய வேண்டும்." என்று அவர் கூறினார்.

## ட்ரம்ப் மீது பாலியல் புகார் புதிய ஆவணங்கள் வெளியீடு

**வாஷிங்டன், மார்ச் 8:**

வாஷிங்டன்: மறைந்த தொழிலதிபர் ஜெப்ரி எப்ஸ்டீன் தொடர்பான பாலியல் வழக்கில், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தமக்கு உடல்ரீதியாக தொல்லை அளித்ததாகப் பெண் ஒருவர் தெரிவித்துள்ள புதிய புகார்கள் அடங்கிய எப்ஸ்டீன் கோப்புகளை அமெரிக்க நீதித்துறை வியாழக்கிழமை வெளியிட்டது.

மறைந்த பாலியல் குற்றவாளி எப்ஸ்டீன் மூலம் ட்ரம்ப் தமக்கு அறிமுகமானதாகவும், அதன் பிறகு அவர் தமக்கு பாலியல் ரீதியாகத் துன்புறுத்தல் அளித்ததாகவும் அந்தப் பெண் எப்பிஐ அதிகாரிகளிடம் அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். கடந்த 2019-ம் ஆண்டு அந்தப் பெண்ணிடம் எப்பிஐ நடத்திய பலகட்ட விசாரணைகளின் விவரங்கள் தற்போது வெளியாகியுள்ளன. அதில், தமக்கு 13- 15 வயது இருக்கும்போது எப்ஸ்டீன் மற்றும் ட்ரம்ப் ஆகிய இருவராலும் தாம் பாதிக்கப்பட்டதாக அந்தப் பெண் கூறியுள்ளார்.

எப்ஸ்டீன் தன்னை நியூஜெர்சிக்கு அழைத்துச் சென்று ட்ரம்ப்புக்கு அறிமுகம் செய்து வைத்ததாகவும், அப்போது தமக்கு நேரிட்ட பாலியல் அத்துமீறலைத் தடுக்க முயன்றபோது தாம் அவரை கடித்ததாகவும் அந்தப் பெண் குறிப்பிட்டுள்ளார். மேலும், இந்த விவகாரத்தில் மிரட்டல் அழைப்புகள் வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும், ட்ரம்ப் இந்த குற்றச்சாட்டுகளைத் திட்டவட்டமாக மறுத்துள்ளார். இதனிடையே, ட்ரம்ப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எப்ஸ்டீன் விசாரணை விவரங்களை ட்ரம்ப் நிர்வாகம் மறைப்பதாக ஜனநாயகக் கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

## காமேனி வீட்டின் கீழ் அமைந்த பதுங்கு குழிகளை 50 இஸ்ரேல் விமானங்கள் தாக்கின: வீடியோ வெளியீடு

**காசா, மார்ச் 8:**

அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதலில் ஈரான் உச்சத் தலைவர் அயத்துல்லா அலி காமேனி கடந்த வாரம் உயிரிழந்தார்.

அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்த வந்தபோது பதுங்கு குழிகள் மீது இஸ்ரேல் வான்படைகள் நடத்திய அதிரடி ஏவுகணை தாக்குதலில் அவர் உட்பட பலர் உயிரிழந்தனர். இதுதொடர்பான வீடியோவை இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் (ஐடிஎஃப்) வெளியிட்டுள்ளன. இந்த வீடியோ தற்போது வைரலாகியுள்ளது. அலி காமேனி தனது வீட்டின் கீழ்ப்பகுதியில் அமைக்கப்பட்டு இருந்த பதுங்கு குழிகள் மீது 50 இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின. பதுங்கு குழிகளை தகர்க்கும் அளவுக்கு மிகவும் அதிரடியான ஆயுதங்கள் கொண்டு இஸ்ரேல் விமானப்படையினரால் தாக்கப்பட்டது. இந்த பதுங்கு குழிகளில் இருந்தபடிதான் அவர் போர் தொடர்பான உத்தரவுகளை பிறப்பித்து வந்தார். 50 விமானங்கள் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தியபோது அப்பகுதி இருந்த கட்டிடங்கள் முழுவதும் வெடித்துச் சிதறின. இதனால் அங்கு எழும்பும் புகை மண்டலமும் வீடியோவில் பதிவாகியுள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப்படைகள், ஈரான் இடையேயான போர் 7-வது நாளை எட்டிய நிலையில் நேற்று இந்த வீடியோ வெளியிடப்பட்டுள்ளது. இந்த வீடியோ உலகம் முழுவதும் வைரலாகியுள்ளது.

## ஈரானின் ட்ரோன் ஏவும் கப்பல் உட்பட 30+ போர்க் கப்பல்களை தகர்த்தது அமெரிக்கா

**வாஷிங்டன், மார்ச் 8:**

ஈரான் கடற்படையின் ட்ரோன் ஏவும் கப்பல் உட்பட 30-க்கும் மேற்பட்ட கப்பல்களை தகர்த்ததாகவும், கடந்த 72 மணி நேரத்தில் ஈரானில் 200 இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க ராணுவ கமாண்டர் அட்மிரல் பிராட் கூபர், பாதுகாப்புத்துறை அமைச்சர் பீட் ஹெக்சேத் ஆகியோர் புளோரிடாவில் நேற்று அளித்த பேட்டியில் கூறியதாவது; ஈரான் கடற்படையை ஒட்டு மொத்தமாக அழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்க படைகள் ஈடுபட்டுள்ளன. ஈரானின் மிகப் பெரிய ட்ரோன் ஏவும் போர்க்கப்பலை நேற்று தகர்த்தோம். அது தற்போது எரிந்து கொண்டிருக்கிறது. அமெரிக்கா - இஸ்ரேல் தாக்குதல் தொடங்கியதில் இருந்து இதுவரை 30-க்கும் மேற்பட்ட ஈரான் போர்க்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

கடந்த 72 மணி நேரத்தில், ஈரானின் சுமார் 200 இலக்குகள் மீது அமெரிக்க படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன. பூமிக்கு அடியில் ஈரான் அமைத்துள்ள ஏவுகணை தளங்கள் மீது, அமெரிக்காவின் பி-2 குண்டு வீச்சு விமானங்கள் 2,000 பவுண்ட் எடையுள்ள பல குண்டுகளை போட்டுள்ளன.

இதன் காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் ஈரானின் ஏவுகணைத் தாக்குதல் 90 சதவீதம் குறைந்துள்ளது, ட்ரோன் தாக்குதல் 83 சதவீதம் குறைந்துள்ளது. வரும் நாட்களில் ஈரான் மீதான விமான தாக்குதல் தீவிரமடையும். இவ்வாறு பிராட் கூபர், பீட் ஹெக்சேத் ஆகியோர் கூறினர்.

ஈரானில் அமெரிக்க ராணுவ வீரர்களை இறக்கினால் பேரழிவாக இருக்கும் என ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி தெரிவித்தார். இது குறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறுகையில், "ஈரானில் ராணுவத்தை இறக்குவது நேரத்தை வீணடிப்பது போன்றது" என்றார்.

## ‘ஈரானில் ஒரு வாரத்தில் 3,000+ இலக்குகளை தாக்கியுள்ளோம்’ - அமெரிக்க ராணுவம் தகவல்

**வாஷிங்டன், மார்ச் 8:**

கடந்த வாரத்தில் ஈரானில் உள்ள 3000+ இலக்குகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்பதை அமெரிக்க ராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க ராணுவம் தரப்பில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில், ‘ஆபரேஷன் எபிக் ஃப்யூரி’யின் மூலம் முதல் வாரத்தில் அமெரிக்கப் படைகள் 3,000-க்கும் மேற்பட்ட இலக்குகளைத் தாக்கியுள்ளன. நாங்கள் எங்கள் வேகத்தைக் குறைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், “நிபந்தனையற்ற சரணடைதலைத் தவிர ஈரானுடன் எந்த ஒப்பந்தமும் இருக்காது. எந்தவொரு ராஜதந்திர பேச்சுவார்த்தைகளும் தொடரும் முன் ஈரான் சரணடைய வேண்டும். அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகள், குறிப்பாக இஸ்ரேலும், ஈரான் நாட்டின் தலைமை முழுமையாக மாற்றப்பட்டு சிறந்த மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரே ஈரானுடன் ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்து பரிசீலிப்போம்” என்று ட்ரூத் சமூக வலைதளத்தில் வலியுறுத்தினார்.

மேலும், “ஈரானில் ஒரு சிறந்த மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, நாங்களும், எங்கள் துணிச்சலான கூட்டாளிகளும், ஈரானை அழிவின் விளிம்பிலிருந்து மீட்டெடுக்க அயராது பாடுபடுவோம். இது பொருளாதார ரீதியாக முன்பை விட பெரியதாகவும், சிறந்ததாகவும், வலிமையாகவும் ஈரானை மாற்றும். ஈரான் ஒரு சிறந்த எதிர்காலத்தைக் கொண்டிருக்கும். ‘ஈரானை மீண்டும் பெரியதாக்குங்கள் (MIGA!)” என்று அவரது பதிவில் கூறப்பட்டுள்ளது.

## வளைகுடா நாடுகள் மீதான தாக்குதலுக்கு மன்னிப்புக் கோரிய ஈரான் அதிபர் கூறியது என்ன?

**தெஹ்ரான், மார்ச் 8:**

அண்டை நாடுகள் (வளைகுடா நாடுகள்) மீதான தாக்குதலுக்கு மன்னிப்புக் கோரிய ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன், அண்டை நாடுகளைத் தாக்க வேண்டாம் என்று தங்களது தற்காலிக தலைமைத்துவக் குழு முடிவு செய்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

ஈரான் அரசு தொலைக்காட்சியில் உரையாற்றிய பெசெஷ்கியன், “அண்டை நாடுகளிடம் நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். மற்ற நாடுகளை ஆக்கிரமிக்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை. ஈரானுக்கு எதிராக அந்த நாடுகளில் இருந்து தாக்குதல்கள் தொடங்கப்படாவிட்டால், அண்டை நாடுகள் மீது இனி தாக்குதல்கள் இருக்காது அல்லது ஏவுகணை ஏவுதல்கள் இருக்காது என்று தற்காலிக தலைமைத்துவக் குழு முடிவு செய்து அறிவித்துள்ளது. அதேநேரத்தில், நாங்கள் நிபந்தனையின்றி சரணடைவது என்ற அமெரிக்காவின் கனவுகளை அவர்கள் கல்லறைக்கு எடுத்துச் செல்வார்கள்” என்றார்.

இஸ்ரேலும் அமெரிக்காவும் ஈரான் மீது வான்வழித் தாக்குதல்களைத் தொடர்ந்ததால், இன்று (மார்ச் 7) அதிகாலை வளைகுடா அரபு நாடுகளை குறிவைத்து ஈரானால் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், இந்த கருத்துகள் வந்தன. இன்று காலை பஹ்ரைன், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மீது மீண்டும் மீண்டும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. நிபந்தனையற்ற சரணடைதல் இல்லாமல் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டேன் என்று ட்ரம்ப் கூறியதைத் தொடர்ந்து, அமெரிக்க அதிபர் ட்ரம்பின் நிர்வாகம் இஸ்ரேலுக்கு 151 மில்லியன் டாலர் புதிய ஆயுத விற்பனையை அங்கீகரித்ததும் குறிப்பிடத்தக்கது. முன்னதாக, அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து கடந்த பிப்ரவரி 28-ம் தேதி ஈரான் மீது வான்வழி தாக்குதலை தொடங்கின. இதில், ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி உட்பட சுமார் 50 உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இதையடுத்து, இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படைத் தலங்கள் அமைந்துள்ள வளைகுடா நாடுகள் மீது ஈரான் தொடர்ந்து வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படைகள் தக்க பதிலடி கொடுத்து வருகின்றன. இந்தச் சூழலில், ஈரான் அதிபரின் பேச்சு இப்போது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## இந்தியர்கள் மிகவும் நல்ல நடிகர்கள் - அமெரிக்க மந்திரி சொல்கிறார்

**வாஷிங்டன், மார்ச் 8:**

ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பு தெரிவித்து இந்திய பொருட்கள் மீதான வரியை 50 சதவீதமாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உயர்த்தினார்.

அதன்பின் இந்தியா - அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் எட்டப்பட்டதால் இந்தியா மீதான வரி 18 சதவீதமாக குறைக்கப்பட்டது. மேலும் ரஷிய எண்ணையை வாங்குவதை இந்தியா குறைத்துவிட்டது என்று டிரம்ப் தெரிவித்தார். இதற்கிடையே ஈரான் மீது அமெரிக்கா தொடுத்துள்ள போர் காரணமாக எரிசக்தி தட்டுப்பாட்டை தவிர்க்க ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணையை 30 நாட்களுக்கு இந்தியா கொள்முதல் செய்து கொள்ளலாம் என்று அமெரிக்கா அறிவித்தது. இந்தநிலையில் அமெரிக்க கருவூலத்துறை மந்திரி ஸ்காட் பெசென்ட் அளித்த பேட்டியில் கூறியதாவது:- உலகில் எண்ணை நன்றாக விநியோகிக்கப்படுகிறது. நேற்று எங்கள் நட்பு நாடான இந்தியா ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணை வாங்க அமெரிக்க கருவூலத்துறை ஒப்புதல் அளித்தது. இந்தியர்கள் மிகவும் நல்ல நடிகர்களாக உள்ளனர். சில நாட்களுக்கு முன்பு ரஷிய எண்ணையை வாங்குவதை நிறுத்துமாறு நாங்கள் அவர்களிடம் கேட்டிருந்தோம். அதை அவர்கள் செய்தார்கள் அமெரிக்காவிடம் இருந்து எண்ணை வாங்க முடிவு செய்தனர். ஆனால் உலகெங்கிலும் உள்ள தற்காலிக எண்ணை விநியோக பாதிப்பால் ரஷிய எண்ணையை வாங்கி கொள்ள நாங்கள் இந்தியாவுக்கு அனுமதி வழங்கி உள்ளோம். மற்ற ரஷிய எண்ணை மீதான தடையை நாங்கள் ரத்து செய்யலாம் என்றார்.

## உலகளவில் பெட்ரோல் - டீசல் தட்டுப்பாடு அபாயம்

**வாஷிங்டன், மார்ச் 8:**

மத்திய கிழக்கில் போர் நடந்து வரும்வேளையில் முக்கிய கடல் போக்குவரத்தான ஹோர்முஸ் ஜலசந்தியை ஈரான் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

ஜலசந்தியை அமெரிக்கா - இஸ்ரேலை சேர்ந்த கப்பல்கள் கடக்க முயன்றால் தாக்குதல் நடத்துவோம் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் ஹோர்முஸ் ஜலசந்தி மற்றும் வளைகுடா கடல் பகுதியில் ஏராளமான கப்பல்கள் புறப்பட முடியாமல் தவித்து வருகின்றன.

இதனால் பல நாடுகளுக்கு கச்சா எண்ணை விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பல்வேறு நாடுகளில் பெட்ரோல் - டீசல் தட்டுப்பாடு அபாயம் ஏற்படும் சூழல் நிலவுகிறது. ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் எண்ணை விநியோகத்தை நம்பியுள்ள பாகிஸ்தானில் நள்ளிரவில் பெட்ரோல் -டீசல் விலை அதிரடியாக உயர்த்தப்பட்டது. பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.266.17-ல் இருந்து ரூ.321.17 ஆக உயர்த்தப்பட்டது. இது சுமார் 17 சதவீதம் அதிகரிப்பு ஆகும். டீசல் லிட்டருக்கு ரூ.280.8-ல் இருந்து ரூ.335.86 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாட்டில் போதுமான பெட்ரோலிய இருப்பு உள்ளது என்று பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

## ஈரான் மீது அமெரிக்க படைகள் மிகக் கடுமையான தாக்குதல் நடத்தும் டிரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன், மார்ச் 8:**

ஈரானுக்கும், அமெரிக்காவுக்கும் இடையேயான அணு ஆயுத பேச்சுவார்த்தையில் முன்னேற் றம் ஏற்படாத நிலையில், அந்த நாட்டின் மீது கடந்த 28-ந் தேதி அமெரிக்கா திடீர் தாக்கு தலை நடத்தியது.

இஸ்ரேலுடன் சேர்ந்து நடத்திய இந்த ராணுவ அதிரடியில் ஈரானின் உச்சபட்ச தலைவர் அய துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். இதனால் வெகுண்டெழுந்த ஈரான், இஸ்ரேலையும், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க படைத்தளங்களையும் தாக்கி வருகிறது.

வளைகுடா பிராந்தியம் மட்டுமின்றி ஒட்டுமொத்த உலகையும் உலுக்கி வரும் இந்த போர், நேற்றுடன் ஒருவாரத்தை நிறைவு செய்து விட்டது. 8-வது நாளான இன்றும் இரு தரப்பும் தாக்குதலை தீவிரப்படுத்தி இருக்கின்றன.

இந் நிலையில், ஈரான் மீதான தாக்குதலை நம்ப முடியாத வகையில் அதிகரிக்கப்போவதாக அமெரிக்கா அறிவித்து உள்ளது. ஈரான் மீது அமெரிக்க படைகள் மிகக் கடுமையான தாக்குதல் நடத்தும் என ஜனாதிபதி டிரம்ப் அறிவித்துள்ளார்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய கிழக்கு நாடுகளிடம் ஈரான் சரணடைந்துள்ளது. அரபு நாடுகளை இனி தாக்க மாட்டோம் என்ற ஈரான் அறிவிப்புக்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் எதிர்வினை ஆற்றி உள்ளார். இதனிடையே மத்திய கிழக்கு பகுதிக்கு அமெரிக்கா மேலும் ஒரு மிகப்பெரிய போர்க்கப்பலை அனுப்பி உள்ளது.

## மேற்காசிய போரில் முக்கிய திருப்பம்: ஈரானுக்கு உதவும் ரஷியா

**மாஸ்கோ, மார்ச் 8:**

மத்திய கிழக்கில் நடந்து வரும் போரில் அமெரிக்க ராணுவ தளங்கள், போர்க்கப்பல்கள், மற்றும் விமானங்களை தாக்க ஈரானுக்கு உளவுத்துறை தகவல்களை ரஷியா வழங்கி வருவதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

போர் தொடங்கியதில் இருந்து அமெரிக்க போர்க்கப்பல்கள், விமானங்கள் மற்றும் பிற ராணுவ சொத்துக்கள் அமைந்துள்ள இடங்கள் குறித்த தகவல்களை ஈரானுடன் ரஷியா பகிர்ந்து கொண்டுள்ளதாக 3 அமெரிக்க அதிகாரிகள் கூறியதாக தி வாஷிங்டன் போஸ்ட் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ரஷியாவின் ஆதரவின் அளவு முழுமையாக தெளிவாக இல்லை என்றும் ஆனால் அமெரிக்க படைகளை கண்காணிக்கும் ஈரானின் சொந்த திறன் குறைக்கப்பட்டு விட்டது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கிடையே ரஷிய அதிபர் புதின் ஈரான் அதிபர் மசூத் பெஷேஷ்கியனுடன் தொலைபேசியில் பேசினார். இதில் போர் தொடர்பாக ஆலோசனை நடத்தினர்.

அப்போது ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமெனி. அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்களின் மறைவுக்கு புதின் இரங்கல் தெரிவித்தார்.

விரோதங்கள் உடனடியாக முடிவுக்கு வர வேண்டும். பேச்சுவார்த்தையில் தீர்வு காணப்பட வேண்டும் என்று புதின் வலியுறுத்தினார். என்று கிரெம்ளின் மாளிகை தெரிவித்தது.

மேலும் இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் தொடர்ந்து தொடர்பு கொள்ள ஒப்புக்கொண்டு உள்ளன என்றும் தெரிவித்தது. இந்த உரையாடலில் ரஷியாவின் ஆதரவிற்கு பெஷேஷ்கியன் நன்றி தெரிவித்தார்.

## ‘பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்தும்’ மார்ச் 21-ம் தேதியை குறித்து கொடுத்த பெண் ஜோதிடர்

**புதுடெல்லி, மார்ச் 8:**

ஈரானை இஸ்ரேல் தாக்கியதை தொடர்ந்து பாகிஸ்தான் மீது இந்தியா மார்ச் 21-ம் தேதி தாக்குதல் நடத்தும். ஒன்றிரண்டு மாதங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை சேமித்து வைத்துக் கொள்ளுங்கள் என்று பெண் ஜோதிடர் ஒருவர் கூறியுள்ள கருத்து வைரலாகி வருகிறது.





ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் தாக்குதல் நடத்தி வருகின்றன. பதிலுக்கு ஈரானும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. அத்துடன் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனால் மத்திய கிழக்குப் பகுதி முழுவதும் மக்கள் பீதியில் உள்ளனர். இந்நிலையில், ஈரானை அடுத்து பாகிஸ்தான் மீதுதான் தாக்குதல் நடக்கும். அதுவும் இந்தியா தாக்குதல் நடத்தும் என்று பெண் ஜோதிடர் ஒருவர் கணித்துள்ளார். இதுகுறித்து அவர் இணையதளத்தில் வெளியிட்ட வீடியோ வைரலாக பரவி வருகிறது. தன்னை வேத ஜோதிடர் என்றும் வாஸ்து நிபுணர் என்றும் அறிமுகப்படுத்திக் கொள்ளும் அந்த பெண் வீடியோவில் கூறியிருப்பதாவது: கிரகங்களின் நிலை கிரகங்களின் நிலைகளை கணக்கிட்டுப் பார்க்கும் போது, மார்ச் 21-ம் தேதி பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்தும் என்று தெரிகிறது. எனவே, கையில் ரொக்கப் பணம், மருந்துகள், சூரிய மின்சக்தி சார்ஜர்கள், உணவுப் பொருட்களை ஒன்றிரண்டு மாதங்களுக்குத் தேவையான அளவுக்கு சேமித்து வைத்துக் கொள்ளுங்கள். மார்ச் 21-ம் தேதி பாகிஸ்தானை ஒரு பக்கம் ஆப்கானிஸ்தான் சுற்றி வளைக்கும். மறு பக்கம் இந்தியா தாக்குதல் நடத்தும். ரம்ஜான் முடிந்து மார்ச் 19-ம் தேதி நவராத்திரி தொடங்குகிறது. மார்ச் 21-ம் தேதி கிரகங்களின் நிலைகளைக் கணக்கிடும் போது தாக்குதலுக்கான கூறுகள் தென்படுகின்றன. துர்காவின் சக்தி இந்த தேசத்துடன் இருக்கும். அத்துடன் பிரதமர் மோடியின் மங்கள மகாதசை மற்றும் கிரகங்களின் நிலை ஆகியவை தாக்குதலுக்கு தூண்டுகோளாக அமையும். எனவே, மார்ச் 21-ம் தேதி வாழ்க்கையில் மறக்க முடியாத நாளாக அமையபோகிறது.

இவ்வாறு அந்தப் பெண் ஜோதிடர் கூறியுள்ளார்.



# பாஜகவின் கட்டுப்பாட்டில் அதிமுக சென்றுவிட்டது

## மாதம் ரூ.2.500 திருமணத்துக்கு ஒரு பவுன்



## கோவை கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் 3 பேருக்கு சாகும் வரை சிறை தண்டனை

## இளம் பெண்களை குறிவைக்கும் மார்பக புற்றுநோய்

## வார ராசிபலன்கள்

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 08.03.2026 ஞாயிற்றுக்கிழமை இலவச இ–பேப்பர்